Registered as a Newspaper

பக்கம் -20 விலை 12/=

# தமிழ்அலை

வாரமலர் TAMILALAI

அலை - 01 சனிக்கிழமை, 18-10-2003 ஓசை -29


## முரண்படும் இன உணர்வுகள்



## பேனா முனைக்கு வேட்டு !





## புலப்படும் கொலை எச்சங்கள்!

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

தமிழ் அலை
வாரமலர் Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110.
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
18.10.2003

## இரு தலைமைகளும் இணைய வேண்டும்.

ஜனாதிபதி -பிரதமருக்கிடையேயான அதிகாரப் போட்டி தற்போதுமிக வேகமாக அதிகரித்து வருகின்றது. ஐ.தே.கட்சி ஆட்சியமைத்ததும் அரசியல் யாப்பு விவகாரம் நாட்டை ஆளும் உரிமையைப் பெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான அதிகாரப் போராட்டம் ஆரம்பத்தில் பெரிதாகத் தென்படவில்லை. எனினும் விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டபின்னர் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான உறவுகள் விரிசலடையத் தொடங்கியமை கண்கூடு.

புலிகளுடனான சமாதான முயற்சிகள் ஒவ்வொன்றிலும் பிரதமர்கள் அடி எடுத்து வைத்த சந்தர்ப்பங்களில் அதனை விமர்சிக்கும் தன்மையை ஜனாதிபதி கொண்டிருந்தார்.

ஒரு பரீட்சாத்தமாக தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பெடுத்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதிக்கு எதிராக அரசு பலமான குற்றச் சாட்டுக்களை சுமர்த்தியிருந்தது.

அரசு புலிகளுக்கிடையிலான பேச்சுக்கள் கூட இதனால் பாதிக்கப்படும் என ஐ.தே.கட்சி அரசு அறிக்கைகள் விட்ட போதும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதிலும் திடீர் என்று இறங்கவில்லை. தற்போது பொலிஸ்மா அதிபர் பதவிக்கு யாரை நியமிப்பது எனும் விவகாரம் இரு தரப்பினரிடையேயும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசாவை சேவை நீடிப்புச் செய்யுமாறு அரசு முன்வைத்த யோசனையை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாத நிலையில் பதவிதுறந்தார்.

சேவை அடிப்படையில் உள்ள உப பொலிஸ்மா அதிபர்கள் ஒருவரை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஜனாதிபதியால் கைகூடவில்லை. அரசு அதற்கு ஆணை வழங்கவில்லை. இதனையடுத்து ஜனாதிபதியும் பிரதமரும் நேருக்கு நேர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இது வரவேற்புக்கூரியது.

வெறும் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் மட்டும் இரு தலைவர்கள் கலந்துரையாடினால் மட்டும் போதாது. தற்போதுள்ள தமிழர்கள் உரிமைக்காக விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பதற்கு வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபைக்குக் கூடிய அதிகாரப் பகிர்வு செய்வதற்கு இரு தலைவர்களும் கலந்தாலோசனைகள் நடத்துவது அவசியமானது. எனவே இனி மேலாவது இரு தலைவர்களும் கலந்தாலோசனை, கருத்துப் பரிமாற்றம் போன்றவற்றை மேற்கொண்டு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

# துப்பாக்கி முனையில் பறிக்கப்பட்ட ஊடக சுதந்திரம்!

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமல்ராஜன் படுகொலை செய்யப்பட்டு நாளை (19. 10. 03) மூன்று வருடங்கள் நிறைவு பெறுகின்றன. பேனா முனையில் தனது கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிட்ட அவரின் வாழ்வு துப்பாக்கி முனையில் பறிக்கப்பட்டது குறித்து பல்வேறு பொது அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல சர்வதேச ஊடக அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்த நிலையிலும் நீதி விசாரணைகள் மந்தகதியிலேயே இடம் பெற்று வருகின்றன.

சந்திரிகா அம்மையார் தலைமையில் பதினோராவது பாராளுமன்றத்தின் அமைச்சரவை பதவியேற்ற அதே தினத்தன்று வட புலத்தின் துணிச்சல் மிகு பத்திரிகையாளரின் வாய் மௌனிக்கச்செய்யப்பட்டது. யுத்த சூழலில் யார் உண்பதற்காக மட்டும் வாயைத் திறந்த வேளை நிமலராஜன் மனித உரிமை மீறல்களை, யுத்தக் கொடுமைகளை ஜனநாயகம் என்ற போர்வையில் அரங்கேற்றப்பட்ட அநியாயங்களை துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்தார். இதனால் தேச விரோத சக்திகள் அவரை அழிப்பதன் மூலம் உண்மையைப் புதை குழியிலிட்டு புதைக்கலாமென எண்ணியதன் விளைவு இன்று நிமலராஜன் எம்மோடு இல்லை.

நிமலராஜன் அவர்களின் மூன்றாவது நினைவு தினம் போர்நிறுத்தச் சூழலில் நினைவு கூறப்படுகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஊடகவியலாளர் அமைப்புக்களும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

மயில்வாகனம் நிமலராஜன் 5. 6. 1961ல் மயில்வாகனம் லில்லி திரேஸ் தம்பதிகளின் புதல்வராக கொழும்பில் பிறந்தார். யாழ் இந்துக் கல்லூரி, ராஜகிரிய றோ.க.த.க பாடசாலை, பம்பலப்பிட்டி றோ.க.த வித்தியாலயம், யாழ் வைத்திஸ்வரா வித்தியாலயம் இரத்மலான இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவனும் ஆவார்.

பரிமளகாந்தியை 17. 12. 1994ல் கரம் பிடித்த நிமலராஜன் தம்பதிகளுக்கு நிவேதா, நிசாந்தி, நிலக்சனா ஆகிய பெண் குழந்தைகள் பிறந்தன. கொழும்பு நகரில் தந்தையின் தொழில் நிமித்தம் தங்கியிருந்த நிமலராஜன் 1983 கறுப்பு யூலையைத் தொடர்ந்து யாழ் மண்ணை அடைந்தார்.

மயில்வாகனம் நிமலராஜன் ஊடகப் பிரவேசம் எதிர்பாராத நிகழ்வு விளம்பர சேகரிப்பாளராக, விநியோகப் பொறுப்பாளராக முரசொலி , ஈழநாதம் பத்திரிகைகளில் பணி புரிந்த அவர் கடமை நிமிர்த்தம் பல இடங்களுக்கும் சென்ற போது கண்டவற்றை, கேட்டவற்றை செய்தியாக்கினார். பல ஊழல்களை அம்பலப்படுத்தினார். அவரது ஆற்றலை இனங் கண்ட முரசொலி ஆசிரியர் பீடம் செய்தியாளராக நியமித்தது. 1990 களைத் தொடர்ந்து யாழ் மண்ணை விட்டு பல ஊடகவியலாளர்கள் இடம் பெயர்ந்தமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதில் நிமலராஜன் பங்கு குறிப்பிடத்தக்கது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை அடுத்து பி.பி.சி, ஐ.பி.சி போன்ற சர்வதேச வானொலிகளினூடாகவும் தனது சேவையை விஸ்தரித்தார். அத்தோடு ராவய, ஆதவன், வீரகேசரி, சூரியன் எவ். எம். , சுவர்ணஒலி, போன்ற ஊடகங்களுக்கும் தன்னை இணைத்துக் கொண்டார். சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் குடாவில் இடம் பெற்ற இராணுவ நெருக்கடிகள் முதல் செம்மணி விவகாரம் வரை பல விடயங்கள் சூடு பிடிப்பதற்கு நிமலராஜனும் முக்கியபங்கை ஆற்றினார்.



நிமலராஜன் கொலையையடுத்து உரிய விசாரணைகளை மேற் கொள்ளுமாறு விடுத்த வேண்டுகோள்கள் சந் திரிகா ஆட்சியால் புறக்கணிக்கப்பட்டபோதிலும் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து விசாரணைகள் மந்தகதியிலாவது இடம் பெற்று வருகின்றது. சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நால்வர் இதுவரை கைது செய்யப்பட்டு மேலும் மூவர் பிணையில் விடப்பட்ட நிலையில் ஒருவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நீதி மன்றத் தீர்ப்பு உண்மையான குற்றவாளிகளைப் பகிர ங்கப்படுத்துமென நம்பப்படுகிறது.

அமரர் நிமலராஜன் தான் நேசித்த கொள்கைக்காக பக்கசார்பற்ற செய்தியாளராகச் செயற்பட்டார். அவரை புதை குழிக்கு அனுப்பி விடுவதன் மூலம் தமிழ் ஊடகத் துறையை மௌனிக்கச் செய்யலாம் என்ற கனவு நனவாகாத நிலையில் நிமலராஜன் அவர்களின்

**ஜி. நடேசன்**

மூன்றாவது நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரை இன்று தமிழ் ஊடகவியலாளர்கள் பல்வேறு பிரச்சினைகள், நெருக்கடிகள், பழிச் சொல்களுக்கு மத்தியில் கடமை புரிந்து வருகிறார்கள். தமிழ் அரசியல் வாதிகள் விடுதலைப் போராட்டத்தின் துணைச்சக்திகளாகச் செயற்பட வேண்டிய கடமைப்பாட்டை மறந்தவர்களாக உள்ளனர். தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை, தர்மத்தை உரைக்க வேண்டிய கட்டுப்பாட்டை புறந்தள்ளியவர்களாக உள்ளனர். விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும், அசிங்கப்படுத்தும் பேரினவாத சக்திகளின் அவதூறான பிரசாரங்களுக்குப் பதிலடி கொடுக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்றுவதில்லை.

இந்த நிலையில் தமிழ் ஊடகவியலாளர்களின் பொறுப்பு செய்திக் கடமைகளுக்கு அப்பால் விரிந்துள்ளது. உண்மையான, நேர்மையான பிரசாரங்களை முன் வைக்கும் போது பக்க சார்பானவர்கள் இனவாதிகள் என்று மட்டுமல்ல ''புலி'' முத்திரையும் குத்தப்படுகின்றார்கள். இத்தகைய ஒரு சூழலிலே நிமலராஜனின் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் இப்போது முக்கிய திருப்பு முனையில் உள்ளது. புத்திஜீவிகள், அரசியல் வாதிகள் ஊடகத் துறை சார்ந்தவர்கள் சட்டத்தரணிகள், கல்விமான்கள் என அனைத்து தரப்பினரும் சிந்தித்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை நிமலராஜனின் நினைவு நாளிலாவது உணர வேண்டும். ஊடகவியலாளர்களின் தலையில் சுமத்தப்பட்ட சுமையை இறக்கி அனைவரும் தமது பங்கை ஆற்ற வேண்டும்.

தமிழ் ஊடகத் துறையை அமுக்குவதற்கு முற்பட்ட சக்திகள் இன்று தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அவதூறு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். அண்மையில் கொழும்பு நகரில் மூத்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் வைபவத்தில் தமிழ் ஜனநாயக ஊடகவியலாளர் என்ற பெயரில் பிரசுரம் ஒன்றை விநியோகித்தார்கள். அதில் பல்வேறு தமிழ் இயக்கங்களாலும் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்ட போதிலும் நிமலராஜன் கொலை பற்றி குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் பிரசுரத்தின் சூத்திரகாரி யார் என்பது இனங் காணப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களின் ஆயுதம் பேனா முனையே அதனை துப்பாக்கி முனையால் அடக்குவதற்கு முனையக் கூடாது.

போர்ச் சூழலிலும் மனித உரிமை மீறல்கள் வெளிக்கொணரப்படுவதற்கு தமிழ் ஊடகத் துறையின் மூச்சு நீடித்து நிலைப்பதே முக்கிய காரணமாகும்.

தமிழ் ஊடகத்துறை சுதந்திரமாக இயங்க அனைத்து தரப்பினரும் ஒத்தாசை வழங்குவதே ம. நிமலராஜன் இவர்களுக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.



நிலம் எங்களுடையது. ஆயுதங்கள் உங்களுடையது. கிழக்கு எங்களுடையது. வடக்கு எங்களுடையது. முழு நாடுமே எங்களுடையது. *சிங்கள இனவாதக்கட்சியான சிகல உறுமய திருமலை குரங்குப் பாஞ்சான் நோக்கிய பயணத்தின் போது கக்கிய உணர்வுகள்.*



உரிமையாளனை எங்கோ இருந்து வந்து வந்தோட்டி, வரத்தோட்டி, வளவுக்குள் புகுந்து துரத்துவது போல் தான் சிஹல உறுமய கட்சியின் சிங்களக் கட்சிகளே வடக்குக் கிழக்கைப் பிரித்து விட்டது.

இப்போது எல்லையில் தான் பிரச்சினை நடக்கின்றது என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை மன்னாரில் நடைபெற்ற பொங்கு தமிழ்

எங்களுடையது என சிஹல உறுமய கூறும்போது எங்கள் நிலமே எமக்கு வேண்டும். நீங்கள் உங்கள் வீடுகளுக்குப் போங்கள் எனக் கூறுவதிலிருந்து தமிழினம் சிங்கள தேசத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் கேட்கவில்லை. தமிழினத்தின தாயகத்தை மட்டும் தான் உரிமையுடன் வலியுறுத்துகின்றன. என்பது மட்டும் உண்மை.

சிங்கள பேரினவாதக்கருத்தை விதைக்கும் கட்சிகள் தங்களை வலிமைப்

# முழு நாடுமே எங்களுடையது!

# எங்கள் நிலமே எமக்கு வேண்டும்

**நி**லம் எங்களுடையது. ஆயுதங்கள் உங்களுடையது. கிழக்கு எங்களுடையது. வடக்கு எங்களுடையது. முழு நாடுமே எங்களுடையது. இவை சிங்கள இனவாதக்கட்சியான சிஹல உறுமய திருமலை குரங்கு பாஞ்சான் நோக்கிய பயணத்தின் போது கக்கிய உணர்வுகள்.

அந்த ஒவ்வொரு வார்த்தைகளையும் ஆழமாகச் சிந்தித்தால். தமிழினம் தமது தாயக உரிமையை பேச்சுக்கள் மூலம் பேசி இலகுவில் பெற்றுக் கொள்வது என்பது கடினமான காரியம்தான்.அதற்கு சிங்கள தேசத்தின் பேரினவாதக் கட்சிகள் ஒவ்வொன்றும் விட்டுக் கொடுக்காது என்பது தற்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

நடவடிக்கைகள் அமைந்திருந்தது என தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எவ்வளவோ கூறியும் ''செவிடன் காதில் ஊதிய சங்கு போல '' எதையும் கேட்காது,சிஹல உறுமயக்கட்சியின் பேரணி கடந்த ஒக்டோபர் 14ம் திகதி நடைபெற்றது. கட்சியின் ஆதரவாளர்கள் எனக் கூறிக் கொள்ளும் இனவாதப் போக்குடையவர்களும், அதே கருத்தை ஆதரிக்கும் பிக்குகளும் ஒன்றிணைந்து கொழும்பிலிருந்து வாகனங்களில் புறப்பட்டனர்.

இந்தப் பேரணியில் 150 பிக்குகளும் 3 பிறசிஹல உறுமய கட்சியினரும் அடங்கியிருந்தனர். சிஹல உறுமயக் கட்சியின தலைவர் திலக்கருணாரத்தின தலைமையில் 14 வாகனங்களில்

## முரண்படும் இன உணர்வுகள்




நிலம் எங்களுடையது. வடக்கு எங்களுடையது. கிழக்கு எங்களுடையது. முழு நாடுமே எங்களுடையது என்றால் தமிழினம் வந்தேறு குடிகளா? டிக்கிரி பண்டா விஜயதுங்கா ஒரு நாள் தமிழினத்தை மரம் செடி கொடிகள் என வர்ணனை

எங்களுடைய நாடு தமிழீழமே, எங்கள் நிலம் எமக்கு வேண்டும் நாங்கள் எங்கள் வீட்டுக்கு போகிறோம் நீங்கள் உங்கள் வீட்டுக்கு போங்கள்.

*இது மன்னார் பொங்கு தமிழில் பொங்கிய உணர்வலை.*


படுத்துவதற்கு இரு. வழிகள் உள்ளன. ஒன்று சமாதானத்தை வலியுறுத்துவது மற்றது விடுதலைப்புலிகளை விமர்சித்து.

**- (வேணுகோபால்) -**

இனவாதக் கருத்துக்களை தெரிவிப்பதுமேயாகும். தற்போது அனேகமான சிங்களக் கட்சிகள் சமாதானத்தை எதிர்ப்பதிலும் தம்மை பிரபல்யப் படுத்தி அரசியல் இருப்பை பலமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்வதால் சிங்கள மக்கள் இத்தகைய சக்திகளுக்கு உள்வாங்கப்பட்டு மீண்டும் ஒரு போர் உருவாவதற்கு துணை போகக் கூடாது என்பது தான் அனைவரதும் அவாவாகும்.



நிகழ்வில், தமிழினம் தாயக உரிமையை மீள வலியுறுத்தி யுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும். எங்கள் தலைவன் பிரபாகரன்,

செய்திருந்தார். அதை ஆமோதிப்பது போல சிஹல உறுமய கட்சியின் கருத்துக்கள் காணப்படுகின்றன.

கடந்த 1987ம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையடுத்து இந்தியப்படையினர் இலங்கைக்கு வந்தகாலகட்டத்தில் குரங்குப் பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் இருந்துள்ளனர் என்பது உண்மை.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயகப்பிரதேசம் தமிழ் மக்களின் ஆளும் உரிமை அவர்களுக்கே இருக்கிறது. இதில் தென்னிலங்கை கட்சி ஒன்று தலையிட்டு அதிகாரம் செலுத்த முற்படுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை விதைப்பதும் ஜனநாயக மரபுகளை குழி தோண்டிப்புதைக்கும் செயலாகும். சொந்த நிலத்தில் குடியிருக்கும் வீட்டு

புறப்பட்டு சென்ற இவர்கள் தம்பலகாமம் தமிழ்ப் பிரதேசத்தினூடாக சென்று கொண்டிருந்தபோது கல்வீச் சுக்கிலக்காகினர்.

அதனைக் கடந்து சூரன்கல் சிறிலங்கா படை முகாமை அண்மித்த போது சிறிலங்காப் படையினர் அவர்களை அப்பால் செல்ல முடியாதவாறு தடுத்தனர்.

இறுதியில் படைத்தரப்புடன் வாக்குவாதப்பட்டுவிட்டு சிஹல உறுமய பேரணியினர் கொழும்பு திரும்பினர்.

உண்மையில் சிஹல உறுமய கூறுவது போல் வடக்கு, கிழக்கு சிங்கள மக்களுடையது என்றால் ஏன் குரங்குபாஞ்சான் விடயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்? ஆனால் தமிழினம் வடக்கு, கிழக்கை பிரிக்க சூழ்ச்சி செய்கிறது. எனச் சிங்கள தரப்பு கூக்குரல் இடும் போது ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்.

சூரியத் தேவன் பிரபாகரன், எங்களுடைய நாடு தமிழீழமே, எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போகிறோம், நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போங்கள். இது மன்னார் பொங்கு தமிழில் பொங்கிய உணர்வலைகள்.

முத்துவிளையும் வங்கக் கடல், பொங்கி மோதி ஓசை எழுப்ப மழையையும் பாராது மக்கள் பொங்கி எழுந்து கொண்டாடிய உணர்வுகள் மழையுடன் மழையாய் பொங்கி எழுந்தன. தமிழினத்தின் தாயக உரிமையின் வீரியத்தை தேசியத் தலைவன் மீது தமிழ் இனம் கொண்டுள்ள பற்றுதலை எழுச்சியுடன்எடுத்துக் காட்டியது.

இவ்விடத்தில் சிஹல உறுமயவின் கருத்தொன்றை ஆராய வேண்டியது முக்கியமானதாகும். வடக்கு எங்களுடையது, கிழக்கு எங்களுடையது, முழு நாடுமே

## போடியார் பொறிவெடி

**மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் வேலை கேட்டு ஊர்வலம்.**

**~செய்தி**



ஊர்வலமும், உண்ணாவிரதமுந்தான் பட்டதாரிகள் பதவி எடுக்கிறத்துக்கு இஞ்ச அடிப்படை ''குவாலிக்கேஷன்'' போல....

**''போய்ஸ்'' என்ற தமிழ்த் திரைப்படம் கலாசாரத்தைச் சீரழிப்பதாக ஊதிப் பெருப்பித்தவர்கள், வர்த்தக மையப் பிரதேசத்திலுள்ள திரையரங்கு ஒன்றில் கூடுதலாக ''வயது வந்தவர்கள் மட்டும்'' வகைத் திரைப்படங்கள் திரையிடுவதைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லையே ஏன்?**

# முறியடித்தாக வேண்டிய பண்பாட்டு ஆக்கிரமிப்பு

''உலகம் வல்லவர் கையில் உருள்கிறது.
அவர்கள் எப்போதும் கெட்டிக்காரர்கள்.
தங்களுக்குத் தேவையெனில்
தலைவாரச் சீப்புத் தருவார்கள்.
பளபளப்பான பவுடர் தருவார்கள்.
வடிவுக்குரியன தந்து வசமாக்கி விடுவர்.
U.N.O தொடக்கம்
U.S.A வரையும் இது தான் மரபு.
நீ நீயாக நிமிர நிச்சயம் விடமாட்டார்.
அலங்கார கண்ணாடி முன்னே
மயங்க மாட்டாய் என்பது தெரியும்.
ஆயினும் கலக்கமாக இருக்கிறது
எனக்கு....''

தேச விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், ''அமைதி'' அடையாளத்துடன் அலுவல்களை அக்கறை செலுத்த ''பலரும்'' முனைகின்ற வேளையில், ''உலைக்களம்'' ஊடாக ''வியாசன்'' இவ்வாண்டு ஆரம்பத்தில் உரைத்த சில வரிகளினூடு இவ்வாரக் கட்டுரையை ஆரம்பிக்கின்றோம். ''பூச்சூடியதற்குப் பெருமைப்படு, முடி சூடுவதற்கு முன்னேறு'' என்ற அக் கவிதையின் சில வரிகள் இவ்விடத்தில் எடுத்தாளப்படுவதன் தேவை தான் என்ன? ''மாயமான்கள்'' பொன்னிறத்தில் மட்டுமன்றி பல் நிறங்களிலும் கவர்ந்திழுக்க முற்படும் அவலத்தை அசட்டை செய்யாதிருக்க, விழிப்புணர்வை உண்டு பண்ணவே இக் கட்டுரை விளைகிறது.

நாம் மீண்டும் மீண்டும் அழுத்தியுரைக்கின்ற மிகச் சில கருத்துக்களில் ஒன்றை மீளவும் நினைவூட்டப் பிரியப்படுகின்றோம். ''ஓய்ந்திருப்பதுபோர் மட்டுமே ஒழிய போராட்டம் அல்ல''என்று தெளிந்த சிந்தனையைத் திரும்பத் திரும்ப உச்சாடனம் செய்வதே உகந்தது. ஆனால், அமைதிக்கான பேச்சுக்களுக்கான போர் ஓய்வுக் காலத்தைப் பலரும் அர்த்தம் விளங்காமலோ/ விளங்கியோ ''அமைதிக் காலம்'' (சமாதான வேளை) என்கிறார்கள். சாதாரண மக்களிடத்தில் இக் கருத்துக்கள் தவறான சிந்தனைப் போக்கை கிளறி

> **''ஓய்ந்திருப்பது போர் மட்டுமே ஒழிய போராட்டம் அல்ல''**

விடக்கூடும். தாயக விடுதலைப் பயணத்தின் இலக்கை இலகுவாக ''மறந்து'' போராட்டத்தில் மக்கள் மயப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தில்- இருந்து ஒதுங்கச் செய்து விடக் கூடிய அவலத்தை அசலான அக்கறையுடையோரே அவதானியுங்கள். போர்க் காலத்தை விட போர் ஓய்வுக் காலத்தில் கூடிய விழிப்போடு இருப்போம். எதிரி ஆயுதப் போரைப் பெருமெடுப்பில் தவிர்த்து, கட்புலனாகாத (INVISIBLE) போரைப் பல வடிவங்களினூடு எம் மீது ஏவி வருகிறான். இவ் வடிவங்களில் முறியடித்தாக வேண்டிய பண்பாட்டு ஆக்கிரமிப்புப் பற்றிய சிறிய மனப் பதிவு தான் இக் கட்டுரை.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்பது எமது தமிழ்ப் பண்பாட்டு வழிவந்த செய்தியெனினும், அது புத்துருவாக்கத்துக்கான (INNOVATION) தூண்டலே ஒழிய பண்பாட்டுப் பேரழிவுக்கான (CULTURAL DISASTER)நியாயப்படுத்தல் அல்ல என்பதைத் தெட்டத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். நேர்ச்சிந்தனைக்கு (POSITIVE THINKING) உரித்தான சில முற்போக்கு விடய தானங்களை எமது பண்பாட்டுச் சூழல் மீதான அன்னிய சக்திகளின் ஆக்கிரமிப்புக்கு அர்த்தம் கற்பிக்க சிலர் ''தப்பாட்டம்'' போடுவதைச் சகிக்க முடியவில்லை. ஊடக சுதந்திரம், சன நாயகம், பெண்ணியம் என்பது மிகச் சிறியசான்றுகள். விரிவஞ்சி அவற்றை விளக்குவதை இங்கு தவிர்க்கின்றேன்.

சந்தைப்படுத்தல் தவிர்க்க முடியாத வகையில் என்று சொல்லுமளவுக்கு இன்று பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு வழி சமைத்துள்ளதைப் பகுத்தாராய்ந்து கொள்ளுங்கள். கட்டற்ற நுகர்வுப் பண்பாடு நமது தேசத்தின் தன்னிறைவு நோக்கிய பொருண்மியத்தை ''தங்கு நிலைக்கு'' (DEPENDENCY) இட்டுச் செல்வதுடன், சமூக நிலையைப் பேணுவதற்கான பேசு பொருளாயும் (PRESTIGEISSUE) ''விஸ்வரூபம்'' எடுப்பதையும் கவலையுடன் காண முடிகின்றது.இரண்டு தசாப்த கால இடையறாத போர்க்காலத்தில் நிலவிய ''பொருண்மியத்தடை'' காரணமாகப் பெரிதும் பரவியிராத இந்நிலை புரிந்துணர்வு உடன்படிக்கை'' யின் பின்பாக வீரியம் காட்டுகின்றது.

இவ்வகையில் ''ஊடகங்களின் பெருக்கம்'' ஊன்றிக் கவனிக்கத்தக்கது. ''ஊடக சுதந்திரம்'' என்ற முக மூடியைப் போட்டுக் கொண்டு இன்று கட்டற்ற ஊடகங்கள் பல்கிப் பெருகியுள்ளன. பயனுறுதி வாய்ந்த பல்பரிமாண ஊடகங்களுக்கு மேலாக மலினமான / புன்னெறி ஊடகங்கள் கறையான்களாகப் பெருகியுள்ளதைக் கவனமாகக் கையாள வேண்டும். ''கண்டு அது (நல்லனவற்றை) கற்கப் பண்டிதன் ஆவான்'' என்ற நற்றமிழ், தொடர் இன்று ''கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான்'' என்ற ''பாமரத்தன்மைக்குச்'' செல்வதைச் சம்பந்தப்பட்ட அனைவரும் கண்டு தொடர்புடைய தக்க நடவடிக்கைகளை எடுத்தேயாக வேண்டும். பண்படுத்த வேண்டிய பண்பலை வரிசைகள் எமது பண்பாட்டைப் புண்படுத்துவதை அறிந்தும் அறியாமலும் அவற்றை ''நம்பர் வண்''என்று அங்கீகரிப்பதை இனியாகிலும் கைவிடுவோம். ஏகாதிபத்திய/ மேலாதிக்க நலன் பேணும் ஊடகங்கள் ஊடான பரப்புரைப் போரை/ கருத்துத் திணிப்பைக் கனகச்சிதமாக எதிர் கொண்டு எம்மை வலுப்படுத்தல் இன்று மிக அவசியமாகின்றது. ''தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்'' (WE REPORT, YOU DECIDE) என்று ஒலி ஒளிபரப்பும் தனியார் இலத்திரனியல் ஊடகங்களின் அடிப்படைக் கருத்தியலைக் கண்டறிந்து உண்மையை உணர்ந்தாக வேண்டும். ''வன் சிறிலங்கா'' (ONE SRI LANKA) என்பது கருத்துத் திணிப்புக்குத் தக்க எடுத்துக் காட்டாவதைப் பாருங்கள். மஞ்சள் பத்திரிகைகளின் பெருக்கத்தைக் கண்டு கவலையுற முடிகிறது. பாலியல் அறிவுசார் (SEXOLOGY/SEXUAL EDUCATION) நூல்களை ''செக்ஸ் நூல்கள்'' என்று முத்திரை குத்தித்தரங்குறைத்துப் பார்க்கும் நம்மவர் சிலர்,இவற்றைக் கண்டும் காணாமலும் இருப்பதையிட்டு மனம் வெதும்புகிறது.

''போய்ஸ்'' என்ற தமிழ்த் திரைப்படம் கலாசாரத்தைச் சீரழிப்பதாக ஊதிப் பெருப்பித்தவர்கள், வர்த்தக மையப் பிரதேசத்திலுள்ள திரையரங்கு ஒன்றில் கூடுதலாக ''வயது வந்தவர்கள் மட்டும்'' வகைத் திரைப்படங்கள் திரையிடுவதைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லையே! ஏன்? ''கர்ப்பமும் பிள்ளைப்பேறும்'' (PREGNANCYAND CHILD BIRTH) என்ற ஓரிரு ''பாலியல் கல்வி'' (SEX EDUCATION) படங்களைத் தவிர பெரும்பாலும் மட்டமான பாலூணர்வைத் தூண்டும் திரைப்படங்கள் என்பதைத் தரவுகள் தெரிவிப்பதைக் காண முடிகிறது. ''போய்ஸ்''ஐ எதிர்த்த பலரும் ''பரசுராம்''எனும் அண்மைய அர்ஜுன் திரைப்படம் பற்றிக் கதைக்காமல் இருப்பது ஏன்? போர்க் காலத்தில் பெருமெடுப்பில் கைமாறிய ''நீலப்படங்கள்'' விடுதலைப்புலிகளின் மீள் வருகையின் பின்பாகக் களையெடுக்கப்பட்டமையைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.



அவர்களுடைய சமூகப் பொறுப்புணர்ச்சியை எமது தேசத்தில் வாழும் சகலரும் கைப்பிடிப்பது எமது வாழ் நெறியை, வாழ்வு முறைமையை வளமுடையதாக்கும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளைக் கவனமாக நாமெல்லோரும் கையாளுவது நாளைய நம்மவர்களுக்கான தடத்தைச் (TRACK) சரிவரக் கொடுக்க வழிவகுக்கும் எனலாம்.

''விடுதலை குறித்த சிந்தனை தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஏற்படும் சந்தர்ப்பம் எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்களவு அடக்கு முறை அரசுக்குத் தமிழர் சேனையின் பலம் குறைக்க உதவுமெனப் பேரினவாத சக்திகள் எண்ணுகின்றன''என்று யதார்த்தம் உரைக்கின்றார். ''தம்பிஅப்பா'' அவர்கள் ''மார்க்கோணியின் மார்பில் மற்றுமோர் மணியாரம்'' எனும் தலைப்பில் ''புலிகளின் குரல்: வானோசை பத்தாவது ஆண்டு நிறைவு மலர்''இல் மேற்கண்டவாறு எழுதிய அவர் பின்வரும் எடுத்துக்காட்டைத் தருவதையும் காணுங்கள். (அண்மைய பாரிஸ் உள்ளக சந்திப்புப் பயண காலத்தில் இவரின் பெயர் ஊடகங்களில் இடம் பிடித்திருந்தது.)

''31. 10. 1999 'சண்டேரைம்ஸ்' பத்திரிகையில் 'கும்பகர்ண' என்ற பேரினவாதி 'TELEWAR TO DEFEAT PRABHA 'S EELAMWAR' (பிரபாவின் ஈழத்தைத் தோற்கடிக்க ஒரு தொலைத் தொடர்பு யுத்தம்) என்ற தலைப்பில் எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் 'வானம்பாடி' போன்று இன்னும் பதினெட்டு அலைவரிசைகளைத் திறந்து விட்டால் தமிழ் இளைஞர் சமூகம் பிரபாவின் சேனையில் சேர்வது பற்றி நினைக்கவே மாட்டாது என்ற விதமாகக் கூறப்பட்டிருந்தது.''('வானம்பாடி'என்பது வடபுலத்தில் சிறிலங்காப் படையினரால் பொய்ப் பிரசாரத்திற்காக ஒலிபரப்பான வானலை வரிசை)

இவரது கருத்து உண்மை நிறைந்தது என்பதை உளவியல் அணுகுமுறையில் உரசிப் பாருங்கள். கல்விக் கோட்பாட்டில் ''கவனக்கலைப்பான்கள்'' பற்றிக் கதைப்பதைக் கேட்டிருக்கிறோம். அத்தகைய தொழிற்பாட்டையே, ஒரு விதமான எதிர்மறைத் திசைதிருப்பலையே பல்கிப் பெருகும் ஊடகங்களின் பொறுப்பற்ற செயல்கள் செய்ய முற்படுகின்றன என்பதைக் குறிப்பிடலாம். அரசியல்/ வரலாற்றுப் போராட்ட ரீதியான தெளிவு அல்லது முதிர்ச்சியைக் கொண்டிராத மக்களை இத்தகைய பண்பாட்டு ஆக்கிரமிப்பு முகவர்களின் அரிதாரத் தோற்றம்/ மேக்கப் புன்னகை வலுவிழக்கச் செய்து விடும் என்ற அபாயத்தை உணர்ந்து, தக்க மருத்துவம்/ சுகப்படுத்தல் (HEALING) செய்யப்பட வேண்டும். ''புரிந்துணர்வு உடன்படிக்கை'' யின் பின்பாக எமது தேசத்திற்குக் கட்டற்று வந்து போகும் பிற இனத்தவர்களின் அதீத வருகையும், அவர்கள் வெளிக்காட்டும் மேற்குலகப் பண்பாட்டும் நமது பண்பாட்டுச் சூழலை மாசுபடுத்தத் துணை செய்வதைக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. இன்னும் பலவும் நமது பிரதேசங்களில் பண்பாட்டு ஆக்கிரமிப்புகளுக்குச் சான்றாக அமையினும் வெளிப்படையாக எழுதக் கைகூசுகின்றது. குறுகிய சிந்தனைப் போக்குகளை உதறித் தள்ளி விட்டுப் பரந்த தெளிவான சிந்தனையூடாகத் தாயக விடுதலைப் பயணத்தைவீரியம் உடையதாக்குவோம்.

''எமது பண்பாடு தான் எமது தேசத்தின் உயிர்:எமது இனத்தின் ஆன்மா. தழிழீழத்தில் பிறந்து, வளர்ந்து, நிமிர்ந்து நிற்கும் தமிழனின் தேசிய ஆளுமையைக் கொன்று விட எமது பகைவர்கள் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார்கள்'' என்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் முன்னம் உரைத்திருப்பது, எமது தேசத்தில் எதிரி கட்டவிழ்த்து விட்டுள்ள பண்பாட்டு ஆக்கிரமிப்பை முறியடித்தேயாக வேண்டும். என்பதை முன்னுரைக்கிறதல்லவா?


*– துரை.மேகநாதன் –*

# பகிரங்கமாகும் திராய்க்கேணி படுகொலை எச்சங்கள்!

தென் தமிழீழ மண், படுகொலைகள் நிரம்பி வழிந்த மண், தமிழினம் நூற்றுக்கணக்கில் வேட்டையாடப்பட்ட சோக வரலாறுகள் சொல்லச் சொல்ல துயரத்தை வரவழைக்கும் தன்மையைக் கொண்டவை.

கல் நெஞ்சக்காரனும் எமது தமிழீழப் படுகொலைகளைக் கேட்டால் கண்ணீர் விடுவான். அந்த ப்படுகொலைகளில் அம்பாறை மாவட்டமும் பல நூற்றுக்கணக்கான தமிழ் உறவுகளைப் பறி கொடுத்து நிற்கிறது. தங்கவேலாயுதபுரம் படுகொலை, புதைகுழி ஒன்று தற்போது வெளிக் கொணரப்பட்டுள்ளது. அந்த இனவெறி அழிப்பில் உயிர்களைப் பறிகொடுத்து எஞ்சியிருக்கும்தமிழ் உறவுகள் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புத் துண்டங்களை, மண்டை ஓடுகளைப் பார்த்து தலையில் அடித்து ஒப்பாரி வைப்பது பார்க்கப் பார்க்க பரிதாபமான காட்சி.

அந்தக் கொடூரக் கொலைக்களங்களிலிருந்து உயிர் மீட்டுப் பெற்ற ஒருசில ஆத்மாக்கள் இன்னும் உண்மைகளைப் பகிரங்கப்படுத்த அச்சம் கொள்கின்றனர். அவ்வாறு



வீரமுனைப்படுகொலைகள்· தான் அவற்றில் பகிரங்கப்படுத்தப்பட்டனவே தவிர சகட்டு மேனிக்குத் தமிழினத்தைக் கொன்றொழித்த அத்தனை வரலாறுகளும் அடிமங்கிக் கிடக்கின்றன.

~வேணிதன் ~

இந்நிலையில் கடந்த வாரம் அம்பாறை மாவட்டத்தின் திராய்க் கேணியில் 90ம் ஆண்டு நடந்த படுகொலை ஒன்று பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 90ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் திகதி சிறிலங்காப் படைகள் மற்றும் ஊர்காவல் படைகள் நடத்திய தமிழின அழிப்பில் 48 பொதுமக்கள் வதைக்கச் சிதைக்க கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட நினைத்தால் சிறிலங்காப் படைகளாலும், ஊர் காவல்படைகளாலும் கொலை செய்யப்படுவோம் என்ற அச்சம் ஆழ் மனதில் நிறைந்திருக்கிறது.

எனினும் அந்தத் திராய்க் கேணி கிராமத்தில் நிகழ்ந்த படுகொலை கணப் பொழுதைக் கடந்த சம்பவங்களை ஆய்ந்தறிந்து வாசகர் பார்வைக்கு விடுகிறோம். அம்பாறை மாவட்டத்தில் வடக்கே பாலமுனை தெற்கே ஒலுவில் இவ் இரண்டு கிராமங்களுக்குமிடையில் உள்ள அழகிய விவசாயக் கிராமம் திராய்க் கேணி.

ஆழமான பெரிய மடுவில் பன்னிரெண்டு மாதமும் திராய்ப் பற்றை நிறைந்து காணப்பட்டதால் திராய்க் கேணி எனும் பெயர் சூட்டப்பட்டது.

விவசாயத்தைப் பிரதான




தொழிலாகக் கொண்டு மக்கள் வாழ்க்கை நடத்திய போது ஒரு நாள் 1990ஆம் ஆண்டு ஆவணி 6ம் நாள்இராணுவ வாகனங்களில் வந்த சிறிலங்காப் படையினர் பொது மக்கள் மீது தாக்கினர். அம்மா! ஐயோ! முனகல் சத்தம் மரண ஓலம். மிகுதியானோரை திராய்க் கேணி பிள்ளையார் கோயிலுக்குக் கொண்டு வந்தனர். இவர்களுடன் ஊர்காவல் படையினரும் வந்திருந்தனர். ஆலயத்துக்குள் புகுந்த படையினர்கள் கோயிலுக்குள் இருந்த கத்தி, கோடரி, மண்வெட்டி போன்றவற்றை எடுத்து வந்த பின் சில சிப்பாய்கள் பக்கத்து வீடுகளுக்குச் சென்று ஆயுதங்கள் சேகரித்து வந்தனர். வந்ததும் தமிழர்களை வேட்டையாடத் தொடங்கினர். கை கால் கண்ட துண்டமாக வெட்டப்பட்டது. பலரது கழுத்துக்கள் துண்டிக்கப்பட்டதுமாய் உயிர்கள் பிரிந்தன.

ஆறு நாள் பிறந்த பச்சிளம் குழந்தை ஒன்றை ஆலமரத்தில் ஒரே அடியாய் அடித்துக் கொன்று போட்டிருந்தனர். ஆறு மாதம் பூப்படைந்த இளம் பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி விட்டு குடில் ஒன்றுக்குள் போட்டு தீயிட்டுக் கொழுத்தியிருந்தனர். இவ்வாறு கொலை வெறித் தாண்டவமாடி விட்டு ஒரு பகுதிப் படையினர் போக வேறு ஒரு முகாமிலிருந்து சிங்களப் படைகள் அவ்விடம் வந்து பொது மக்களை தேற்றரவு கூறுவது போல் காட்டி சிதறுண்டு கிடந்த உடலங்களைப் பொது மக்கள் உதவியுடன் ஒன்று கூட்டிப் பார்த்தபோது 48 அப்பாவிப் பொது மக்கள் பலிக்கடாவாக்கப்பட்டிருந்தனர். அவ்வுடலங்களை ஆலயத்துக்கு முன்பாகக் குழி வெட்டி புதைக்கும்படி தப்பிப்பிழைத்த பொதுமக்களிடம் கூறியுள்ளனர்.

இவ்வாறு 25 உடலங்கள் ஒரு குழிக்குள்ளும் ஏனைய உடலங்கள் வேறு சில குழிகளிலும் போட்டு மூடப்பட்டன. படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களில் நால்வர் பின்னர் உயிரிழந்தனர். இதன் பின்னர் இந்த திராய்க் கேணி மக்களின் மனங்கள் மகிழ்ந்திருக்குமா என்பது கேள்விக் குறிதான். தற்போது 137 குடும்பங்கள் குடியமர்ந்துள்ள நிலையில் படுகொலைப் புதை குழி புலப்பட்டுள்ளது.

புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புத் துண்டங்கள், மண்டை ஓடுகளைப் பார்த்து தமது உறவுகளைப் பலி கொடுத்த உள்ளங்கள் ஒப்பாரி வைத்து அழுதனர். அக்காட்சி உள்ளத்தை உருக்கக் கூடியது. இப்போதும் திராய்க் கேணியில் இருந்து ஒரு மரணப் புதை குழி வெளிக் கொணரப்பட்டதையடுத்து ஊடகவியலாளர்கள் அக்கிராமத்துக்குச் சென்று தகவல்களைத் திரட்ட முற்பட்டு வருகின்றனர்.

எனினும் படைத்தரப்பினராலும் மற்றும் சில தரப்பினராலும் தமக்கு உயிராபத்து ஏற்படும் என்ற அச்சம் உள்ளத்தில் ஆளமாக அக்கிராம மக்களிடம் படிந்திருப்பதால் அவற்றை வெளியிடுவதில் தயக்கம் காட்டி வருகின்றதை அவதானிக்கமுடிகிறது. இவை ஒரு புறமிருக்க திராய்க்கேணி மரணப் புதைகுழிஅம்பலத்துக்கு வந்த இந்த சில நாட்களுக்குள் அப்பிரதேசத்தைச் சூழவுள்ள படை அதிகாரிகள் கிராமத்திலுள்ள சில நபர்களை அழைத்து துருவித் துருவி விசாரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது படுகொலைகளை அக்கிராமம் சுமந்து நின்றாலும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு பழம் தமிழ்க் கிராமம் பறி போகக் கூடாது என்பதே அம்மக்களது அவாவாகும். என்ன தான் துன்பம் அச்சுறுத்தல் வந்தாலும் கிராமத்தை விட்டு வெளியேறுவதில்லை. எமது தமிழ் மண் அன்னிய சக்திகளிடம் பறி போகக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

**ஆறு நாள் பிறந்த பச்சிளம் குழந்தை ஒன்றை ஆலமரத்தில் ஒரே அடியாய் அடித்துக் கொன்று போட்டிருந்தனர்.**



## சொன்னாலும் குற்றம்



போன வாரத்துக்கு முந்திய வாரம் ''வாணிவிழா'' பாடசாலைகள் தொடக்கம் பல சரக்குக் கடை வரையும் எல்லா இடமும் இறை பக்தியாகவும், இயல் இசையாகவும் கல்வித் தெய்வத்தைக் கருணை கூர்ந்து வணங்கி வழிபாடு செய்தார்கள்.

ஆனால் சில தனியார் கல்வி நிலையங்களில் வாணிவிழாவைக் கொச்சைப்படுத்தும் விதமாகச் சினிமாப்பாடல் ஒலிக்கப்பட்டு கூத்தும் கும்மாளமும்" போட்ட சம்பவம் குறிப்பாக செங்கலடிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

''பாய்ஸ்'' திரைப்படப் பாடலுக்கு அங்கு பாடம் படிக்கும் மாணவர்கள் நடனம் ஆடினார்களாம், ஆசிரியர்கள் தாளம் போட்டார்களாம்.


கல்வியை வேண்டி கலைவாணிக்கு இறைபக்தியுடன் விழா எடுக்கும் நாளில் எமது சைவத் தமிழ் மரபுக்கு முரணான சினிமாப் பாடல்களை ஒலிபரப்பிக் கூத்தாடியது மாணவர்களை ஒழுக்கத்தில் இருந்து அழுக்கத்திற்கு இட்டுச் செல்லும் செயலாகும் என செங்கலடிப் பகுதி மாணவர்களின் பெற்றோர்கள் கதைப்பதிலும் தவறேதும் இல்லைதானே.

# இலங்கையின் தமிழ்மொழியும் அதன் சட்ட அந்தஸ்த்தும்

**பூ.ம. செல்லத்துரை**

> ‘‘இலங்கையில் முதலரசன் இராவணன் காலம் தொடக்கம் கடைசிக் கண்டி அரசன் ஸ்ரீவிக்கிரமசிங்கன் வரை ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருந்தது. அன்னியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலமொழி ஆட்சி மொழியாகவும். பிராந்திய மொழிகளாக சிங்களமும் தமிழ்மொழியும் இடம் பெற்றிருந்தன.’’

நீண்டநெடிய காலமாக இலங்கைத்தீவு- தமிழர்களின் தாயகமாக இருந்தது. இடையில் தேவநம்பியதீசனின் ஆட்சிக் காலத்தில் புகுத்தப்பட்ட பௌத்தவழிபாட்டின் மூலம் பன்னூறு ஆண்டுகளின் பின் சிங்களஇனம் உருப்பெற்று வளம் பெற்று உருவானது. பாதியில் அதாவது 13ம் நூற்றாண்டளவில் அரபு நாட்டிலிருந்து அரபர்கள் இலங்கையின் வணிகர்களாகவும், படையினராகவும் வந்து இணைந்தார்கள். அரவம் என்றால் பாம்பு- பாம்பை வழிபட்டவர்கள் அரபர்- அரபர் வாழ்ந்த நாடு அரபு நாடாகும்- அவர்கள் பேசிய மொழி அரபு மொழி என அழைக் கப்படுகி றது. அரபு- மொழி என அழைக்கப்படுகிறது. அரபு மொழியின் அமைப்பு- பாம்பு நெளிந்து சுழித்தோடுவது போலுள்ளது. அரபு மொழியின் தாய் மொழி தமிழாகும் என மொழி ஆய்வாளர் பலர் கூறியுள்ளார்கள். அரவர் என்றால் தமிழர் என்று அந்திரர்கள் அழைத்தார்கள்- நிகண்டு தமிழர்களை அரபர் என அழைக்கின்றது. கலிங்கப் போரில் சோழப்படையைக் கண்ட கலிங்கப்படையினர் அவர்களை அரபர்



அரபர் என அஞ்சி நடுங்கியதாகக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது. எனவே தமிழருக்கு அரபர் என்ற பெயரை முதலில் வழங்கியவர்கள் அந்திரராகும். என மு.இராகவையங்கர் கூறுகிறார். (ஆராய்ச்சித் தொகுதி- தமிழரும் ஆந்திரரும்) இன்று இலங்கையில் எந்தப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு தங்கள் தாய்மொழியாகத் தமிழையையே பாவித்து வருவதைக் காணலாம். எனவே இலங்கையில் சமீபகாலம் வரை மொழியை அடிப்படையாகக் கொண்டு இரண்டு தேசிய இனங்கள் தங்கள் தங்கள் பாரம்பரிய தாயகத்தில் வாழ்ந்து வந்த நிலைப்பாடுடையதாக இருந்து வந்தது- வருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் மேற்பகுதியிலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். தென்பகுதியில் சிங்களக் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். நாட்டின் பல பாகங்களிலும் வாழும் இஸ்லாமியர் தமிழ் மொழியையே பேசுகிறார்கள்.

இலங்கையில் முதலரசன் இராவணன் காலம் தொடக்கம் கடைசிக் கண்டி அரசன் ஸ்ரீவிக்கிரமசிங்கன் வரை ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருந்தது.- அன்னியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலமொழி ஆட்சி மொழியாகவும். பிராந்திய மொழிகளாக சிங்களமும், தமிழ்மொழியும் இடம் பெற்றிருந்தன. 1940ம் ஆண்டுவரை மொழிப் பிரச்சினையென்று ஒன்றிருக்கவில்லை.

1944ம் ஆண்டு களனித்தொகுதியில் நடை பெற்ற ஒரு இடைத்தேர்தல் மூலம் சட்டசபைப் பிரதிநிதியாக நுழைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனஅந்த ஆண்டு 1944 மே மாதம்24ந் திகதி சட்டசபையில் கொண்டு வந்த பிரேரணை மூலம் நாட்டின் ஆட்சிமொழியான ஆங்கிலம் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக்கப் பட வேண்டும் என்று பிரேரித்தார். அதை அன்று மட்டக்களப்பு மாவட்ட சட்ட சபை உறுப்பினராக இருந்த திரு.வி. நல்லையா எதிர்த்து- தமிழும் சிங்களமும் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என ஒரு திருத்தத்தை முன் மொழிந்தார்- அதை திரு.எஸ்.டபிள்யூ-ஆர்.டி.பண்டாரநாயக்கா வழிமொழிந்தார்- இலங்கையின் ஆட்சி மொழியாக சிங்களமும் தமிழும் சட்டசபையில் அங்கிகரிக்கப்பட்டது. ஆனால் அமுல் செய்யப்படாது- பாடையில் ஏற்றப்பட்டது. அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த சிங்கள மொழியே அரசகரும மொழி என்ற பிரேரணை மொழிப்பிரச்சினையின் முடிவல்ல அதுவே இனப்பிரச்சினையின் ஆரம்பமாகும்.

**தமிழ்காங்கிரசின் ஆரம்பம்**

இலங்கையில் பாராளுமன்ற அரசியல் ஆரம்பமாவதற்கான சூழ்நிலை தென்பட்டதும், அதில் ஈடுபட விரும்பிய தலைவர்கள் கட்சிகளை அமைத்தார்கள்.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் ஆரம்பித்தார். இக்கட்சி தமிழர்களின் அரசியலில் உரிமைகளைப் பாதுகாக்கவே ஆரம்பிக்கப்பட்டது.

அக்காலகட்டத்தில் 1946ம் ஆண்டு இலங்கைக்குச் சோல்பரி அரசியல் சீர்திருத்தக் குழு வந்தது. இந்த அரசியல் சீர்திருத்தச் சபை முன் சுமார் (6)ஆறு மணித்தியாலம் தமிழ்மொழி இலங்கையின் அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என மிகவும் அழுத்திக் கூறினார் ஜி.ஜி பொன்னம்பலம். ஆனால் சோல்பரி அரசியலில் சீர்திருத்தக் குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் 1945ம் ஆண்டு இல்ங்கையின் அரசகரும மொழி சம்மந்தமான ஆய்வு செய்து அறிக்கை செய்யுமாறு அமைக்கப்பட்ட தெரிவுக்குழு தனது அறிக்கையை 1946ம் ஆண்டு இலங்கை அரசிடம் கையளித்தது. 1944ம் ஆண்டு மே மாதம் 24ந் திகதி இலங்கையின் சட்ட சபையில் ‘‘இலங்கையில்அரசகரும மொழியாக சிங்களமும் தமிழ் மொழியுமிருக்க வேண்டும்’’ என்ற தீர்மானம் நிறைவு செய்யப்பட்ட பின் சிங்களத்தலைவர்களின் அலட்சியமும்- அகம்பாவமுமே இத்தகைய குழு அமைக்கக் காரணமாகும். இந்த அறிக்கையில் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம் தமிழாகியதேசிய மொழிகளில் அரசகருமங்கள் அனைத்தும் நடத்தப்பட வேண்டும் எனவும், அந்த மாற்றங்களைக் கால கெதியில் நிருவாக அலகுகளில் உள்வாங்கிக் கொள்ளலாம் எனவும், சுமார்10வருடங்களுக்குள் சிங்களத் தமிழ் மொழிகள் உத்தியோக பூர்வ மொழியாக்கப்பட வேண்டும். எனச் சிபார்சு செய்திருந்தனர். இலங்கையின் மொழிப்பிரச்சினை என்பது ஆரம்பத்தில் ஆங்கில மொழிக்கெதிரான கிளர்ச்சியாகவே வடிவம் பெற்றிருந்தது. ஆனால் அதன் பின் இலங்கையின் மொழிப்பிரச்சினை என்பது சிங்கள தமிழ் தேசிய இனங்கிளுக்கிடையிலலான முரண்பாடுகளின் ஒரு பரிமானமாகப் பேரின வாதிகளால் வளர்த்தெடுக்கப்பட்டமை துரதிஷ்டமானது மட்டுமல்ல இலங்கையின் சாபக் கேடுமாகும்.

**தமிழரசுக்கட்சியின் ஆரம்பம்.**

தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளைப் போராடிப் பெற ஆரம்பிக்கப்பட தமிழ் காங்கிரஸ் ஆரம்ப ஆர்ப்பாட்டத்தோடும் சூரத்தனத்தோடு தன் ஆட்டத்தை ஆடிமுடித்து- பெட்டிப்பாம்பாகி அரசோடு சங்கமமாகி- அமைச்சர்களாகி- இந்தியத்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆதரித்தது. அச்சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களித்து விட்டு வெளியேறிய தந்தை செல்வா -கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் -வைத்திய கலாநிதி இ.எம்.வி. நாகநாதன் போன்றோர் -சேர்ந்தே தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்கள்.

1. இலங்கையில் இணைப்பாட்சி மூலம் தமிழருக்கான தமிழரசை அமைத்தல்.

2. ஆட்சி மொழியில் தமிழருக்குச் சம உரிமை பெறுவதோடு ,

3. திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்தல்.

4. இழந்த மலையக மக்களின் வாக்குரிமையை மீட்டல் என்ற கொள்கையோடு தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி என்ற பெயரை மட்டுமே உடைய கட்சியாக இருந்தாலும் அது வடக்கையும் திருமலையை மட்டுமே இணைத்திருந்தது. ஆனால் தமிழரசுக் கட்சி மட்டுமே இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைந்த கட்சியாகும். தந்தை செல்வா மட்டுமே இலங்கைத் தமிழர்களை ஒன்றிணைத்த ஒரு தலைவனாகும்.

**இடது சாரிகளும் மொழிக் கொள்ளையும்**

இலங்கையில் இடதுசாரி இயக்கம் 1930ம் ஆண்டளவிலே ஆரம்பமானது. 1935ம் ஆண்டளவில் லங்கா சமசமாஸக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இதைக் கலாநிதி என்.எம்.பெதீரரா கலாநிதி- கொல்வின் -ஆர் டி- சில்வா பிலிப் குணவர்த்தன போன்றோர் சேர்ந்தே அமைத்தார்கள். இவர்களில் கலாநிதி என். எம். பெரேராவும் கலாநிதி - கொல்வினும் இலண்டனில் பேராசிரியர் ஹரோல்ட் லஷ்கியிடம் கல்வி கற்றார்கள். பிலிப் குணவர்த்தன அமெரிக்காவில் கல்வி கற்றவர்.

தங்கள் கட்சியின் மகா நாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றியதுடன்- அதற்காகவும் போராடினார்கள்.

*அரச சபையில் மொழி சம்மந்தமாக நிறைவு செய்யப்பட்ட தீர்மானங்கள்.*

அரச சபையில் 1934ம் ஆண்டு ஆடி மாதம் ஐந்தாம் தேதி கே-டபிள்யு - பெரேரா அவர்கள் பின்வரும் பிரேரணையை முன் மொழிந்தார்-அதை கலாநிதி - என்-எம்- பெரேரா வழி மொழிந்தார். அத்தீர்மானங்கள் பின்வருமாறு அது இலங்கையில் அரச கரும மொழிகளாக சிங்களமும் தமிழும் உள்வாங்கப்பட முன் னோடி நடவடிக் கையாக அமைந்தது.

1. சிங்களத்தில் அல்லது தமிழில் உயர்வான தேர்ச்சித் தரம் பெறாத எவரையும் வருங் காலத்தில் சிவில் எழுதுவினைஞர் சேவையில் சேவைக்கு நியமிக்கக் கூடாது.

2. சிவில் எழுதுவினைஞர் சேவைகளில் இவர்களைச் சேர்ந்த எந்த அலுவலராவது சிங்களம் அல்லது தமிழில் தேர்ச்சி காட்டினாலோ ஒழிய பதவி உயர்வு வழங்கக் கூடாது.

3. எந்தவொரு ஆளாவது சிங்களம் அல்லது தமிழில் நடைமுறைகளைப் பதியக்கூடிய தாகத் தன்னைக் காட்டினாலொழிய பொலிஸ் நீதிவானாகவோ அல்ல உயர் நீதிமன்ற தலைமை வகுக்கவோ நியமிக்கக் கூடாது.

4. குற்றயியல் விசாரணைகளை சிங்களத்தில் அல்லது தமிழில் நடத்த சட்வல்லுனர்கள் அனுமதிக்க வேண்டும் எனச் சபை தீர்மானிக்கின்றது.

இத்தீர்மானம் 1932 ம்ஆண்டு அரச சபையில் நிறைவு செய்யப்பட்ட தீர்மானம் மேலே தந்தது - 1944 ம் ஆண்டு சட்ட சபையில் தமிழும் சிங்களமும் இந்த நாட்டின் அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவு செய்யப்பட்டது.

மேலே உள்ள சட்டங்களை நிறைவு செய்த பின்னே 1945ம் ஆண்டு ஆட்சி மொழி சம்மந்தமாக ஆய்வு - செய்து குழு ஒன்றைத் தெரிவு செய்தார்கள். என்றால் சிங்கள ஆட்சியாளர்களின் கப்பல் பார்த்த அறிவு மேதா விலாசத்தை -பார்த்துக்கொண்டு அந்த சபை செய்த சிபாரிசைக் கூட அவர்கள் அமுல் செய்யவில்லை.

(தொடரும்......)

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்:-** தமிழ், முஸ்லிம் உறவு வலுப்பெற்று வரக்குள கிண்ணியாப்பக்கம் சிலர் குழப்பப் பார்க்கிறாங்களே மச்சான்....

**கலந்தர்:-** எனக்கெண்டா பெரிய கவலயாக்கிடக்கு மச்சான். சில கும்பல்கள் காட்டிற கூத்தால பெரிய கயிட்டமாக் கிடக்கு.

**கந்தர்:-** நம்ம ரெண்டு இனத்தயும் மோத உட்டுத்து புதினம் பாக்கிறத்துக்கெண்டே சிங்கள பேரினவாதிகள் நாயாக அலயிறாங்க....

**கலந்தர்:-** சரியா சொன்னாமச்சான் ‘‘புள்ளயும் கிள்ளி தொட்டிலயும் ஆட்டிறது’’ சிலருக்கு இன்னும் விளங்குதில்ல.....

**கந்தர்:-** விளங்காம இன்னும் இருந்தா பெரிய அழிவுகள் தான் ஏற்படும்.....

**கலந்தர்:-** இதப் புரிஞ்சா சரிதான்.

**இந்தியாவும் ஈழத்தமிழரும்**


# இந்தியப் படைகளுக்கு எதிராக திரண்டெழுந்த தமிழ் மக்கள்

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 29**

**- நிராஜ் டேவிட்-**

மூன்றாவது உண்ணாவிரதப் போராட்டம்:

விடுதலைப் புலிகளின் வரலாற்றில் இந்தியாவிற்கு எதிராக, இரண்டு சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்கள் இடம்பெற்றதாக நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.
முதலாவது - புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் சென்னையில் வைத்து மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம்.
இரண்டாவது - திலீபன் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம்.
புலிகளின் வரலாற்றில் மூன்றாவதாகவும் ஒரு சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றிருந்தது.
விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மகேந்திரராஜா மாத்தையா அவர்களே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்.
1993ம் ஆண்டு மார்ச் மாதத்தில், யாழ்ப்பாணம் கொக்குவில் பிரதேசத்தில், விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் அவர்களின் இல்லத்தில் மாத்தையாவின் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றிருந்தது. இந்த உண்ணாவிரதப் போராட்டத்திலும் இந்தியா ஒரு வகையில் சம்பந்தப்பட்டிருந்தது.
ஆனால் மாத்தையா மேற்கொண்ட அந்த உண்ணாவிரதத்தில் இந்தியாவின் பங்கு வேறுவிதமாகவே இருந்தது.
மிகவும் சுவாரசியமானதும், பரபரப்பானதுமான இந்தச் சம்பவம் பற்றி மற்றொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்க்கலாம்.
இப்பொழுது திலீபனின் உண்ணாவிரத மேடைக்குச் செல்லுவோம்.



''என்னை அவமானப் படுத்தவேண்டாம்'' - திலீபன்

திலீபன் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்து மூன்றாவது நாள், அவரின் உடல் நிலை மோசமடைய ஆரம்பித்தது. நீர் கூட அருந்தாமல் அவர் உண்ணாவிரதம் இருந்துவந்ததால், அவரது நாக்கு வரண்டு போயிருந்ததுடன், மாறாட்டமும் மயக்க நிலை கூட அவருக்கு ஏற்பட ஆரம்பித்தது. அவரால் எழுந்து நிற்கமுடியவில்லை. வயிற்றினுள் பலவித உபாதைகள் ஏற்பட ஆரம்பித்தன. உடற் சூடு அதிகரிக்க ஆரம்பித்ததுடன், இரத்த அழுத்தம் குறையவும் ஆரம்பித்தது. சிறிது நீர் அருந்தினால், அவரது உடல் நிலை ஓரளவு தேறிவிடும் என்று அங்கிருந்தவர்கள் கருதினார்கள்.
இந்தியா எப்படியாவது மனமிரங்கிவிடும், திலீபன் தனது போராட்டத்தை முடித்துக்கொண்டுவிடலாம் என்றே அங்கிருந்தவர்கள் கருதினார்கள்.
இந்தியா இன்னும் ஓரிரு தினங்களுக்குள் புலிகளுக்குச் சாதகமான தனது முடிவை அறிவித்துவிடும். எனவே அதற்குள் திலீபனின் உடல் நிலை மோசமாக அனுமதிக்கக்கூடாது என்றுதான் அங்கிருந்தவர்கள் நினைத்தார்கள்.
இந்தியா, சத்தியத்தின் மீதும், சாத்வீகத்தின் மீதும் மதிப்பு வைத்திருப்பதாக அங்கிருந்த சிலர் அப்பொழுதும் நம்பியதுதான் வேடிக்கை.
திலீபனின் உண்ணாவிரத மேடைக்கு அருகில் உள்ள மேடையில், திலீபனின் உண்ணாவிரதத்திற்கு வலுச்சேர்க்கும்படி சுழற்சி முறையிலான உண்ணாவிரதங்கள் பலரால் மேற்கொள்ளப்பட்டன. அந்த மேடையில் பல பிரமுகர்கள், உண்ணாவிரதத்திற்குச் சார்பாக உரையாற்றியபடி இருந்தார்கள்.
கருணானந்த சிவம் என்ற ஆசிரியர், திலீபனை மிகவும் நேசித்த ஒருவர். திலீபனின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக மேடையில் அவர் உரை நிகழ்த்தும் போது, திலீபனின் உடல்நிலை மோசமடைந்து செல்வது பற்றி மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். அவர் தனது பேச்சின் போது, திலீபனிடம் ஒரு வேண்டுகோளையும் முன்வைத்தார்.

> “கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம.”
> - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

''திலீபன் புலிகளுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் முழுத் தமிழினத்திற்கும் சொந்தமானவர். அப்படிப்பட்ட திலீபன் ஒரு சொட்டு நீராவது அருந்தி தனது உடலைக் காப்பாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். இது எனது தனிப்பட்ட வேண்டுகோள் மட்டுமல்ல, இங்கு திரண்டு வந்துள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் வேண்டுகோளும் இதுதான்'' என்று பேசினார்.
அதைக் கேட்ட திலீபனின் முகம் வாடிவிட்டது. ஒலிவாங்கியைத் தன்னிடம் தருமாறு கேட்ட திலீபன் ஆசிரியர் கருணானந்தம் அவர்களின் வேண்டுகோளுக்குப் பதில் வழங்கிப் பேசினார்:
''இந்த மேடையில் பேசிய அன்பர் என்னிடம் நீராகாரம் அருந்தும்படி கேட்டுக்கொண்டது, என்னை அவமானப்படுத்துவது போன்று இருக்கின்றது. நான் இந்த மேடையில் நீராகாரம் அருந்தாமல்தான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தேன். இறுதிவரை இந்த முடிவில் இருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையானால், எவரும் என்னை நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்தவேண்டாம். என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால், இறப்பேனே தவிர இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக எனது இலட்சியத்தில் இருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்'' என்று தெரிவித்தார்.
திலீபன் மீது கொண்டிருந்த அளவுக்கதிகமான பாசம் தமது கண்களை மறைத்துவிட்டிருந்ததை, திலீபனை நீர் அருந்தும்படி கோரியவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அதன் பின்னர் எவருமே திலீபனை நீர் அருந்தும்படி வற்புறுத்த முன்வரவில்லை.

கலவரங்களாக வெளிப்பட்ட 'மக்களின் எழுச்சி':

திலீபன் என்ற 23 வயது இளைஞனின் இந்த வித்தியாசமான உண்ணாவிரதம் யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய உணர்வலைகள் ஒரு பாரிய எழுச்சியாகவே மாற ஆரம்பித்திருந்தது. திலீபனின் கோரிக்கைகளுக்கு இந்தியா செவிசாய்க்கத் தயாரில்லை என்பதான செய்திகள் யாழ் மக்களிடம் பரவ ஆரம்பித்ததைத் தொடர்ந்து, இந்தியாவிற்கும், அதன் அமைதிப்படையினருக்கும் எதிராக மக்கள் பாரிய உணர்வலைகளை வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள். 'புலிகள் எதனைக் கேட்டுவிட்டார்கள்? பெரிதாக ஒன்றும் அவர்கள் கேட்டுவிடவில்லையே. தமிழ்மக்களின் நலன் சார்ந்த விடயங்களைத்தானே அவர்கள் கேட்டுள்ளார்கள். இதற்காக ஒரு இளைஞனை பலிகொடுக்கும் அளவிற்கு இந்தியாவிற்கு இப்படி ஒரு கல்நெஞ்சு இருப்பது அவசியம்தானா? இந்தச் சிறு விடயத்தைக் கூட நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற விரும்பாத இந்தியாவினால், எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தொடர்பான முக்கிய விடயங்களை எவ்வாறு நிறைவேற்ற முடியும்' என்று மக்கள் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

விளைவு:

இந்தியப் படையினருக்கு எதிராக மக்கள் தமது உணர்வுகளைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள். இந்தியப் படையினருக்கு எதிராக மக்கள் கோஷமெழுப்பினார்கள். ஊர்வலங்களை நடாத்தினார்கள். ஒரு சில சந்தர்ப்பங்களில் இந்தியப்படையினரை நோக்கி கற்களை வீசவும் செய்தார்கள்.
மன்னார், தலைமன்னார் வீதியில் இருந்த இந்தியப்படை முகாமை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது. மக்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இந்தியாவிற்கும், இந்தியப்படைகளுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பியபடி அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். இந்தியப்படையின் முகாமை அடைந்த ஊர்வலத்தின் மக்கள் கூட்டம் முகாமின் வாயிலை அடைத்தபடி நின்று, கோஷம் எழுப்பியது. திலீபனின் உண்ணாவிரதத்தில் இந்தியா காண்பிக்கும் மௌனத்திற்கு எதிராக தமது கண்டனங்களை வெளிப்படுத்திய பொது மக்கள், இந்தியா தமிழர் பிரதேசங்களை விட்டு வெளியேறவேண்டும் என்று கோஷம் எழுப்பினார்கள்.



முகாமின் வாயிலில் காவல் கடமையில் இருந்த இந்தியப்படை வீரர் ஒருவர் மிகவும் கோபம் அடைந்தவராகத் தனது துப்பாக்கியை எடுத்து, ஊர்வலத்தை நோக்கி ஒரு சில துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தார். ஊர்வலத்தின் முன்வரிசையில் நின்ற ஒருவர் சுடப்பட்டுவிழ, ஏனையவர்கள் கலைந்து ஓடினார்கள்.
ஆர்ப்பாட்டக்காரர்கள் முகாமுக்குள் நுழைய முற்பட்ட வேளையிலேயே தாம் வேறு வழி இல்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இந்தியத் தரப்பால் அந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு நியாயம் கற்பிக்கப்பட்டது.
முகாமுக்குள் பொதுமக்கள் நுழைய முற்பட்டது ஒருவேளை உண்மையாக இருந்தால் கூட, அவர்களைத் தடுத்து நிறுத்தும் வழிமுறை எதனையும் மேற்கொள்ளாது, எச்சரிக்கை வேட்டுக்கள் கூட தீர்க்காது, நேரடியாகவே பொதுமக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இந்தியப் படைகளின் செயல், பலத்த கண்டனங்களுக்கு உள்ளானது.
இதுபோன்ற இந்தியப்படைகளுக்கு எதிரான பொதுமக்களின் கோபம் பல வழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டன. இந்தியப் படைகளின் வாகனங்கள் வீதிகளில் செல்லமுடியாத அளவிற்கு நிலமை மோசமாக ஆரம்பித்தது. இந்தியப்படைகளுடன் பேசுவதற்கும் பொதுமக்கள் விரும்பவில்லை. இந்தியப் படை அதிகாரிகளுடன் சினேகபூர்வமான தொடர்புகளை வைத்திருந்த யாழ்வாசிகள் தமது உறவுகளை நிறுத்திக்கொள்ள ஆரம்பித்திருந்தார்கள். இந்தியப் படைவீரர்களுக்குத் தண்ணீர் வழங்கக் கூட தயக்கம் காண்பித்தார்கள்.
திலீபனின் உண்ணா விரதம் பற்றி ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்த இந்தியப்படை அதிகாரிகள், நிலமையின் விபரீதத்தைப் படிப்படியாக உணர ஆரம்பித்தார்கள்.
தமிழ் மக்களின் உணர்வுகளை விடுதலைப்புலிகள் இந்தியப் படைகளுக்கு எதிராக மிகவும் புத்திசாலித்தனமாகத் திருப்பிவிட்டுள்ளதை அவர்கள் உணர ஆரம்பித்தார்கள். நிலமை இந்த அளவிற்கு மோசமாகும் என்பதை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஒருவேளை திலீபன் இறந்துவிட்டால் நிலமை இதைவிட மோசமடையலாம் என்றும் அவர்கள் எதிர்பார்த்தார்கள்.
திலீபனின் உண்ணாவிரதத்திற்கு மாற்றீடாக இந்தியா உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியப்படை உயரதிகாரிகள் தமது மேலிடத்திடம் கேட்டிருந்தார்கள். ஆனால், இந்திய அரசின் தலைமையோ, புலிகள் 'பூச்சாண்டி காண்பிக்கின்றார்கள்' என்றே நினைத்தது. புலிகளை எப்படியும் சமாளித்துவிட முடியும், இதற்கெல்லாம் பயப்பட்டால் தொடர்ந்தும் புலிகள் இதுபோன்ற மிரட்டல்களை விடுத்துக்கொண்டே இருப்பார்கள் என்று தெரிவித்து வாழாவிருந்துவிட்டார்கள்.
இந்தியாவின் எதிர்காலம் தொடர்பான விடயத்தில், திலீபனின் இந்த உண்ணாவிரதப் போராட்டம் எப்படியான ஒரு பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது என்பதை இந்தியாவின் அரசியல் தலைமை அப்பொழுது உணர்ந்திருக்கவில்லை.

*துரோகம் தொடரும்....*

# எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்




**பெ**ண்ணால் முடியாதது ஒன்றுமே இல்லை என்ற உண்மையை உலகத்திற்கு எடுத்துக் காட்டிய பெருமை எமது தாயகப் பெண்களையே சாரும்.

தாயகப் பெண்கள் எனக் கூறுவது தமிழீழவிடுதலைப்புலிகளின் பெண்போராளிகளின் ஆற்றல் மிகுந்த சாதனைகள் என்பதை எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

பாரதி கவிதையில் வடித்த புதுமைப் பெண்ணை செயல்வடிவம் கொடுத்தவர்கள் எமது தமிழ்ப் பெண்கள். இதற்கு வித்திட்டவர் எமது தேசியத் தலைவராகும்.

தமிழீழப் பெண்களின் எழுச்சி நாளாகத் தேசியத் தலைவரால் தாயக விடுதலைப் போராட்டத்தில் முதன்முதலாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இரண்டாம் லெப்ரினட் மாலதியின் நினைவு நாளான அக்டோபர் 10ம் திகதியை பிரகடனப் படுத்தியதுடன் அதனைத் தாயகமெங்கும் உணர்வு பூர்வமாகவும் எழுச்சியாகவும் அனுஷ்டிக்கப்பட்டு வருவது எமது மண்ணிற்கும், பெண்ணிற்கும் பெருமை தரும் விடயமாகும்.

கடந்த 1987ம் ஆண்டு அக்டோபர் 10ம்திகதி கோப்பாயில் இந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் மோதிய தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2வது லெப்ரினன்ட் மாலதியின் நினைவுதான் தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மாலதி வீரச்சாவைத் தழுவும் போது நூற்றுக் கணக்கான பெண்போராளிகளுடன் இயங்கிய மகளிர்ப் படையணி இன்று பெரும் விருட்சமாகப் பல்லாயிரக்கணக்கான பெண் போராளிகளுடன் வளர்ந்து ''எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்'' என்று வீறுநடை போடுகின்றது.

பெண்விடுதலை என்று பேனாவால் மட்டும் எழுதிவிட்டு உனக்கில்லை உபதேசம் ஊருக்கு என்று உபதேசம் செய்யும் பேர்வளிகள் பலர் உள்ள எம் தேசத்தில் சாதித்துக் காட்டிய பெருமை இந்தப் பெண்களுக்கு மட்டுமே உள்ளது.

முழுமையான பெண்விடுதலை என்பது சமூக அடக்குமுறைகளில் இருந்தும், மூடநம்பிக்கைகளில் இருந்தும், சாதிப்பாகுபாடு, சீதனக் கொடுமை களிலிருந்தும் விடுதலை அடையும் போதுதான் முழுமையான பெண்விடுதலைக்கு இட்டுச் செல்கின்றது. இதற்கான போராட்டத்திற்கு



அத்திவாரம் எமது தாயக மண்ணில் இட்டுத்தந்த பெருமையை பெண்போராளிகள் பெற்றுள்ளனர்.

கிருஷாந்தி, கோணேஸ்வரி, போன்ற பெண்களுக்கு நடந்த கொடுமை இனிமேலும் எமது மண்ணில் எமது பெண்களுக்கு இடம் பெறாமல் இருக்க வெண்டுமானால் எமது பலம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும். இடமிருக்காது.

கடந்தவாரம் இடம் பெற்ற தமிழீழப் பெண்களின் எழுச்சி நாள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன் பிரதானநிகழ்வு சிறிலங்கா படைகளால் பல கொலைச்சம்பவம் இடம்பெற்ற மகிழடித்தீவு கிராமத்தில் இடம் பெற்றமை யுத்தம் ஓய்ந்திருந்த இவ் வேளையிலும் சிறிலங்கா படைகளால் மக்கள் பட்ட அவலவாழ்வையும், படுகொலைகளையும் மீண்டும் ஒரு கணம் ஞாபகப்படுத்தியது.

இந்நிகழ்வின் போது மட்டக்களப்பு கல்வியல் கல்லூரி மாணவிகளின் ''நெருப்புக்குள் வாழ்வு'' எனும் நாடகத்தில் காட்டப்பட்ட காட்சிகள் வெறும் காட்சிகளாக மட்டும் அமையவில்லை.

மகிழடித்தீவுக் கிராமத்தில் கடந்த 1987ஜனவரி பல 28திகதி, மற்றும்1991யூன் 12ம் திகதி இடம்பெற்ற இருபடு கொலைச்சம்பவங்களையும் கோடிட்டுக் காட்டியது.

தமிழினப் படுகொலைகள் எல்லாமே வெறும் சம்பவங்களாக மட்டும் அல்லாமல் சரித்திரமாகப் பதியப்பட வேண்டும். அப்போது தான் நாளைய சந்ததியினர் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளை மனப்பதிவாக என்றுமே நினைப்பார்கள். இவ்வாறான நிகழ்வுகள் மூலம் இதனை வெளிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

இன்னுமொரு உண்மைச் சம்பவத்தை இந்த பெண்கள் எழுச்சி நாளில் மனப்பதிவாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறினார்.

மாணவியான கிருஷாந்தி கல்வியில் மிகவும் அக்கறையுடன் செயல்பட்டவர் பிரத்தியேக வகுப்பிற்காக சென்று திரும்பும் வழியில் செம்மணிச் சந்தியில் உள்ள சிறிலங்காப்படையினர் 1998ம் ஆண்டு அந்த மாணவியை வல்லுறவு செய்தமை பற்றியும் கிருஷாந்தியின் குடும்பத்தினர் கைதடியில் இருந்து தனதுமகளைக் கேட்டு கத்தியபோது மண்வெட்டி, கோடரி, பொல்லுகளால் கிருஷாந்தியின் குடும்பத்தைச் சேர்ந்த 7பேரையும் எவ்வாறு படுகொலை செய்தார்கள் என்பதையும் பாப்பா மிகவும் நிதானமாகக் கூறிய போது மகிழடித்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் இருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கண்களால் நீர் சொரிந்தது.

ஒரு கிருஷாந்தி அன்று படுமோஷமான முறையில் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தாயகம் முழுவதும் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தட்டி

**தமிழினப் படுகொலைகள் எல்லாமே வெறும் சம்பவங்களாக மட்டும் அல்லாமல் சரித்திரமாகவும் பதியப்பட வேண்டும்.**

எழுப்பியது. தமிழ் பெண்களின் உணர்வுகள் கிழந்தெழுந்தது அதனால் ஆயிரம் ஆயிரம் பெண்போராளிகள் படைகளில் இணைந்து கொண்டனர். என்ற உண்மையினையும் பெண்கள் எழுச்சி நாளில் பாப்பா கூறினார்.

**பொங்கி எழும் பெண்கள் எழுச்சி**

பெண்கள் போராடுவது மட்டுமல்ல கல்வித்துறை, கணனித்துறை, வர்த்தகத்துறை, விளையாட்டுத்துறை, கலைத்துறை, மருத்துவத்துறை, பொறியியல்த்துறை, சமுகவிஞ்ஞானத்துறை, என பலதரப்பட்ட துறைகளிலும் ஆண்களுக்கு சரிநிகராக செயற்படக்கூடியவர்களாக விழங்குகின்றனர்.

எமது தாயகத்தில் பெண் போராளிகள் இன்று பலதரப்பட்ட துறைகளிலும் வளர்ச்சியடைகின்றனர். பெண்கள் எழுச்சி தினத்தில் பெண் பேராளிகளை முற்றுமுழுதாகக் கொண்ட ஞானி இசைக்குழுவினரின் இன்னிசை இதற்கு எடுத்துக்காட்டாகும்,

ஆண்பாடகர்கள் இவ் இசைக்குழுவில் பாடினாலும் சகல இசைவாத்தியக் கருவிகளையும் எந்தவித தழம்பல்கள் இன்றி இயக்கிய விதம் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டும், பெண்ணின் பெருமை கூறும் பெண்கள் எழுச்சி நாளில் பெண்களின் ஆற்றல்களை வெளிக்காட்டுவதன் மூலம் வீட்டிற்குள்ளே அடங்கி இருக்கும் பெண்களுக்கு விவேகத்தையும் எழுச்சியையும் கொடுக்கும்.

இருதசாப்தங்களாக இடம் பெற்ற போராட்டத்தின் பின் எமது நாட்டில் இன்று எண்ணற்ற பெண்கள் அமைப்புக்கள்தலைமழைக்கு முளைத்த காளான் போன்று உருவாகியுள்ளன. இவ்வாறான அமைப்புகள் பெண் விடுதலையில் பெயரளவில் செயல்படாமல் செயலளவில் செயல்படுவதன் மூலம் பெண்ணின் பெருமையை மேலும் உயர்த்த முடியும் அல்லவா.

*-பாத்திரன்-*

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## இனியும் சிங்கள தேசத்தை நம்புவீர்களா?

### ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசாவுக்கு!

(அலைமகன் எழுதும் பகிரங்க மடல்)

இந்த மடல் உங்கள் கரம் கிடைக்கும் சமயத்தில் உங்கள் மனது வேதனைப்பட்டுக் கொண்டிருக்குமென நினைக்கிறேன்.

சிங்கள தேசத்தின் சிறிலங்கா பொலிஸ்படைப் பிரிவுக்கு அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் நீங்கள் ஓய்வு பெறும் காலம் வரை தமிழன் ஒருவன் சிறிலங்கா பொலிஸ் படையில் தலைமைப் பதவி வகிப்பது எவருக்கும் பிடிக்கவில்லை. சிங்களதேசம் சிறிலங்கா எங்கள் நாடு. ஆட்சி நடத்துவது எங்கள் இனம். அதில் உயர் பதவி வகிப்பதும், எங்கள் இனமே இது தான் சிறிலங்கா தேசத்தின் தத்துவ வாதம்.

இந்த தத்துவ வாதத்தில் நீங்கள் மட்டும் தப்பிவிட நியாயமில்லை. 36 வருடங்கள் சிறிலங்கா பொலிஸ் சேவையில் நீங்கள் ஒரு சேவகன். தற்போது அறுபது வயதைப் பூர்த்தி செய்கின்றீர்கள். இன்னும் ஒரு வருடம் இவர் இருந்து விட்டுப் போகலாம். எங்களினம் எதிர்க்க மாட்டார்கள். என எந்தச் சிங்களக் குடி மகனும் கூற மாட்டான். ஏனெனில் சிங்கள இனவாதம் அப்படித்தான் இப்போது ஓய்வு பெற்று விட்டீர்கள். எனினும் காலம் கடந்த பின் ஞான உபதேசம் போதிப்பதால் பயனில்லை. எனினும் விட்ட தவறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஈழப் போராட்டம் முதல் தற்போதய போர் ஓய்வுக் காலம் வரை தமிழினம் எவ்வளவு துன்பங்களை கொடூரங்களைச் சந்தித்திருக்கிறது.

சுமார் இருபது வருட காலப் போரில் சிங்கள தேசத்தின் ஆயுதப் படைகள் வடிவங்கள் வேறு வேறாக இருந்த போதும் அவர்களின் குணம், குறி தமிழ் இனத்தை வேட்டையாடுவது தான்

இராணுவம் என்றால் என்ன? அதிரடிப்படை என்றால் என்ன? கடற் படை, விமானப் படை, பொலிஸ் படை எந்தப் படையும் தமிழினத்துக்கு இரக்கம் காட்டியதாக ஈழப் போர் வரலாற்றில் பதிவுகளாக்கப்படவில்லை. தமிழன் இரத்தம் குடித்த வெறிப்படை என்ற பெயர்கள் தான் பதிவுகளாகத் தடம் பதித்து நிற்கின்றன.

இத்தகைய கொடூரமான கால கட்டத்தில் தான் உங்கள் சேவையும் சிங்கள தேசத்துக்குக் கிடைத்திருக்கிறது.

எமது தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிஸ் படையினராலும் வதையுண்டபோது சிறை, கண்ட போது இந்த ஆனந்தராசா மட்டும் மனமிரங்கியிருப்பாரா? என்னால் நம்ப முயவில்லை. அப்படி ஒரு நெகிழ்ந்த மனதுடையவராக நீங்கள் இருந்திருந்தால் சிங்கள தேசத்தின் காக்கிச் சட்டையை கழற்றிவிட்டு தமிழீழக் காவற்துறையுடன் கைகோர்த்திருக்கலாமல்லவா?

அப்போது சிங்கள தேசத்தின் காக்கிச் சட்டை உங்களுக்கு ஒரு கவசமாக இருந்திருக்கும். பதவிகள் உயர்வடைந்து உச்சத்தையடையும் போது தான் இந்தக் காக்கிச் சட்டை தரித்திருப்பதிலும் ஒரு ஆபத்து எதிர் நோக்குகிறது என்பதை உணர்ந்திருப்பீர்கள். இன்னும் கொஞ்ச நாட்கள் சிறிலங்கா பொலிஸ்மா அதிபராக நீங்கள் பதவி வகித்திருந்தால் உங்களின் அதே பதவி சுகத்தை அனுபவிக்கக் காத்திருப்போரின் தூண்டுதலால் நீங்கள் வேண்டுமென்ற சில குற்றச் சாட்டுகளுக்கு முகம் கொடுத்து உங்கள் காக்கிச் சட்டை கழற்றப் பட்டிருக்கும் எனக் கருதுகிறேன். எனவே இன்று ஆனந்த ராசாவுக்கு ஏற்பட்ட நிலைமைதான் சிங்கள தேசத்தில் உயர் பதவிக்காகச் சேவகம் செய்யும் தமிழன் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்பதை உணரத் தலைப்பட வேண்டும்.

எனவே இனியாவது தமிழினம் தமிழனுக்கு நிலம் வேண்டும் ஆள ஒரு தலைமை இருக்கிறது என்பதை நீங்களும் உங்களைப் போன்றவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

*இங்ஙனம*
*அலைமகன்*

# சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிற்கும் பெண்



பெண்ணின் பெருமையைக் கவிதை மூலமும் கட்டுரை மூலமும் வர்ணிக்காத கவிஞர்களே இல்லை எனலாம். பெண்கள் அடிமைத்தனம் பற்றி பாடிச்சென்ற கவிஞர்களுள் கவிஞர் பாரதி தாசனும் ஒருவர். பாரதியின் காலத்தில் பெண்கள் அடிமைத்தனம் பேணப்பட்டு வந்தது வீட்டை விட்டு வெளியில் செல்லக் கூடாது என்றும், பெண்கள் தொழிலிலே ஈடுபடக்கூடாது என்றும் கருதப்பட்டனர். ஆனால் இந்தக் காலத்திலோ பெண்கள் தொழிலில் ஈடுபடுவதில் முதன்மை யானவர்களாகக் காணப்படுகின்றனர். உதாரணமாக ஆசிரியர், தாதி, மருத்துவத் துறைகளில் பெண்களின் வீதம் கூடுதலாகவே காணப்படும். அடுத்து நம் நாட்டை எடுத்துக் கொண்டோமானால் நம் நாட்டை நல்ல விதத்தில் சமாதானப் பேச்சுக்கு அடி எடுத்து வைத்தது பெண்தான். நம் மட்டக்களப்பு மாவட்டத்தை எடுப்போமானால் மட்டு நகரில் உள்ள பாடசாலைகளான மட்/புனித சிசிலியா, மட்/வின்சற் போன்ற பாடசாலைகளில் அதிபராக இருப்பது கூட ஒரு பெண் தான். ``பெண் என்றால் பேயும் இரங்குமாம்." என்பது ஆன்றோர் வாக்கு. பெண் பிள்ளைகள் பிறந்தால் பெற்றோர் துக்கமடைகின்றனர். அதே நேரம் ஆண் பிள்ளைகள் பிறந்தால் சந்தோசமடைகின்றனர். இந்த நவ நாகரிக காலத்தில் பெண்கள் வித விதமான ஆடைகளை அணிகின்றனர். உலகில் பெண்ணுக்கே வித விதமான கொடுமைகள் நடக்கின்றன. பாலியல் வன்புணர்வுகள் போன்ற கொடுமைகள் பெண்களுக்கே உரியன. இதனால் இந்த நிலையில் பெண் சமுதாயம் பாதிக்கப் படுகின்றது. முற்காலத்தில் மடிந்து கிடந்த பெண்கள் சமுதாயம் தற்போது ஓங்கி தலை நிமிர்ந்து நிற்கின்றது. ஒரு பெண்ணானவள் ஒழுக்கம், அமைதி, நன்னடத்தை போன்ற வற்றில் முதன்மையானவளாகக் காணப் படுகின்றாள். முற்காலத்தைப் போல இந்தக் காலத்துப் பெண்கள் பாரதியின் புதுமைப் பெண்ணாகமிளிர வேண்டும்.

*மகாலிங்கம். வித்தியாஜினி*
*மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை.*

## அரிவையர்அலை



# முகம் அழகாய் இருக்க



**பெண்கள் தனது முகம் அழகாய் இருக்க வேண்டும் என்பதற்காக அனைவரும் கூறும் வழிமுறைகளைக் கையாள்வர். அப்படிக் கையாள்வது தவறு. அதற்காக இதோ சில அழகுக் குறிப்புக்கள்.**

*. தக்காளிப்பழத்தை சிறு துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவி வர கரும்புள்ளிகள் மறையும்.
*. பாலில் எலுமிச்சம் பழம் பிழிந்து முகத்தில் தடவி வந்தால் கரும் புள்ளிகள் மறையும்.
*. பப்பாளிப்பழத்தை கூழாக்கி முகத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து கழுவினால் முகத்தில் உள்ள வெடிப்பு தேமல் என்பன இருந்த இடம் தெரியாமல் மறையும்.
*. முட்டை வெள்ளைக்கரு பூண்டு ஆகியவற்றை அரைத்து முகத்தில் தடவி வர முகம் பளபளக்கும்.

வ. சஜி

## தெரிந்து கொள்வோம்

*1.நீரில் சிறிதளவு சோடா உப்பைக் கலந்து அதனால் குளிர்சாதனப் பெட்டி உள் அறைகளைக் கழுவினால் கறைகள் நீங்கும்.*

*2.முகம் பார்க்கும் கண்ணாடி மங்கிக் காணப்பட்டால் சிறிதளவு நீலத் தூளை நீரில் கரைத்து அந்த நீரினால் கண்ணாடியைத் துடைத்தால் கண்ணாடி பளிச்சிடும்.*

*3.கண்ணாடிகளுக்கு நீருடன் ஷம் பூ கலந்து துடைத்து பின் அதனை பேப்பரினால் துடைத்தால் கண்ணாடிகள் மினு மினுப்பாக இருக்கும் .*

*4.தோலால்ஆன கைப் பைகளுக்குச் சிறிதளவு கிளிசரின் போட்டுத் தேய்க்க பளபளப்பாகக் காட்சி தரும் .*

*5.தையல் ஊசியின் முனை கூர்மை அற்றிருப்பின் ஊசியை நெருப்புச் சுவாலையில் காட்டினால் கூர்மையாக இருக்கும்.*

*6.உடைகளை ஸ்திரிக்கை பண்ணும் போது ஸ்திரிக்கைப் பெட்டியின் அடிப்பகுதியில் சிறிதளவு சென்டைதெளித்து ஸ்திரிக்கை பண்ணினால் உடைகள் கமகமக்கும்.*

*7.வீட்டு மின்குமிழ்களின் மேல் சென்டைப் பூசி எரிய விட்டால்வீட்டில் நறுமணம் வீசும்.*

## இளம் பெண்களே!

**வணக்கம் வணக்கம் வணக்கம்**
**இளம் சிட்டுகளுக்கு வணக்கம்**
**எம் அறிவுரையைக் கேட்டு~என்றும்**
**அக மகிழ்ந்து வாழ்ந்திடுவீர்**

**வளர்ந்து வரும் போதினிலேஉங்கள்**
**உடம்பில் ஏற்படும் மாற்றங்கள்**
**பாலுணர்வு ஓமோன்கள் சுரந்து**
**உங்களைப் பரி தவிக்கச் செய்து விடும்.**

**சிந்தனைகள் செயல்களிலே**
**பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்தும்.**
**கற்பனையில் மிதக்க வைத்து**
**தடு மாற்றத்தைத் தந்து நிற்கும்.**

**கண்ட கண்ட இடங்களிலே**
**தேவையற்றுத் திரிய வேண்டாம்.**
**நெடிதுயர்ந்த காட்டினிலே**
**தனி வழியே செல்ல வேண்டாம்.**

**காதலென்ற போர்வையிலே**
**கள வொழுக்கம் வேண்டாமம்மா.**
**கரு வறையில் உயிர் வளர்ந்து**
**கருச் சிதைவும் செய்ய வேண்டாம்.**

**பிறக்கும் உயிர் ஒவ்வொன்றுமே**

**விருப்பின்படி பெற்றெடுத்து**
**மண்ணுலகில் சிறப்புடனே**
**வாழ்ந்து வளம் பெறச் செய்வீர்**

**ஆபாசத் திரைப்படங்கள்**
**பார்ப்பதை நிறுத்திவிட்டு**
**ஆக்க பூர்வ பணிகளிலே**
**மன அமைதிபெற்றிடுவீர்**
**மன அமைதி பெற்றிடுவீர்**



*ச.மூர்த்தி*

# கனவுகளே, கனவுகளே நிஜம்தானா?

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

*** கருச்சிதைவு**

நீங்கள் பெண்ணாக இருந்தால், நோய் சம்பந்தமான ஆபத்து உண்டாகும். ஆணாக இருந்தால் மனமுடைவு ஏற்படும்.

*** விபத்து**

விபத்துக்களைக் கனவில் காண்பது ஒரு எச்சரிக்கை ஆகும்.இவ் விதமான கனவுகளை முடிந்தளவு ஞாபகத்தில் வைத்திருக்க முயலுங்கள். உதாரணமாக கார் விபத்தைக் கனவில் கண்டால் பிரயாணத்தில் ஆபத்து உண்டாகலாம் என்று அர்த்தம். தண்ணீர் சம்பந்தமான விபத்தானால் காதல் வாழ்வை பாதிக்கப்படும் என்று அர்த்தம்.

*** தத்தெடுத்தல்**

நீங்கள் யாரையும் தத்தெடுப்பதாகக் கனவு கண்டால் நீங்கள் யாராலும் தத்தெடுக்கப்பட்டால், உங்கள் எதிரிகளிடம் தோல்வி அடைவீர்கள் என அர்த்தம். சிறுவர்களைத் தத்தெடுப்பதாகக் கனவு கண்டால் உங்கள் குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்படும் என்று அர்த்தம்.

*** வயது**

நீங்கள் வயது வந்தோரைக் கனவில் கண்டால் உங்களுக்கு அதிஸ்டம் உண்டாகும். நீங்கள் உங்கள் வயதைப் பற்றிக் கவலைப்படுவதாகக் கனவில் கண்டால் நீங்கள் நோய்வாய்ப் படுவீர்கள். உங்கள் மனைவியின் வயதைப் பற்றிக் கவலைப்படுவதாகக் கனவு கண்டால் நீங்கள் பிறரால் ஏமாற்றப்படுவீர்கள்.



*** ஆகாய விமானம்**

இது விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தவும். விமானம் தரையிலிருந்து எழும்பிப் பறந்தால் வெற்றி.

விமானம் தரையிறங்கினால் சிநேகிதரால் கெடுதி.விமானம் விபத்துக்குள்ளானால், தொழில் பாதிப்பு. நீங்கள் விமானத்தில் பறந்தால் , வெற்றி நிச்சயம். விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து, பாதுகாப்பாக உயிர் தப்பினால் பண வருவாய். விமான விபத்தில் இறந்ததாக நீங்கள் கனவு கண்டால் உங்கள் கோபத்தை அடக்க முயலுங்கள்.

*** அலுமினியம்**

பள பளப்பான அலுமினியத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் சந்தோசம் ஏற்படும். அலுமினியம் அழுக்காகக் காணப்பட்டால் வாழ்க்கையில் விரக்தியேற்படும்.



*** முதலை**

ஒரு முதலையைக் கனவில் கண்டால் எதிரிகளால் ஆபத்து.
பல முதலைகளைக் கண்டால், புதிய முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போகும்.



*** வாலில்லாக் குரங்கு**

கூண்டில் அடைக்கப்பட்ட வாலில்லாக் குரங்கைக் கண்டால் குடும்ப வாழ்க்கையில் பெரும் ஆபத்து ஏற்படலாம்.

## சோளன் அல்வா



தேவையான பொருட்கள்
சோளன் மா - 1சுண்டு
தேங்காய் துருவி வறுத்தது- 1/2 சுண்டு
சீனி- 1 சுண்டு
ஏலம், கறுவா, வெனிலா தேவையான அளவு

**செய்முறை: -**

**சோளன் பருப்பை தண்ணீரில் ஊறவைத்து இடித்து மாவாக்கி வறுத்து எடுத்தல். பின் துருவிய தேங்காயைப் பொன்னிறமாக வறுத்து எடுத்தல். பின் சீனியை நீர் விட்டு அடுப்பில் வைத்து காய்ச்சி பாகுப் பதம் வந்ததும் சோளன் மா, தேங்காய், ஏலம் கறுவா, வெனிலா ஆகியவற்றைச் சேர்த்துக் கிளறுதல் வேண்டும். பின் கலவை பாத்திரத்தில் ஒட்டாத பதம் வந்ததும் எண்ணெய்பு,சிய தட்டில் கொட்டி சமப்படுத்தி வெட்டி எடுத்து ஆறியபின் பரிமாறலாம்.**

*-வாசகி- மட்டுநகர்.*

## பெண்களே!

**உங்கள் ஆக்கங்களை இப்பகுதியில் பிரசுரிக்க தமிழ்அலை களம் அமைத்து காத்திருக்கின்றது. தரமான ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.**
**அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:**

**அரிவையர் அலை, தமிழ்அலை**
**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.**

## திரை பிம்பங்கள்

சினிமாவை வெறும் பொழுதுபோக்குச் சாதனமாகக் கருதாது அதனை முன்னோடியாகக் கருதி பல விடயங்களைப் பின்பற்றும் இளைஞர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். கடந்த காலங்களில் தமிழ்ச்சினிமா சொல்லிய காதல்த் தோல்வி, காதலுக்காக உயிரையும் கொடுப்பது, தாடி வளர்ப்பது, வாழ்வைச் சிதைப்பது, கற்பு பற்றிய கொள்கை, பத்தினி தத்துவம் போன்றவற்றால் சிதையுண்ட இளைஞர்கள் வாழ்வுகள் எத்தனை? இளையவர் கனவுகளைக் குறுகிய எல்லைக்குள் சிறையிட்டுச் செல்வதுதான் சினிமாவின் நோக்கமா? இன்றைய சினிமா இந்நிலையிலிருந்து ஒருபடி அதிகமாகச் சென்று விடலைப் பருவத்திலேயே பாலியல்ச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதும், தவறான எண்ணங்களைப் போதிப்பதுவுமாக ஆபாசமும், வன்முறையும் நிறைந்தனவாகவும் திகழ்கின்றது.



உலகளாவிய இளஞ்சாதனையாளர்கள் பற்றி அறியாதவரே. அலைந்துலைய வைக்கும் சீரழிவுகளிலிருந்து தப்பித்து, சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி, உரமாக்கக் கற்றுக் கொண்ட இளைஞர்கள் பலர் உள்ளனர். அதுவே இளமையின் வீரியம். அதுவே இளமையின் பொருள். இலக்குகளில்லாத இளமை வானவில் போன்றது. வாழ்வைத் தொலைக்கவைப்பது. இளமை ஆகர்ஷிப்புக்களை வனப்புக்களாக மாற்றிட நல்ல கருத்துக்களின் ஆக்கிரமிப்புக்கள் அவசியம். அதை விடுத்து இந்தத் திரைப்படம் ஆபாச உலகிற்கு அனுமதிச் சீட்டு வழங்கியிருக்கிறது.

பெற்றவர்கள் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளாததே மிகப்பெருந்தவறு என்று முழுக்க பெற்றவர் செயல்கள் தவறு என்கிற நெருப்புக்கு எண்ணெயூற்றி விடுகிறது. அது மட்டுமல்ல பெற்றவர்களை எதிரிகளாக எண்ணவைத்து, இளமைப் பருவத்தின் வேகத்தைத் தணித்து, சந்ததி இடைவெளிகளை இல்லாமல்ச் செய்வதை விடுத்துப் பிரிந்து போவதுதான் வெற்றியின் இரகசியம் எனத் தவறான கருத்தை ஊட்டுகிறது. கற்கும் பருவத்தில் பெற்றவரைவிடச் சிறந்த கூரையைப் பிள்ளைகளுக்கு வேறு எவராவது கையாண் டிருக்கலாமே? பாத்திரங்களுக்கு உயிரூட்டிய அற்புதமான புதுமுக இளம் நடிகர் குழாமின் திறமை, 500இற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கான திரைப்பட வாய்ப்பு, வியக்கத்தகு பிரமாண்டத்திற்கான தொழில்நுட்ப யுகத்தின் நடன அமைப்புக்கள், காட்சியமைப்பு என்பவற்றோடு, இசையின் சிகரம் தொட்ட ஏ.ஆர்.ரஹ்மானின் இனிய

# ஆபாச உலகிற்கு Boys அனுமதிச்சீட்டு

கொடுப்பாரா? பணத்தைக் காட்டி, பாதையை மாற்றி இளைஞர்கள் வாழ்வை சிதைக்க வெனவே காத்திருக்கிறது ஒரு உலகம். வெற்றிக்கான பாதையென இயக்குனர் கூறும் பாதையிலேயே அனைத்து இளைஞரும் செல்ல இளைஞர்கள் அப்படி இப்படியாக இருந்தாலும், இப்படித்தான் வாழ வேண்டும் எனக் கூறி எப்படியும் வாழாமல் காப்பதே ஊடகங்களின் கடன்.

சங்கரின் திரைப்படம் என்றால் சற்று வித்தியாசமாக, புதுயுக்திகள் நிறைந்ததாக இருக்கும் என நம்பிய எம்மை திடுக்கிட வைத்துள்ளார். இவைதான் புதிய யுக்திகளா?

'Boys' இல் பல நல்ல விடயங்கள் இல்லாமல் இல்லை. "முயற்சியுண்டேல் உயர்ச்சியுண்டு" "பல தோல்விகளின் பின்தான் வெற்றி ஒளிந்திருக்கிறது" போன்ற பல நல்ல கருத்துக்கள் படத்தின் பின்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளன. "குப்பையில் இருக்கிற குண்டுமணிகள்" போல் நல்லவற்றைச் சொல்ல தீயவற்றின் உதவி எதற்கு? யுக்தியை நாகரீகமாக இசை, கவிஞர் வாலியின் பாடல்கள் என்பன வியந்து பாராட்டத் தக்கனவாக உள்ளன. தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்தினம் நிச்சயம் தலையில் கைவைக்காத அளவு இந்தத் திரைப்படம் வசூலித்துக் கொடுக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. சரி, இத்தனை நல்ல விடயங்களோடு நல்ல கருத்துக்களை நாகரீகமாக இதே பிரமாண்டத்தோடு சொன்னால் திரையரங்குகளிலிருந்து இளைஞர்கள் படத்தைப் பார்க்கமாட்டோம் என்று வெளியேறித்தான் விடுவார்களா?

'Boys' ஐப் பின்பற்றி ஏனைய திரைப்படங்களும், ஆபாசங்களைத் துணிந்து அள்ளிவரின், தமிழ் சினிமா மட்டுமன்றி, தமிழ் உலகமே தன் தனித்துவத்தை இழந்துவிடும் என்பதில் ஐயமில்லை. தமிழின் தலைவிதியை மாற்றும் இதுபோன்ற ஆபாசக் கருத்துச் சிதைவுகட்கு இடமளிக்காது, சினிமா வெள்ளத்தால் அடியுண்டு போகாமல் ஒவ்வொரு தமிழ் இளைஞரும் தம்மைக் காக்க வேண்டும். அவர்களால் தமிழ் தனித்து அழகிய பண்பாடாய் மிளிர வேண்டும்.

---

## வாசகர் இதயம்

**எட்டுத் திக்கும் பாயும் அலையே!**

நீ சுமந்து வரும் ஒவ்வொரு ஆக்கமும் வெரி சூப்பர். என் கணவன் எனக்கு மட்டும் தான் தொடர் நாவல் தொடர்ந்து படித்து வருகிறேன். நாவல் மிகவும் சுவாரசியமாக உள்ளது. அலையே உன் அமோக வளர்ச்சி கண்டு அதிர்ச்சியுற்றேன். உன்முன் அட்டைப்படம் கண்ணைப்பறிக்கிறது. அரை ஆண்டு ஆவதற்குள் அமோக வளர்ச்சியடைந்து விட்டாய். உன் வளர்ச்சிக்கு நான் எப்படி நன்றி சொல்வேன். உன்னை வாழ்த்துவதற்கே வார்த்தை இல்லை. அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்களுள் அலைமகன் எழுதும் பகிரங்க மடல் என்னை மேலும்,மேலும் வாசிக்கத் தூண்டுகிறது. நீ உயர்ந்து விட்டாய் வளர்ந்து விட்டாய். இனி உன்னருகே எந்த எதிரியும் நெருங்காது. நெருங்க விடாதே உன் வளர்ச்சி மேலும் உயர வேண்டும். என்று வாழ்த்துகிறேன்.

ரீ.பிரசாந்தன், கல்முனை.

---

என் அபிமான வாரஇதழ் தமிழ் அலையின் சிறப்பையும் ஆற்றலையும் நான் அறிவேன். குறுகிய உன் வளர்ச்சியைக் கண்டு தமிழ் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்ற இவ்வேளையில் உன் ஓர் இதழான சிறுவர் சிகரத்திற்கு என் ஆக்கங்களையும் அனுப்பி வைக்கிறேன். என்னைக் கழிக்காது உன் வாசகர்களில் ஒருத்தியாகச் சேர்த்துக் கொள்வாய் என நம்புகிறேன்.

சு.நிர்மளாதேவி,
அம்/தம்பட்டை அ.த.க பாடசாலை

---

**என்அன்பிற்கினிய**

தமிழ் அலையே! நீ வாரம் தோறும் தனிச் சுகம் தந்து என்னை மகிழ்ச்சியடைய வைக்கிறாய். உன் மீது உள்ள அனைத்துப் பகுதிகளும் சூப்பரோ சூப்பர். அதிலும் போடியார் பொறிவெடி, விறுவிறுப்பான தொடர் நாவல், சிறுவர் சிகரம், காத்திரன் பதில் போன்றவற்றை நான் விரும்பிப் படிக்கிறேன். நீ வாரம் தோறும் குறித்த நேரத்திற்கு என் கரம் வந்து சேர்கிறாய். உன் பணி மென் மேலும் தொடர எனது நல் வாழ்த்துக்கள்.

T.உமாராஜ்,
முனைக்காடு.

---

*என் இதயம் கவர்ந்த தமிழ அலையே!*

உன் ஒவ்வொரு அலையின் ஓசையும் தனித்துவமே, தமிழ் அலையே நீ தமிழ் மக்களின் உணர்வலையாய் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலையில் இருந்து எழுந்து ஓசையெழுப்புவது பெருமையிலும் பெருமையே!

கடல் அலை ஒரு போதும் ஓய்வதில்லை. அது போல் நீயும் ஓயாத தமிழ் அலையாய் தமிழென்று குரல் கொடுத்து இலக்கிய மணம் வீசி உயரத்தேயெழுந்து வர தமிழ் அலையே உனக்கு என் இதயம் நன்றிகளும் வாழ்த்துக்களும் கூறிக் கொள்கிறது.!

*லோகேஸ்வரி - கிருஸ்ணமூர்த்தி*
*அக்கரைப்பற்று -07*

---

அன்புடன் தமிழர்களின் உள்ளங்களில் அலை அடித்துக் கொண்டிருக்கும் தமிழ் அலைக்கு எனது வாழ்த்துக்கள். சிறந்த கட்டுரைகளையும், மாணவர்களுக்கான பயிற்சி வினாக்களையும், பொது அறிவு வினாக்கள், மற்றும் மாவீரர்களின் வரலாறு என நீ சுமந்துவரும் விடயங்களுக்கு நன்றி. உனக்கு முன் எழுந்த பத்திரிகைகளினாலும்உன் பின் எழும் பத்திரிகைகளினாலும் உன்னை உடைத்து விட முடியாது எனவே நீ நீண்டகாலம் நிலைத்திருக்க எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

உனது வாசகன், எஸ்.ஜி. வரதன்,சித்தாண்டி.

---


## வியப்பூட்டும் உண்மைகள்




பெய்ரூட்டிலுள்ள அல் கயாத வைத்தியசாலையில் சென்ற 11ம்திகதி ஒரே சூலில் ஆறு குழந்தைகள் பிறந்துள்ளன. வளர்ச்சி குன்றிய இப்பிள்ளைகளில் மரியம் என்பவரையே படத்தில் காண்கின்றீர்கள்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள மிருகக்காட்சிசாலையில் 'எச்சிட்னர்' என்னும்மிருகம் உள்ளது. இது முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் தன்மை கொண்டது. ஆனால் குஞ்சுகளுக்குப் பாலூட்டி வளர்க்கும்.





சாம்லெக் என்னும் ஆறு கால்களையுடைய பசு கம்போடிய விவசாயியொருவரால் மதகுரு ஒருவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அக்கன்றினையே படத்தில் காண்கின்றீர்கள்.



இது யப்பானிலுள்ள செயற்கைக் கடற்கரையாகும். இதற்குக் கரையில்லை. இதனுடைய முக்கியம்சங்கள் ,கட்டுப்பாட்டிற்குள் உள்ள காலநிலை, வருடம் முழுவதும் வசந்த கால சூழல், கட்டுப் பாட்டிற்குள் உள்ள நீரின் உஷ்ணம், விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட மணல், இம்மண்ணில விளையாடும் போது உண்மையாக மண்ணிலில் விளையாடுவது போன்ற உணர்ச்சி உடம்பில் ஒட்டாது.

# சிறுவர் சிகரம்



## வைத்தியக் கூலி



ஒரு காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அதன் வாய்க்குள் முள் ஒன்று குத்திக் கொண்டது. அதனை அகற்றுவதற்கு அது தன்னால் ஆன மட்டும் முயற்சி செய்தது. ஆனால் அதனால் முள்ளை எடுக்க முடியாமல் போய் விட்டது. நரி நீண்ட அலகை உடைய கொக்கிடம் சென்றது. அது தனது காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக இதமாகப் பேசியது. ''கொக்கண்ணாச்சி! எனக்குத் தொண்டையில் முள் குத்தி விட்டது. உனது நீண்ட அலகினால் எடுத்து விடு! நீ கை தேர்ந்த வைத்தியன் என்று இந்தக் காட்டில் ஒரே பேச்சாக இருக்கிறது'', என்று நரி கொக்கிடம் கூறியது. கொக்கு ஆம் என்று சொல்லி விட்டு நரியின் வாய்க்குள் தனது நீண்ட சொண்டை இட்டு முள்ளை வெளியே எடுத்தது.

பின் கொக்கு தான் வைத்தியம் பார்த்ததற்கான கூலியைக் கேட்டது.

''நான் உனக்கு வைத்தியக் கூலியைத் தந்து விட்டேன். நீ உனது தலையை எனது வாய்க்குள் இட்டிருக்கும் பொழுது நான் கடிக்காமல் விட்டேனே, அது தான் நான் உனக்களித்த வைத்தியக் கூலி. சரி தப்பிப் போ'' என்றது. கொக்கு வெறுங் கையோடும், ஏமாற்றத்தோடும் திரும்பிச் சென்றது.

## சிந்தனைக்குச் சில பொன் மொழிகள்

01. சட்டம் மரணத்தைப் போல் இருக்க வேண்டும்.மரணம் எவரையும் விட்டு வைப்பதில்லை. (மான்டெஸ்கி)

02. மழை பொழியும் போது பணக்காரன் வீட்டு ரோஜாச் செடியோடு ஏழையின் கீரையும் பயிராகிறது. (ஜேர்மனியப் பழமொழி)

03. துஷ்டன் எங்கே போனால் தான் என்ன. அவனுடைய துஷ்டத் தனமும் அவனை விட்டுப் போவதில்லை. (பஞ்ச தந்திரம்)

04. உன் அயலான் சலித்து உன்னை வெறுக்காத படிக்கு அடிக்கடி அவன் வீட்டில் கால் வையாதே. (பைபிள்)

05. இதயம் ரோஜா மலராக இருந்தால் பேச்சில் அதன் வாசனை தெரியும். (ரஷ்ய வாக்கியம்)

06. உணர்ச்சி அரியணையிலிருக்கும்போது அறிவு புறக் கடை வழியாக வெளியேறுகிறது. (என்-ஹென்றி)

07. கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பது மேல். அறியாமை தான் துரத்திஸ்டத்தின் மூல வேர். (விவேகானந்தர்)

08. உன்னால் கேடுற்றவனையும், நண்பனாக மாறிய எதிரியையும் விசுவாசமுள்ளவனாகக் கருதக் கூடாது. (பஞ்ச தந்திரம்)

09. அடிமைத் தனத்திற்கு மூலம் கொடுங்கோலனுடைய பலம் அல்ல,அடிமையின் கோழைத் தனம். (பாபுராவ்)

10. ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல மனிதனுக்கு நல்ல சொத்தாகும். (வில்லியம் ஹாஸ்லிட்)

*திருமதி-கே.லோகேஸ்வரி அக்கரைப்பற்று-07*

## உலகின் முதல் பெண் மணிகள்

01. உலகின் முதல் தற்கொடைப் பெண் கரும்புலி யார்? அங்கயற் கண்ணி

02. உலகின் முதல் பெண் விமானி யார்? மைலி எலிசி

03. உலகின்முதல் பெண் வழக்கறிஞர் யார்? அரபெல்லா மேன்ஸ் ∴பீல்ட்

04. உலகின் முதல் பெண் மருத்துவர் யார்? எலிஸ பெத் பிளக் வெல்

05. உலகின் முதல் விண்வெளி வீராங்கனை யார்? வலன்டினா டெரஸ்கோவா

06. உலகின் முதல் பெண் நீதிபதி யார்? எஸ்கார் மோரிஸ்

07. உலகின் முதல் பெண் பொலிஸ் யார்? அலிஸ் ஸ்ரெப்பின்ஸ்

*திருமதி- எஸ் :-சாந்தி, மகிழை-01*

## கற்றபடி வாழ்

'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் இது பொருத்தமாகத் தோன்றவில்லை. கண்ட கண்ட நூல்களைப் படிப்பதால் காலமும் முயற்சியும் வீணாகும். அறிவு திரியும், வாழ்க்கை பாழாகும். அறிவு நலமில்லாத பல நூல்களைக் கற்பதை விட அறிவூட்டும் சில நூல்களைப் படிப்பது நல்லது.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். அவற்றையும் ஐயந்திரிபில்லாமல் ஆழ்ந்து கற்க வேண்டும். கற்றதோடு நிற்பதால் பயனில்லை. கற்ற படி நிற்க வேண்டும். படித்தவைகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ வேண்டும். கல்வி கற்றதன் பயன் அப்போதுதான் உண்டாகும்.

*''கற்கக் கசடறக் கற்பவை, கற்ற பின் நிற்க அதற்குத் தக''*


*எம்.ஹேமா,செட்டிபாளையம்.*

## தமிழ் புலவர்கள் இயற்றிய நூல்கள்

1) அகத்தியன் - அகத்தியம்
2) அகிலிராம பண்டிதர் - தைடதம்
3) அபிராமிப்பட்டர் - அபிராமி அந்தாதி
4) அப்பர் - 4,5ம்,6ம் திருமுறைகள்
5) அருணகிரிநாதர் - திருப்புகழ்
6) இராசப்ப கலிங்கராயர் - திருக்குற்றால குறவஞ்சி
7) இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம்
8) இறையனார் - இறையனார் காவியம்
9) உமறுப்புலவர் - சீறாப்புராணம்
10) உமாபதி சிவாச்சாரியார் - சித்தார்ந்த அட்டகம்.
11) ஒட்டகக்கூத்தர் - தக்கயாகப்பரணி
12) ஔவையார் - நல்வழி, நீதி நூல்கள்
13) நக்கீரர் - திருமுருகாற்றுப்படை
14) சுந்தரம்பிள்ளை - மனோன் மணியம்
15) கபிலர் - குறிஞ்சிப்பாட்டு

*செல்வி.இளநிதி வரதராஜன்*
*ஆண்டு-12, வர்த்தகம்*
*மட்/வின்சன் உயர்தரபெண்கள் பாடசாலை.*

## உங்களுக்கு தெரியுமா?



01. எவரஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண்மணி யார்?
ஜப்பானிய நாட்டைச் சேர்ந்த திரு.திருமதி ஜீன் கோடா பெய் என்பவர்.


02. ஆயிரம் ஏரி என்பது எந்த நாட்டைக் குறிக்கும்?
பின்லாந்தைக் குறிக்கும்.

03. கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பமான ஆண்டு?
1893ம் ஆண்டு ஆரம்பமானது.

04. கொழும்பில் மின்சார வெளிச்சம் எப்போது வந்தது?
1895ம்ஆண்டில்.

05. இந்தியாவில் மிகப் பெரிய மாகாணம்?
(மாநிலம்) உத்திர பிரதேசம் .

## கண்



* மனித கண்ணில் 6கட்தசைகள் இணைந்துள்ளன.

* மனித கண்ணின் சுவர் 3படைகளினால் ஆனது.

*கண்ணின் விட்டம் அண்ணளவாக 2.5 செ.மீ ஆகும்.

* கண்ணின் உச்ச விட்டம் 8 மி.மீ ஆகும்.

* கண்ணின் இழிவு விட்டம்1.5 செ.மீ ஆகும்.

* கண்ணின் ஒளி உறுதுணர்ச்சிக் கலங்கள் ஆன படை விழித்திரையில் காணப்படுகிறது.

பா. புரந்தரன், தரம்-8
மட/கன்னன்குடா மகா வித்தியாலயம்

## விடுகதைகளும் விடைகளும்

01. இடி இடிக்குது மின்னல் மின்னுது! மழையைக் காணோம்! அது என்ன?
02. சிங்காரி அவள் சிவப்பு, நீர் பட்டால் கறுப்பு!அவள் யார்?
03. ஓடி வரும் மனிதன், ஒளியில் தெரிவான், இருளில் மறைவான்! அவன் யார்?
04. நெட்டையன் ஓட ஓட, குட்டையன் விடாமல் விரட்டுகிறான் அவன் யார்?
05. வரி வரியாய் உயர்ந்திருக்கும் படியும் அல்ல, பருவத்தைக் காட்டும் பெண்ணும் அல்ல, மணப் பந்தல் முன் நிற்கும் மாப்பிள்ளையும் அல்ல அது என்ன?
06. பச்சைப் பாம்பு வயிற்றுக்குள் ஆயிரம் கற்கள். அது என்ன?
07. ஊரடங்கிய வேளையில் விழித்திருப்பான் கள்வன்.அவன் யார்?

சி.பிரசாந்தினி
தரம்-5A
மட்/தாளங்குடா
ஸ்ரீ.வி.வி

விடைகள்
01. பட்டாசு
02. நெருப்பு
03. நிழல்
04. கடிகாரமுள்
05. வாழைமரம்
06. புடலங்காய்-விதை
07. இருள்-விளக்கு

## மனித மூளை

1. மனித மூளை இறைவன் நிர்மாணம் செய்த உலகத்தின் முதல் கணணி ஆகும்.
2. நல்ல ஆரோக்கியமான ஒரு மனித மூளையின் எடை ஒரு கிலோ 360 கிராம் ஆகும்.
3. ஒவ்வொரு மனிதனும் தன் மூளையை 7வீதமே பயன்படுத்துகின்றான். அறிவாளி 10வீதம். விஞ்ஞானி 12வீதம் ஆகும்.
4. மூளையிலுள்ள சாம்பல் நிற மடிப்புக்களை வைத்தே ஒருவருடைய புத்திசாலித்தனம் அமைகின்றது. மடிப்புக்களின் பெயர் ''செரிப்ரம்'' ஆகும். இது மூளையின் $^2/_3$ பகுதிகளை ஆக்கிரமிக்கின்றது.
5. பிறந்த குழந்தையின் மூளை 370 -400கிராம் ஆகும்.
6. மூளையின் நரம்புகள் கோடிக்கணக்கான உயிரணுக்களால் ஆனது. இதன் பெயர் ''நியூரன்கள்'' ஆகும்.
7. மூளைக்கு ஒரு நிமிடத்துக்கு 800 மில்லி இரத்தம் தேவை.
8. மூளையானது மண்டை ஓட்டுக்குள் ஈரமாய் பழுப்பு நிறத்தோடு ஒரு திரவத்தில் மிதக்கிறது.
9. மூளையின் ''கார் டெக்ஸ்'' பகுதிகள் சிந்தனையைத் தோற்றுவிக்கும்.
10. மனம் என்பது கூட்டம் கூட்டமான நியூரன்களின் செயற்பாடு ஆகும்.
11. மூளைக்குப் போக வேண்டிய இரத்தத்தின் அளவு குறையும் போது பழைய ஞாபகங்களெல்லாம் மறந்து போகும். இந்த வியாதி ''அல்சைபர்'' எனப்படும்.


ச.அஸ்விதீன்,1ம் பிரிவு , மண்டூர்




# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## புலமை துரித மீட்டல் -2003
## வினாத்தாள்- 3
## பகுதி-02

* பின்வரும் படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?




1.இதனைத் தயாரித்த நாட்டின் பெயர் என்ன?

2. இதற்குள் இருக்கும் மீனின் நிறை யாது?


3. ரின் மீனின் நிறை யாது?

4. வடித்த எடை தவிர ரின்னின் எடை யாது?

5. உற்பத்தித் திகதிக்கும் காலாவதித் திகதிக்கும் எத்தனை வருடம் வித்தியாசம்?

6. ''ரின் மீன்'' என எழுதப்பட்டுள்ள பகுதியின் வடிவத்தின் பெயர் என்ன?

7.




A, B,C யைக் கொண்டு மேற் கூறிய அமைப்பைத் தயாரிக்கலாமா?

8. A ,B, C யைக் கொண்டு நீர் அமைத்த உருவின் முகங்களின் எண்ணிக்கை, விளிம்புகளின் எண்ணிக்கை, வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கையை முறையே தருக?

* பின்வருவனவற்றை ஒரு வித்து, பல வித்து என இரண்டாக இலக்கத்தின் அடிப்படையில் வேறுபடுத்துக?

| | |
|---|---|
| 1. தென்னை | 5. தோடை |
| 2. மிளகாய் | 6. மா |
| 3. றம்புட்டான் | 7. வேம்பு |
| 4. திராட்சை | 8. பலா |

9. ஒரு வித்து தாவரங்கள் எவை?
10. பல வித்து தாவரங்கள் எவை?

* கீழே தரப்படும் வினாக்களை இலக்கத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது சரியான விடையின் தொடர் இலக்கங்களை எதிரே உள்ள பெட்டியில் எழுதுக?

* அடைப்புக்குள் தரப்படும் வினாவுக்குரிய விடையைத் தெரிந்து கீறிடுக?


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 1 ஓலை வீடு | 2 நீரில் ஊறப் | 3 தென்ன மரம் | 4 பின்னிய ஓலை | |
| 12 | 1 பாலர் பாடசாலை | 2 கனிஸ்ட பாடசாலை | 3 சிரேஸ்ட பாடசாலை | 4 பல்கலைக் கழகம் | |
| 13 | 1 முட்டை | 2 முட்டையை அடைகாத்தல் | 3 கோழி | 4 குஞ்சு | |
| 14 | 1 மரம் | 2 கதிரை | 3 மரம் தறித்தல் | 4 பலகை | |
| 15 | 1 மரம் | 2 காய் | 3 பூ | 4 மொட்டு | |

16. 1/[illegible]+1/4)=1 1). 1/4 2).1/2 3).2/8

17. 0.3+(0.5)=0.8 1)3/10 2)5/10 3)8/10

18. LX-(XX+X)=XXX 1)XX 2)XXX 3)XXXX

* பின்வரும் படத்தின் பாகங்களைக் குறிப்பிடுக?
19. A, B, C குறிக்கும் பாகங்கள் எவை?
20. D E F குறிக்கும் பாகங்கள் எவை?




* சரியான விடையின் கீழ் கோடிடுக?

21. ஆசிய நாடொன்றில் அண்மையில் சதிப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியது
1. பாகிஸ்தான் ஜனாதிபதி - ஜெனரல் பேர் வஸ் முஷாரப்
2. அங்கோலிய கிளர்ச்சித் தலைவர் - ஜெனரல் சவீம்பி
3.சிம்பாப்வேயின் ஜனாதிபதி -றொபேட் முகாபே

22.யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்.
1.தம்பான 2.பின்னவலை 3.வட்டவளை

23.ஐ.நா.சபை என்பதன் முழுத் தமிழ் வடிவம் என்ன?
1.ஐந்து நாடுகள் சபை
2.ஐரோப்பிய நாடுகள் சபை
3.ஐக்கிய நாடுகள் சபை

24.ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் யார்?
1.கொபி அன்னான்
2.கே.ஆர்.நாராயணன்
3.ஜோஜ்.டபிள்யூ.புஷ்

25.கொழும்பில் கடலுடன் கலக்கும் ஆறு?
1.களனி கங்கை
2.ஜின் கங்கை
3.வளவ கங்கை

26.நவீன விளையாட்டுக்களை குறிக்கும் விடை?
1.காற்பந்து ,கரப்பந்து
2.சதுரங்கம்,கிளித்தட்டு
3.துடுப்பாட்டம்,மரதன் ஓட்டம்


27.ஒவ்வொரு தாள் காசிலும் இருவரின் கையொப்பங்கள் உள்ளன. அவர்கள் இருவரும் யார்?
1.ஜனாதிபதி, பிரதமர்
2.ஜனாதிபதி, நிதியமைச்சர்
3.நிதிஅமைச்சர், மத்தியவங்கி ஆளுனர்

28. இலங்கையின் பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் எத்தனை வருடங்கள்? 1.10 2.8 3.6


29.அண்மையில் பரவிய சால்ஸ்வைரஸ் காச்சலால் கூடுதலாக பாதிக்கப்பட்ட நாடு?
1.இலங்கை 2.இந்தியா 3.சீனா

30.புதிய தபால் அட்டை(postcard) இதில் ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி என்ன?
1.ரூபா2.00 2.ரூபா3.10 3.ரூ4.50

31.
1.வேலை, கஷ்ரம், கப்பி
2.வேலை, நீர், இலகு
3.இலகு, பொறி, வேலை



32.



இவ்வாறான கோடுகளால் நிறந் தீட்டப்பட்ட பகுதியின் மொத்தஉருவின் என்ன பின்னம்?
1.1/6 2.1/4 3.1/3

33. இவ்வாறு நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்? 1.1/12 2.6/12 3.11/6

34. , என நிழற்றப்பட்ட பகுதிகள் தவிர்ந்த நிழற்றப்படாத பகுதிகள் முழு உருவின் என்ன பின்னம்?
1 /12 2.7/12 3.6/12

35. 1/2 -1/3 =
1. 2/5 2.1/6 3.1/3

*.பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்க விடை தருக?

முஸ்தபா, டீ.சில்வா, சுப்பிரமணியம் ,டேவிட் ஆகிய 4மாணவர்கள் ஒரே பாடசாலையில் பயிலுகின்றனர்.பாடசாலை ஆரம்பிக்கும் போது இவர்கள் தத்தமது சமயங்களை அனுஷ்டிப்பதோடு பாடசாலைக் கீதத்தையும் தேசிய கீதத்தையும் இசைப்பர்.

இதற்கேற்ப அட்டவணையை நிரப்புக.

36.

| பெயர் | இனம் | சமயம் |
|---|---|---|
| முஸ்தபா | ............... | ............... |
| டி.சில்வா | ............... | ............... |
| சுப்பிரமணியம் | ............... | ............... |
| டேவிட் | ............... | ............... |

37.இவர்களில் நான்கு இனத்தையும் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக ?

38.இந்த நான்கு பேராலும் கொண்டாடக் கூடிய ஒரு பொது உற்சவம் எது?

39.இலங்கை மக்களின் ஒற்றுமையைக் குறிக்கும் பாடல் எது?

40.இம் மாணவர்கள் கொண்டாடும் பண்டிகைகளை எழுதுக?
முஸ்தபா-
டி.சில்வா-
சுப்பிரமணியம்-
டேவிட்-

## விடைகள்

1.southamerica/தென் அமெரிக்கா
2.300g
3.425g
4.125g
5.1வருடம்
6.உருளை
7.ஆம்
8.2,2,2
9.1,3,6,7
10.2,4,5,8
11.3,2,4,1
12.1,2,3,4
13.3,1,2,4
14.1,3,4,2
15.1,4,3,2
16.1/2
17.5/10
18.X X X
19.A-உணர்கொம்பு
B-தலை
C-நெஞ்சு
20.D-வயிறு
E-கால்
F-சிறகு
21.(1)
22.(11)
23.(111)
24.(1)
25.(1)
26.(1)
27.(111)
28.(111)
29.(111)
30.(111)
31.(111)
32.(111)
33.(1)
34.(11)
35.(11)
36.பெயர்
முஸ்தபா-
டி.சில்வா-
சுப்பிரமணியம்-
டேவிட்-
இனம்
முஸ்லீம்
சிங்களம்
தமிழ்
பறங்கியர்
சமயம்
இஸ்லாம்
பௌத்தம்
இந்து/சைவம்
கிறிஸ்தவம்
37.இலங்கையர்
38.சுதந்திரதினம் /குடியரசு தினம்
39.தேசிய கீதம்
40.முஸ்தபா-நோன்புப் பெருநாள்
டி.சில்வா-பொசான்
சுப்பிரமணியம்-தீபாவளி
டேவிட்-ஈஸ்டர்

(தொடரும்)

ச.ஜெயாகரன்.
விபுலாநந்தா வித்தியாலயம், பழுகாமம்



இவன் பசுவின் பாலை கறந்தால்
'பசு பால் தரும்' என்கிறான்..
காகம் இவன் வடையை எடுத்தால்
'காகம் வடையைத் திருடிற்று'
என்கிறான்..
இப்படியாக மனிதன்.

வரலாற்றுச் சிறுகதை

# மகுடத்தை வென்ற மட்டக்களப்பு மன்னன்!

மகாவலியும், குமுக்கன் ஆறும் ஆரத் தழுவி மகிழும் அந்த மருத பூமியில் ஒரு மகாராணி போல மிகுந்த சௌந்தரியத்தோடு வீற்றிருக்கிறது மட்டக்களப்பு மாநகரம். பழம் பெருமை மிக்க அந்தப் பட்டினப் பாக்கத்தில் சுண்ணத்தில் பெருந் தேன் பெய்து கட்டப்பட்ட பென்னம் பெரு அரச மாளிகையின் வாயில் கோபுரம் முகில் பட்டணிந்து தனக்கே உரிய ராஜகம்பீரத் தோடு எழுந்து நிற்கின்றது.

கடல் ஓசையா இல்லை கலங்களின் ஓசையா என்னும் வினாவுக்குப் பதில் உரைக்க இயலாத விதத்தில் இரண்டு ஓசைகளின் சங்கமமாக விளங்கும் மட்டக்களப்புத் தேசத்தின் சம்பான்துறை (சம்மாந்துறை) முகத்திற்கு அரேபிய யவன மரக்கலங்கள் பொன்னோடு வந்து கறியோடும் நெல்லோடும் பெயர்கின்றன. அதில் கறுவாவின் நறுமண வாசனையில் அந்தப் பிரதேசம் முழுவதுமே மூழ்கிப் போகின்றது.

காற்று மெல்லக் கால்வைத்து நடக்கும் காலைப் போது அது! பாண்டிய நாட்டு மன்னன் ஸ்ரீ மாற வல்லபனின் தந்தை முதலாம் வரகுண பாண்டியனின் ஈழப் படையெடுப்பினால் சற்றுத் தளர்ந்து போன மட்டக்களப்புத் தேசத்தை அதன்அரசி இரத்தினவல்லியிடமிருந்து மீட்டெடுத்த பெருவீரன் தருமசிங்கன், அரண்மனையின் நிலாமுற்றத்தில் நின்றவாறு தனது தேசத்தின் 'தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்கும்' பேரழகை இரண்டு விழிகளாலும் அள்ளிப் பருகிக் கொண்டிருக்கிறான். அந்தச் சமயம் - சிவபூசையிலே கரடி புகுந்தாற்போல, அவசர அவசரமாக ஓர் காவலன் ஓடோடி வந்து அவனிடம் ஒரு திருமுகத்தைக் கொடுத்து விட்டுப் பணிந்து நிற்கிறான். திருமுகத்தை உடனடியாகவே விரித்துப் படித்த அரசனின் கண்கள் அகல விரிகின்றன. முகத்தில் மகிழ்ச்சி முத்திரை பதிக்கின்றது.

மறுநாள் மட்டக்களப்பு மன்னனின் 'ஓலக்கம்' கூறுகின்றது. சிங்காசனத்தில் அரசன் ஏறு என. வீற்றிருக்கின்றான். அவனைச் சூழ அமைச்சர்கள் அமர்ந்திருக்கின்றனர். மன்னன் வாயிலிருந்து புயலென ஓர் அறிவிப்புப் புறப்படுகின்றது. அது அங்கிருந்த அனைவரையுமே ஆட்டி அசைத்து விடுகின்றது. அனுராதபுரத்து அரசன் இரண்டாம் சேனன் பாண்டிய நாட்டின் மீது எந்த நேரத்திலும் படை எடுக்கலாம் என்ற அந்த அறிவிப்பு புயலைச் சற்றும் எதிர்பாராத தலைமை அமைச்சர் பாண்டியநாட்டின் மீதா?எதற்காக ? என்கிறார். வியப்பு அவர் விழிகளை நிறைக்கின்றது.

வேந்தனைவிட நாட்டின் விவகாரங்கள் அத்தனையையும் தனது விரலின் நுனியில் வைத்திருக்க வேண்டிய அமைச்சன் அறியாமையின் வடிவமாக அமர்திருப்பதை அவதானித்த தரும சிங்கன் அவன் மீது ஓர் ஏளனப் புன்னகையை வீசி விட்டு ஒரு பழைய வரலாற்றை அவைமுன் கொண்டு வந்து நிறுத்துகிறான்.

மதுரையின் மன்னனாக முதலாம் வரகுணபாண்டியனும் அனுராதபுரத்து அரசனாக முதலாம் சேனனும் அரசு செய்தகாலம் அது. அக்காலம் ஒருநாள் பாண்டியன் ஈழத்தின் மீது படையெடுக்கின்றான். சேனை கண்டு அஞ்சிய சேனன் அரச திரவியங்களோடு மலையகத்திற்கு ஓடி ஒளிந்து கொள்கிறான். பாண்டியன் படையின் கையில் அனுராதபுரம் பந்தாக உதைபடுகின்றது.

ஈழத்தின் வரலாற்றில் ஒரு சிறு நிகழ்வை எடுத்தியம்பிய மட்டக்களப்பு மன்னன் பாண்டிய மன்னனின் இந்தப் பாவச் செயலுக்கு அவனைப் பழிதீர்க்கவே ஈழம் இப்போது அவனது நாட்டின் மீது படை நடத்துகின்றது என்று நீங்கள் யாராவது கருதுவீர்களாயின் அது உண்மையாகாது என்று அவன் உறுதியான குரலில் தெரிவித்த போது ஓலக்கம் ஒருவித பரபரப்போடு எழுந்து உட்கார்ந்து கொள்கின்றது.

அவையின் மன ஓட்டத்தை நன்றாகவே நாடிபிடித்துப் பார்த்து அறிந்து கொண்ட அரசன் எனது கூற்றுக்கு ஒரு பலமான காரணம் இருக்கிறது என்று கூறிவிட்டு அவையைத்தன் விழிகளால் ஊடுருவு கின்றான். அதனால், அவையின் பரபரப்பு இன்னும் அதிகமாகின்றது. அந்தச் சமயத்தில் பாண்டிய நாட்டில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் வாரிசுரிமைச் சண்டையின் பக்கம் அத்தாணி மண்டபத்தைத் திருப்பி விடுகிறான் அரசன்.

பாண்டிய மன்னன் ஸ்ரீமாற வல்லபனுக்குப் பின் அவனது பட்டத்து வாரிசாக அரியணையில் அமர வேண்டியவன் இளவரசன் இரண்டாவது வரகுண வர்மன். ஆனால் வரகுணன் வாரிசாவதை விரும்பாத பாண்டியன் தனது இளைய ராணியின் வயிற்றில்



உதித்த வீர நாராயணனுக்கே அரசு உரிமையை அளிக்கும் ஆயத்தங்களில் ஈடுபடுகின்றான். அரசனின் இந்த ஏற்பாட்டை எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ள இயலாத வரகுணவர்மன் ஈழம் வந்து அனுராதபுரத்து அரசனின் உதவியை இரந்து நிற்கின்றான். சேனனின் நல்ல சினேகிதன் வரகுணன்.

மன்னன் எடுத்துரைத்த மதுரையின் நிகழ்கால வரலாற்று நிகழ்வொன்றையும் அதில் பொதிந்துள்ள போருக்கான காரணத்தையும் தெளிவாகப் புரிந்து கொண்ட அரச அவையில் நிசப்தம் நிலவுகின்றது.

அத்தாணி மண்டபத்தில் அந்த வேளையில் நிலவிய அத்தகைய அமைதியினால் பொறுமை இழந்த மன்னன் இன்னுமொரு மிக முக்கிய செய்தியை அங்கு தெரிவித்த போது நிசப்தம் கலைந்து ஆரவார அலை மோதுகின்றது.

பாண்டிய நாட்டின் மீது போர் தொடுக்கும் ஈழப்படைக்கு மட்டக்களப்பு மன்னனே தலைமை தங்குகின்றான் என்ற அந்தச் செய்தியால் எழுந்த மகிழ்ச்சி வெள்ளம் அத்தாணி மண்டபத்திற்கு வெளியேயும் பொங்கி வழிகின்றது. அடுத்த கணம் மதுரையை எதிர்த்து மட்டக்களப் பெங்கும் போர் முரசு ஓங்கி ஒலிக்கின்றது. வீட்டிற்கொரு வீரன் புறப்படுகன்றான் அன்னையர் ஆரத்தி எடுத்து திலகம் இட்டு அந்த மறவர் குலத்திலகங்களை ஆலவாய் அழகரின் மதுரையம்பதிக்கு அனுப்பி வைக்கின்றனர். மட்டக்களப்புத் தேசம் போர் முரசம் எழுப்பும் பேரொலிக்குள் புதைந்து போகின்றது.

மட்டக்களப்புத் தேசத்தின் வரலாற்றில் அது ஒரு மறக்க முடியாத நாள். மன்னன் தரும சிங்கன் தலைமையில் மூவாயிரத்துக்கும் அதிகமான மறவர்கள் மகா தீர்த்தத்திலிருந்து மதுரை மா நகருக்கு அணி · திரள்கின்றனர். ஈழத்தையும் தமிழகத்தையும் இரு கூறாக்கிப்பிரித்து வைக்கும் அந்த நீரிணையை மரக்கலங்களில் கடந்து செல்லவிருக்கும் அந்த மகா வீரர்களை அனுராதபுரத்து வேந்தன் இரண்டாம் சேனன் மிகுந்த ஆரவாரத்தோடு வாழ்த்தி விடை கொடுக்கிறான். மன்னனின் வாழ்த்தைத் தொடர்ந்து மக்களும் சங்கு தம்பட்டைகளும் எழுப்பும் மங்கல முழக்கம் வானைத் தொடுகின்றது.

ஈழப்படை தென் பாண்டியக் கரையில் காலடிஎடுத்து வைத்த வேளை காஞ்சியின் பல்ல வனுக்கும் மதுரையின் பாண்டியனுக்கும் அரிசில் எனும் இடத்தில் நடை பெற்ற கடும் போரில் பாண்டியன் விழுப்புண் ஏற்று வீர சொர்க்கம் அடைந்த செய்தி கிடைக்கின்றது. இந்தச் செய்தி ஈழ வீரர்களுக்கு இனிக்கின்றது. மதுரை மிக எளிதில் மட்டக்களப்பு மன்னன் வசமாகின்றது.

மதுரையை வென்று இரண்டாவது வர குணவர்மனுக்கு அந்த நாட்டின் மகுடத்தை அளித்து விட்டு முதலாம் வரகுண பாண்டியனால் ஈழத்தில் இருந்து கொள்ளையடித்துக் கொண்டு செல்லப்பட்ட திரவியங்களையும் மீட்டெடுத்த படி ஈழம் திரும்பிய மறவர் படைக்கு மகாதீர்த்தத்தில் மா பெரும்வரவேற்பு அளிக்கப் படுகிறது. அதனால் உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் மட்டக்களப்பு எனும் பெயர் ஒட்டிக் கொள்கின்றது.

சில திங்களைப் போர்க்களத்தில் செல வழித்து விட்டுத் தனது தேசம் திரும்பிய மட்டக்களப்பு மன்னன் தருமசிங்கனைக் குழந்தைப் பாக்கியம் இல்லாத குறை வாட்டிவதைக்கின்றது. உடனடியாகவே அந்த வாட்டத்தில் இருந்து விடு பட விரும்பிய அரசனின் உள்ளம் கொக்கு நெட்டி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் லிங்கேஸ்வரனின் அருளுக்காக ஏங்கு கின்றது.

ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்பு மண்முனையை இராசதானியாகக் கொண்டு அரசு புரிந்த கலிங்க நாட்டு இளவரசிஉலக நாச்சியாரால் எழுப்பப்பட்ட கொக்கு நெட்டி ஆலயத்தைப் புதுப்பித்து சுற்றிவர கருங்கற்களால் எயில்களும் மண்டபங்களும் அமைக்க வேண்டும் எனும் ஆசை அவனுள் கடலாக எழு கின்றது.

அந்தச் சமயம் - சிவபூசையிலே கரடி புகுந்தாற்போல, அவசர அவசரமாக ஓர் காவலன் ஓடோடி வந்து அவனிடம் ஒரு திருமுகத்தைக் கொடுத்து விட்டுப் பணிந்து நிற்கிறான்.

தென்பாண்டியில் உயிரற்ற உடல்களையும், குருதி வெள்ளத்தையும் கண்டு சலிப்படைந்த தருமசிங்கன் தினமும் நேரில் சென்று கொக்கு நெட்டி ஆலயத் திருப்பணிகளைக் கவனிக்கின்றான். ஆலயத் திருப்பணி அவனுக்கு அளவிடக் கதிகமான அமைதியையும் ஆனந்தத்தையும் அள்ளித் தருகின்றது என்பதை அங்கு கிடக்கும் கருங்கற்கள் ஸ்தபதிகளின் கைகளில் கலை வண்ணம் காணும் அந்த அற்புதக் காட்சியை அரசன் கண்டு களித்து நிற்பதிலேயே தெரிகின்றது.

- வாகரை வாணன் -

## நகைச்சுவை முற்றம்

தொகுப்பு: அமிர்தகழியான்

### "கடவுளான நானே உயிருடன் இருப்பேனோ தெரியாது"

ஒரு நாள் கடவுளைப் பார்த்து நாட்டு நடப்புகளைப் பற்றிப் பேசுவதற்காக இந்திய நாட்டவர் ஒருவரும்: எமது தேசத்தவர் ஒருவரும் சென்றனர். சிறிது நேரத்தில் கடவுள் அவர்களைப் பார்ப்பதற்காக ஒவ்வொருவராக உள்ளே வருமாறு கூறினார்.

இந்தியர் உள்ளே சென்றார். அவரிடம் கடவுள் "எதற்காக வந்தாய்?" என்று கேட்டார். அவர் "இறைவா எனது நாட்டில் காஸ்மீர் பிரச்சினை எப்போது தீரும்: தமிழ் நாட்டில் எப்போது ஆட்சியில் இருப்பவர்களின் அடாவடித்தனங்கள் ஒழியும்: தமிழ் நாட்டிற்கு எப்போது காவிரி நீர் தங்கு தடையின்றி வரும்: உண்மையான சமாதானமும் ஜனநாயகமும் உள்ள இந்திய தேசம் எப்போது உருவாகும். " என்று கேட்டார்.

கடவுள் சிறிது நேரம் யோசித்து விட்டு "அதற்கு நூறு வருடங்கள் செல்லும்" என்று கூறினார். இந்தியருக்கோ தாங்க முடியாத துக்கம் "ஓ" என்று ஒப்பாரி வைத்து அழத் தொடங்கி விட்டார்.

அவரது அழுகையை நிறுத்த கடவுளுக்குப் போதும் போதும்என்றாகிவிட்டது. அழுகை சற்றுக் குறைந்ததும். "எதற்காக அழுதாய்" என்று கடவுள் கேட்டார். அவரும் "எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது: எனது மகனுக்கு இருபத்தைந்து வயதாகிறது: அவரது மகனுக்கு ஒரு வயதாகிறது. எனது காலத்தில்தான் அது நடக்காமல் விட்டாலும் எனது மகனின் காலத்திலாவது அது நடக்கும் என்று எதிர் பார்த்தேன். இப்போது எனது பேரனின் காலத்தில் கூட அது நடக்காது என்று எண்ணும் போது அழுகை தாங்க முடியவில்லை" என்று அழுதுகொண்டே வெளியே வந்தார்.

அடுத்ததாக எமது நாட்டவர் உள்ளே சென்றார். அவரிடமும் நீ ஏன் வந்தாய் என்று கேட்டார்.

அவரும் "ஆண்டவரே எனது நாட்டில் எப்போது இப்பிரச்சினை தீரும். பண்டா- செல்வா- டட்லி- செல்வா: ராஜிவ்- ஜே.ஆர் என்று எல்லா ஒப்பந்தங்களும் தோல்வியில் முடிந்து இறுதியாக இப்போது பிரபா- ரணில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து பேச்சுவார்த்தை நடந்து அது கூட இடையில் நின்று விட்டது.இடைக்கால நிர்வாகம் தருவதாகக் கூறிய அரசாங்கம் இன்று- நாளை என்று ஏமாற்றுகிறது. எனது நாட்டில் சாந்தியும், சமாதானமும், உண்மையான ஜனநாயகமும் உள்ள நிலை எப்போது உருவாகும். பேச்சுவார்த்தை மூலம் எனது நாட்டில் பிரச்சினை தீரும்.?" என்று கேட்டார்.

சிறிது நேரம் சென்றதும் சற்று எதிர்பாராத வகையில் திடீரெனக் கடவுள் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டார். நமது நாட்டவருக்கோ ஒன்றும் புரியவில்லை கடவுளிடம் அப்படி என்ன கேட்டுவிட்டோம்? இந்தியரைப் போலத்தானே நானும் கேட்டேன். என்று கலங்கிய நமது நாட்டவர்

"கடவுளே, நான் என்ன பிழையாகக் கேட்டுவிட்டேன். ஏதும் பிழையாகக் கேட்டிருந்தால் என்னை மன்னியுங்கள். தயவு செய்து அழாதீர்கள் நீங்கள் அழுதால் இந்தப் பூமி தாங்காது" என்று கூறியவாறுகடவுளின் பாதங்களில் சாஸ்டாங்கமாக விழுந்தார்.

சிறிது நேர அழுகையின் பின் கடவுள் "பக்தனே நீ பிழையாக ஒன்றும் கேட்கவில்லை. உனது நாட்டில் பேச்சுவார்த்தை மூலம் அமைதி திரும்புவதைக் காண எனக்கும் தான் ஆசை. ஆனால் அதுவரை நான் உயிரோடு இருப்பேனோ தெரியாது. அதை நினைத்துப் பார்த்தேன் அழுகை வந்து விட்டது. என்றார் கடவுள்.

செல்வி. சி.சண்முகப்பிரியா.

விறுவிறுப்பான தொடர் நாவல்

# என் கணவன் எனக்கு மட்டும் தான்

18

இந்திரா இன்னும் முகம் கூடக் கழுவாமல் குசினிக்குள் போயிருந்து பிட்டைத் தயார் பண்ணி, அப்பா, தம்பி சுதன் இருவரது பீங்கான்களிலும் வைத்துவிட்டு, சூரன்மீன் சொதியில் ஒரு துளியை அகப்பையில் எடுத்து உள்ளங்கையில் ஊற்றி உப்புப் புளி பார்த்தாள்.

அவளுக்குத் திருப்தி வந்தது.

''கறி எப்படி இருந்தாலும் அப்பா எதுவும் பேசமாட்டார். இவன் சுதன் தான் அதை இதைச் சொல்லிச் சண்டை பிடிப்பான். இண்டைக்கு ஏதாவது சொன்னான் என்றால் அப்பாவுக்கு முன்னாலேயே வைத்து அகப்பையால் ஒரு கொத்துப் போடத்தான் வேணும்.'' என்று எண்ணியவளாக, சொதியை அடுப்பிலிருந்து இறக்கி வைத்து விட்டு, நிமிரும் போது சுதன் பெரிதாகச் சத்தம் போட்டு ''பாபா'' படப்பாடலைப் பாடியபடி கிணற்றடியில் குளிப்பதைக் கண்டாள்.

ஆயிற்று,

இருவருக்குமான சாப்பாட்டைக் கொண்டு வந்து மேசையில் வைத்து மூடிவிட்டு. முகத்தைக் கழுவி நெற்றியில் திருநீற்றைப் பூசிக்கொண்டு அவளும் பீங்கானில் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு வந்து மண்டபத்திற்குள் ஏறினாள்.

மூவரும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

''ச்சா இண்டைக்குத்தான் இவள் ஆக்கின கறி உண்மையிலேயே சோக்கா இருக்கு!'' என்றான் சுதன்.

''ஒவ்வொரு நாளும் இப்பிடித்தான் இவன் சொல்லுவான். பிறகு சாப்பிட்டு முடிஞ்சதும் நான் ஆக்கின கறி ருசியில்லண்டு சொல்லுவான்!''

இதைக் கேட்டுக் கொடுப்புக்குள்



சிரித்தபடியே ''டேயே போய் இன்னொரு துண்டு மீன் கொண்டுவா!'' என்று செல்லமாக வேண்டினான் சுதன்.

''அங்கொண்டுமில்ல. இனி மத்தியானத்துக்குத்தான் கிடக்கு!

''நான் மத்தியானத்துக்கு வரமாட்டன்!''

''அப்ப ராவைக்கு வந்து சாப்பிடு!''

பேசிக்கொண்டே மூவரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டார்கள்.

''அப்பா நான்வாறன்!'' என்று சொல்லிக் கொண்டே சுதன் அவசர அவசரமாகச் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வெளியேறினான்.

அவன் போனதும் சுகுமார் இந்திராவை அழைத்தான்.

''இந்திரா, மாணிக்கண்ணன் அம்மாவ எப்பிடியும் இங்க அனுப்பி வைப்பார். நான் வீட்டில நிண்டால் அவள் கொஞ்சம் கூச்சப்படுவாள். அதனால நான் மத்தியானத்துக்குச் சாப்பிட வரமாட்டன். பின்னேரம் தான் வருவன். சரி நான் வாரன். கொம்மா வந்தா நீயொண்டும் சொல்லிப் போடாத. கவனமாக இருந்துக்கோ'' என்று சொல்லிவிட்டு சுகுமார் கேற்றைத் திறந்தபடி வெளியேறிச் சென்றான். அப்போது பார்த்து தலைக்கு மேலால் பேய்க் குருவியொன்று கீச்சிட்டபடி பறந்து சென்றது.

''தூ! வைச்சமுட்டையெல்லாம் கூழாப்போ!'' என்று குருவிக்குத் திட்டிவிட்டு, சைக்கிளில் ஏறி விரைந்தான் சுகுமார்.

''தூ வைச்ச முட்டையெல்லாம் கூழாப்போ!'' என்று தந்தை சொல்லியதைக் கேட்டு கிளுக்கென்று சிரித்தபடி தெருவாசல் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தாள் இந்திரா.

வழமைக்கு மாறாக சுகுமார் கலகலப்பாக வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்ணாடிக் கூண்டினுள் இருந்து கணக்காளர் அவதானித்தார்.

மனைவி பிரிந்த துயர் எப்படியிருக்கும் என்பதை அவர் அனுபவரீதியாக அறிந்தவர். அதனால் சுகுமார் வேலையில் தவறுவிட்டாலும் அவனைக் கண்டிப்பதில்லை.

சுகுமாரின் வாழ்க்கையில் ஏதோ திடீர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

பிரிந்து போன அவனுடைய மனைவி திரும்பி வந்திருக்கிறாள் போல் தெரிகின்றது. இதை சுகுமாரின் வாயாலேயே கேட்டறிந்து விட அவர் துடித்தார்.

மேசையிலிருந்த பெல்லை அழுத்தி, காரியாலய பீயோனை அழைத்து, சுகுமாரை வரச்சொன்னார்.

என்னவோ எதுவோ என்று எண்ணியபடி சுகுமார் கணக்காளர் முன்னால் போய் நின்றான்.

முன்னால் கிடந்த கதிரையில் அவனை அமரும்படி சொன்னார்.

எதுவும் பேசாமல் அமர்ந்து கொண்டான்.

கணக்காளர் மனைவி விடயமாக ஏதோ கேட்கப் போகிறார் என்று சுகுமார் நினைத்த போதே

''மிஸ்டர் சுகுமார், வீட்டுப் பிரச்சினையெல்லாம் எப்படி? மனைவி திரும்பி வந்து விட்டாளா? என்று கேட்டுவிட்டு அவன் முகத்தைப் பார்த்தார்.

இன்னும் இல்ல சேர்......'' என்றான்.

''உன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே! வழமைக்கு மாறாக மகிழ்ச்சி தெரிகிறது. உண்மையைச் சொல் இப்போது நிலமை எந்தளவிற்கு முன்னேறியிருக்கிறது?''

சுகுமார் சற்றுத் தயங்கினான்.

''சொல்லுமன் நான் உன்மீது கொண்ட பற்றுதலினால் தான் கேக்கிறன். எனக்குக் கீழ வேல செய்யிற எல்லோரும் சந்தோசமாக வாழவேணுமெண்டு நான் எப்பவுமே நினைக்கிறவன்!''

''அதிகமாக இந்தக் கிழமைக்குள் திரும்பி வருவாள் என்கிற நம்பிக்க இருக்கு. சிலவேள இண்டைக்கு வந்தாலும் வந்திருப்பாள்.

''அதை உன்னால் எப்படி நிச்சமாய்ச் சொல்ல முடியும்?'' சுகுமார் நடந்த சம்பவங்களைச் சுருக்கமாக அவருக்குச் சொன்னான்.

''அப்படியா! எல்லாம் நலமாகவே நடைபெறும். எதற்கும் நீ தளர்ந்து போகக் கூடாது. துணிச்சலோட இரு. உனக்காக நானும் பல தடவைகளில் கடவுளை வேண்டியிருக்கிறன். இந்த விஷயத்தில் நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமானாலும் பயப்படாமல் சொல்!''

இதைக் கேட்டதும் சுகுமார் வியந்து போனான்.

இந்தக் காலத்தில் இப்படியொரு பொஸ்சா! மற்றவர்கள் எக்கேடு கெட்டுப்போனாலும் பரவாயில்ல. தான் மட்டும் உயர்ந்தால் போதும் தன்வாழ்க்கை மாத்திரம் சிறப்படைந்தால் காணுமென்று சுயநலமாக வாழும் மனிதர்களின் மத்தியில் இப்படியொரு பிறவியா?

''சேர் எனக்கு உதவி தேவைப்பட்டால் கண்டிப்பாக உங்களிடம் நான் கேட்பன். இப்போதைக்குத் தேவையில்லை!'' என்று சுகுமார் தட்டுத் தடுமாறிச் சொன்னான்.

''ஒக்கே சரி நீ போய் வேலையைக் கவனி!'' என்று அவனைப் போகவிட்டார்.

பழையபடி அவன் தன்கதிரையில் வந்து அமர்ந்து கொண்டான்.

மாணிக்கண்ணன் எப்பாடுபட்டாவது ''உன்னையும், மனைவியையும் சேர்த்து வைப்பேன்'' என்று விடாய் பிடியாக நின்றார். இங்கே எக்கவுண்டன் வேறு எனக்காக எந்த உதவியையும் செய்யத்தயார் என்று சொல்கிறார். இதையெல்லாம் பார்க்கும் போது மீண்டும் என்வாழ்வு பழையபடி பூக்கப் போகிறது போலவே தெரிகிறது. என்று தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டவனுக்குப் பூங்கோதையின் நினைப்பு வந்தது.

நேரத்தைப் பார்த்தான்.

பத்தரைமணி மதியவேளை இடைவேளைக்கு இன்னும் நேரம் இருந்தது.

இப்போது பூங்கோதை வீட்டுக்கு வந்திருப்பாள். சிலவேளை அவள் தனியே வராமல் மூத்தவன், மனைவி எல்லோருடனும்தான் வந்திருப்பாள். வந்ததும் என்னை இந்திராவிடம் கேட்டிருப்பாள். அலங்கோலமாகக் கிடக்கும் வீட்டைச் சுத்தம் பண்ணியிருப்பாள்.

சுதனைப்பற்றியும் விசாரித்திருப்பாள். அவன் வேலைக்குப் போனதைக்கேட்டு மகிழ்ந்திருப்பாள். குசினிப்பக்கம் போய்ப் பார்த்திருப்பாள். சூரன் மீன் வாங்கிவைத்திருப்பதையும் பார்த்திருப்பாள். மத்தியானம் அப்பா வரமாட்டார் என்று இந்திரா சொல்லியிருப்பாள்.

அப்பா இப்போதும் குடிக்கிறவரா? என்று மாணிக்கண்ணன் சொன்னதையும் நம்பாமல் கேட்டிருப்பாள்.

இந்திரா புத்திசாலி வீட்டுநிலமை தெரிந்தவள். அவள் ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் என்பக்கம் நின்று சொல்லியிருப்பாள்.

வீட்டுக்குப் போனதும் அவள் என்னைப்பார்த்து சிரிப்பாளா? அல்லது முகத்தைச் சுருட்டிக் கொண்டு வேறுபக்கம் திரும்பி நிற்பாளா?

யார் முதலில் பேசுவது?

நான்தான் பேசவேண்டும்!

எப்படிப் பேச்சைத் தொடங்குவது?

இப்படியெல்லாம் எண்ணிப்பார்த்தபோது, முதன் முதலில் திருமணம் முடிந்ததும் அவளோடு பேசுவதற்குஉண்டான வெட்கம் இப்போதும் வந்து சுகுமாரை என்னவோ செய்தது.

(தொடரும்)

**வாசகர்களின் கவனத்திற்கு!**

*''என் கணவன் எனக்கு மட்டும்தான்'' தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்
பெயர்..........................................
அனுப்புவரின் பெயர்..........................................
விலாசம்..........................................
கையொப்பம்..........................................

# சிங்கள ஆட்சியாளர்களும் தேசிய வாதமும்

**தமிழ் தேசியவாதத்தின் தோற்றம்:-**

தமிழ்த் தேசிய வாதம் சிங்களத் தேசிய வாதத்துடன் நெருங்கியதொடர்பு கொள்கின்ற போதிலும் அதன் வேரினை 19ம் நூற்றாண்டில் தோன்றிய இந்து மறுமலர்ச்சி இயக்கம், பிரித்தானிய காணி ஆட்சியின் போது தோற்றம் பெற்ற யாழ்ப்பாணச் சங்கம், தமிழர் காங்கிரஸ் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ், என்பவற்றிலும் அதற்கு முன்னர் எழுச்சி பெற்ற சுதந்திர யாழ்ப்பாண இராட்சியத்திலும் காணக் கூடியதாக உள்ளது. அரசரத்தினம் அவர்கள் குறிப்பிட்டது போல சிங்களத் தேசிய வாதத்தின் எழுச்சி தவிர்க்க முடியாத விளைவு. அதிலிருந்து தமிழர் அநியாயப்படுத்தப் பட்டமை யினாலும் அவர்களை அதில்சேர்த்துக் கொள்ளா மையினாலும் தமிழர் தமது சொந்த மரபு ரீதியான தேசிய வாதத்திற்கான புறவரை பினைக்கட்டியெழுப்ப முனைந் தனர். எதிர்பார்த்தது போல தமிழ்த் தேசிய வாதம் சிங்களத் தேசிய வாதத்தின் பலத்தின் எதிர் விளைவாக வளர்ச்சியடையலாயிற்று.

தெற்கில் எழுந்த மறுமலர்ச்சி இயக்கத்தைப் போல் இந்து மறுமலர்ச்சியும் கிறிஸ்தவ மிஷனறி நடவடிக்கைகளும் எதிரானதாகவே எழுந்தது. இந்து இயக்கத்தினைத்தனி ஒருவராக நின்று வழிப்படுத்தியவர் ஆறுமுக நாவலர். சைவ சித்தாந்தப் பெருமகன் தமிழ் அறிஞர் அவர் தமிழ் வள நடைக்கு ஆற்றிய தொண்டு போல அவருக்கு முன்னரும் பின்னரும் யாரும் இதுவரை தொண்டாற்றவில்லை.

நடைமுறையில் வட மாகாணத்தில் நவீன தமிழ் கலாசாரத்தில் ஒரு உயிருள்ள சக்தியாக ஆக்கியவர் ஆறுமுக நாவலர். கிறிஸ்தவ சமயத்திற்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது மாத்திரமல்லாது பாலர் வகுப்பு பாடநூல்களையும் எழுதி வெளியிட்டார். அவர் சைவ பரிபாலன சபை என ஒரு இந்து அமைப்பினை ஏற்படுத்தி சமய விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தினார். சைவ இந்துப் பிள்ளைகளிற்கு சமயப்பின்னணியில் கல்வி போதிப்பதற்காக பல இந்துப் பாடசாலைகளை ஆரம்பித்த. நாவலர் தனியே கல்வி விடயங்களுடன் மாத்திரம் கட்டுண்டிருக்கவிலை. 1876ல் ஏற்பட்ட தீவிரமான பஞ்சத்தின்போது நிவாரண நடவடிக்கையை ஒழுங்கு செய்தார். கலஸ் எதிர்ப்பு இயக்க நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.1887இல்பி. இராமநாதனை இலங்கை சட்ட சபைக்கு இலங்கைப் பிரதி நிதியாகத் தெரிவு செய்வதற்கு பிரசாரம் செய்தார்.

இவ்வாறு நாவலர்மத ஈடுபாட்டில் மிகவும் அவசியமான விடயங்களைத் தான் செய்த தோடு சமூகஅரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இந் நடவடிக்கைகள் பின் எழுந்த தமிழ்த் தேசிய உணர்வு வளர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்தன. பிரித்தானியர் ஆட்சிக்கெதிராக அரசியல் திட்ட சீர்திருத்தம் கோரி பின்வரும் மூன்று தமிழர் இயக்கங்கள் வளர்ச்சி பெற்றன.

***யாழ்ப்பாணச் சங்கம்:-**

இது உயர்ந்ததோர் குழு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

***தமிழர் மகாஜன சபை:-**

இதனை கொழும்புத் தமிழர்களே ஆக்கிரமித்தனர்.

*யாழ்ப்பாண இளைஞர் சங்கம்:-

யாழ்ப்பாண இளைஞர் சங்கம் எஸ். எச். பேரின்ப நாயகம், சி. பாலசிங்கம், எம். எஸ். பாலசுந்தரம், வீ. கந்தையா, சி.சி. இராசரெத்தினம், பீ. நாகலிங்கம் போன்ற

பிரமுகர்களைக் கொண்டிருந்ததோடு டொன மூர் அரசியல் திட்டத்தின் கீழ் நடந்த 1வது அரசாங்க சபைத் தேர்தல்களை வடக்கில் பகிஸ்கரிப்புச் செய்வதினை ஒழுங்குபடுத்துவதில் வெற்றியும் கண்டது சேர். பொன்னம்பலம் இராமநாதன் வாக்குரிமை கட்டுப்பாடற்று விஸ்தரிக்கப் படுவதனை எதிர்த்ததோடு 1931க்கு பின்பு அரசியல் அமைப்பில் தமிழர்கள் ஒதுக்கப்படுவதனைக் கண்டு பிடித்தார்.

இவ்வாறு சிங்களத் தேசிய வாதத்திற்கெதிராக தமிழ்த் தேசிய வாதம் தோன்று வதற்கான சூழ்நிலை தோன்றின. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழர் தேசியமறுமலர்ச்சி ஏற்பட பல சஞ்சிகைகள், நூல்கள், பிரமுகர்கள் உதவினர். அவற்றுள் பின்வரும் இயக்கங்களும் புதினத் தாள்களும் முன்னனிலையை வகித்தன.

* **தமிழர் மாகாண சபைகள்**
* வடக்கிலிருந்த இராம சங்கக் குழுக்கள்.
* வட மாகாண ஆசிரியர் சங்கம்.
* உதய தாரகை (புதினத்தாள்)
* கத்தோலிக்க பாதுகாவலர் (புதினத்தாள்)
* சைவ பரிபாலன சபை வெளியிட்ட இந்து சாதனம்.

1944ல் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பதுக் கைம்பது கோரிக்கை முன்வைக்கப்பட்ட தோடு தமிழ்த் தேசிய வாதம் புதிய உத்வேகத்தைப் பெற்றது. இருந்த போதிலும் 1949ல் சமஸ்டி ஆட்சி ஆரம்பிக்கும் வரை தமிழ்த் தேசிய வாதம் அதற்குரிய உண்மை அர்த்தத்தைப் பெறவில்லை. அதன் பின்னர் தமிழ்த் தேசிய வாதம் விரைந்து வளரலாயிற்று.

இலங்கை யில் தேசியத்துவ இயக்கத்தினை தேசிய வாதம் என்ற கோட்பாட்டுப் பின்னணியில் பார்க்கும் மேற்கு ஐரோப்பாவில் எழுந்த தேசிய வாதக் கோட்பாடு ஒரு குறுகிய காலத்திற்கே நடைமுறையில் இருந்தது என்பது தெரிய வருகிறது. 1918ம் ஆண்டினை அடுத்து எழுச்சி அடைந்த இலங்கைத் தேசிய வாத உணர்வு இத்தகையதே, ஆனால் மிகவிரைவில் இத்தகைய இலங்கையர் தேசிய வாத உணர்வும் பின்னடையத் தொடங்கியது.

இருந்தும் 1950களில் முற்பகுதி வரை இந்த உணர்வினை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்கள் இருந்தது உண்மை. இப்பின்னடைவிற்கு சிங்களத் தேசிய வாதத்தின் தோற்றமும் வளர்ச்சியுமே முக்கிய காரணமாகும். இது சிங்கள மொழி, பௌத்த கலாசாரம், சுதேசிய மரபுகள், என்பதற்கு முக்கியத்துவம் வழங்கியது. இச்சிங்கள தேசிய வாதத்திற்கு எதிர்த் தாக்கமாக எழுந்ததே தமிழ்த் தேசிய வாதமாகும். இது இந்து சமய மறுமலர்ச்சி, தமிழ்மொழி, தமிழ் பண்பாடு, என்பவற்றை வற்புறுத்தலாகிற்று. ஆகவே இலங்கையினைப் பொறுத்த வரை தேசியவாதக் கோட்பாட்டினை பிரயோகிக்க முடியாதென்பதுதெரிய வருகிறது. அதேவேளையில் தேசிய வாதம் பற்றி மாக்சிச லெனினிச நிலைப்பாடு இங்கு பின்பற்ற முடியாமல் போய் விட்டதை நாம் காண்கிறோம். ஏனெனில் இங்கு வர்க்க உணர்வுகள் வளர்ச்சியடைந்து அது தேசிய உணர்வினை அழித்து விடவில்லை. அதாவது சிங்களத் தமிழ்த் தொழிலாளர் வர்க்கம், ஒன்றிணைந்து ஒரு சோசலிச சமூதாயத்தினை அமைக்கப் போராடுவதற்கு பதிலாக கடந்த காலங்களில் ஒன்றுடன் ஒன்று மோதி வருகிறது. ஆகவே இலங்கையின் தேசிய இயக்க அனுபவங்களிற்கு ஒத்ததாக ஒரு எண்ணக் கருவினை நாம் உருவாக்குவது அவசியமாகும்.


க.லோகப்பிரகாசம் (ரவி)
செட்டிபாளையம்

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 25-10-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-16**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 16



### இடமிருந்து வலம்

01. இராமாயணத்தில் மாயமானாக வந்து சீதைக்கு ஆசை ஊட்டியவர்.
05. சிறுவன் எனப் பொருள் படும். (திரும்பியுள்ளது)
06. விஷ்ணுவின் இன்னொரு நாமம் (குழம்பியுள்ளது)
08. இறுதி எழுத்தை மட்டும் கொஞ்சம் மாற்றினால் இதுவும் புரவி என்றாகும்.
09. மழையை வேண்டியும், மன்னனின் தேக ஆரோக்கியம் வேண்டியும் வேதியர்களால் நடாத்தப்படுவது.
10. ஈழத்தின் வடபுலத்தில் அதிகம் காணப்படும் மரம்.
11. எப்போதாவது பூக்கும் இம்மரத்தின் பெயரை அடியாகக் கொண்ட கண்ணதாசனின் பாடல் ஒன்று மிகப் பிரபல்யமானது. (திரும்பியுள்ள இது இறுதி எழுத்தையும் இழந்து நிற்கின்றது)
12. மேளச் சத்தம்
13. சந்தையை தமிழில் இவ்வாறு அழைப்பர் (திரும்பியுள்ளது)
15. தளபாடம் செய்ய உதவும் வன்மையான மரம் (திரும்பியுள்ளது)
16. பசித்தவன் இதில் ருசி பார்க்க மாட்டான் என்பார்கள்.

### மேலிருந்து கீழ்

01. முதல் வித்தாகிய விடுதலைப் புலிகளின் பெண் மாவீரர்.
02. தேடப்படும் நபர் ஒருவர் பற்றிய தகவலைக் கொடுப்போருக்கு அரசு வழங்கும் பணப் பரிசு.
03. இந்தப் பறவை மிதந்து பறப்பதைப் பார்த்தே பட்டம் செய்யும் எண்ணம் மனிதருக்குத் தோன்றியதாகச் சொல்வார்கள். (குழம்பியுள்ளது)
04. விளக்குகள் கொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் பூஜை இவ்வாறு அழைக்கப்படும்.
07. மயில் ஒலி எழுப்புவதை இவ்வாறு அழைப்பர். (தலைகீழ்)
09. தலங்களை தரிசிக்கும் நோக்குடன் செல்லும் பயணத்தின் பெயர்.
10. களங்கம் எனவும் பொருள் கொள்ளலாம். (குழம்பியுள்ளது)
12. இதை வேகமாக அழிப்பதன் மூலம் மனிதன் இயற்கைச் சமநிலையில் பாரிய தளம்பல் நிலையை ஏற்படுத்துவதாகக் கூறுவார்கள். (தலைகீழ்)
13. இளவரசனுக்கு இதைச் சூடினால் அரசனாவான் (தலைகீழ்)
14. தெரிந்து கொள் என்னும் பொருள் தரும் சொல்லின் வினையடி.

## குறுக்கெழுத்துப் போட்டி 14ற்கான விடைகள்

*இடமிருந்து வலம்*

01. அபிமானம்
05. கணி
06. அகம்
08. யுத்தம்
09. வதந்தி
11. ஆம்
12. குகை
13. வதைமுகாம்
15. பட்டு
17. கிளை
18. சிவம்

*மேலிருந்து கீழ்*

01. அகராதி
02. பிணி
03. வதனம்
04. யுகம்
07. அம்பிகை
08. முத்தம்
10. ஆந்தை
12. கும்பம்
13. வங்கி
14. காட்சி
16. வடு

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**வி.விக்னேஸ், 1ம் பிரிவு, மண்டூர்.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. வேலு சாந்தி,
2ம் குறுக்கு கல்லடி வேலூர்,
மட்டக்களப்பு.

02. திருமதி. ரபீக்கா முஹமது யூசுப் ஜான்,
இலக்கம் 31, கல்லூரி வீதி,
திருகோணமலை.

03. ம. எழிலரசி,
8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

04. ஆர். சுமதி (1ம் வருடம்),
ஏ.சி விடுதி,
யாழ்பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

05. த.ஸ்ரீதர்,
மொ/ தன்னகும்புர த.வி,
நமுனுகுல,
பதுளை.

06. சி. தருமரெத்தினம்,
தாளங்குடா 01, ஆரையம்பதி.


07. றுக்ஷன் சஜீத்,
சின்னத்துரை வீதி, பெரியகல்லாறு-02.

08. ஜெயம் அரவிந்தன்,
கதிர்காமர் வீதி, திருக்கோவில்.

09. எஸ்.எம். அமிர்தலிங்கம்,
(ஆசிரியர்)
மட்/ குருமண்வெளி சி.ச.ம.வி,
களுவாஞ்சிக்குடி.

10. கு. பவதாரிணி,
தரம் - 06
திருப்பழுகாமம்.

# இந்திய – அமெரிக்க நட்புறவால் கிலி கொள்ளும் முஷாரப்!



**பா**கிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஸ் முஷாரப் ஆட்சியைப் பிடித்து நேற்றுடன் நாலு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்டார். பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இன்னும் சிக்கலில் ஓட்டிக் கொண்டிருக்கும் முஷாரப் அமெரிக்காவுக்கே "அல்வா" கொடுத்து ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டு வருகிறார்.

பாகிஸ்தானில் கடந்த 1999ம் ஆண்டு பிரதமராக இருந்தவர் நவாஸ் செரீவ். தொழில் அதிபராக இருந்து பிரதமர் பதவிக்கு வந்த நவாஸ்செரீவ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தார். இவர் பிரதமராகப் பொறுப்பேற்றதும் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனாசீர் பூட்டோ மீது பல்வேறு ஊழல் குற்றச் சாட்டுக்களைக் கூறி வழக்குப் போட்டார்.

இப்படி நவாஸ் செரீப்புக்கும் பெனாசீர் பூட்டோவுக்கும் இடையே மோதல் வளர்ந்துள்ள நிலையில் தனது ஆட்சியைக் கவிழ்க்கச் சதி நடப்பதாக நவாஸ் செரீப்புக்குத் தெரிய வந்ததும் அதன் அடிப்படையில் அவர் சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1999ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் திடீர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தார் பர்வேஸ் முஷாரப், இராணுவத்தில் தளபதியாக இருந்த ஜெனரல் பர்வேஷ் முஷாரப் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஆனார். தன்னைக் கொல்லச் சதி இருப்பதாகக் கூறி பிரதமர் பதவியிலிருந்து இறக்கப்பட்ட நவாஸ் செரீப்பை உள்ளே (சிறையில்) தள்ளினார். பிறகு நவாஸ்செரீவ் மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் பல்வேறு வழக்குக்களைப்போட்டு அவர்களை பாகிஸ்தானை விட்டே ஓடவைத்தார். இப்போது நவாஸ்செரீவ் குடும்பத்தினர் சவூதி அரேபியாவில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அதன் பிறகு ஆட்சியைக் தக்கவைத்துக்கொள்ள பல சாமர்த்தியமான நடவடிக்கைகளை முஷ்ரப் மெற்கொண்டார். மீண்டும் பொதுத் தேர்தலை நடாத்துவதாக சுப்ரீம் கோட்டில் உறுதிமொழி அளித்துவிட்டு அப்போது இருந்த ஜனாதிபதியை நைசாகக் கழட்டிவிட்டு தன்னைத் தானே ஜனாதிபதியாக்கிக் கொண்டார். பாகிஸ்தானுக்கு நானே ராஜா, நானே மந்திரி என்ற அடிப்படையில் எல்லா அதிகாரங்களையும் பர்வேஸ் முஷாரப் தானே வைத்துக் கொண்டார்.

ஜனநாயக முறையில் ஆட்சிநடைபெற்று வந்த பாகிஸ்தானில் இப்படிஒரு சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு வந்த முஷாரப்புக்கு இந்தியா மட்டுமல்லாமல் உலக நாடுகள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்தன. எதிர்ப்பு வலுக்கிறதே என்று பயந்து போன பர்வேஸ் முஷாரப் காஷ்மீர் விஷயத்தை கையில் எடுத்துக் கொண்டு தனது பதவியை தக்கவைக்க அதை ஒரு கருவியாக பயன்படுத்தினார்.

அந்தப் பாணியில் தான் கடந்த 2000ம் ஆண்டு இந்தியாவுடன் பேச்சு நடத்திவந்தார். பிரதமர் வாஜ்பாயுடன் அவர் நடத்திய பேச்சில் உடன்பாடு ஏற்படவில்லை. ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கைவிட்டு இந்தியாமீது பழிசுமத்தினார்.

அதன்பிறகு கடந்த 2001ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி அமெரிக்கா மீது தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதல் பர்வேஸ் முஷாரப் மீத பாய்ந்த பார்வையை வேறுபக்கம் திருப்பியது. ஆரம்பத்தில் முஷாரப் மீது வெறுப்பைக் காட்டி வந்த அமெரிக்கா தனது நாட்டின் மீது நடந்த தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப்பைக் காக்கா பிடிக்க ஆரம்பித்து விட்டது.

அமெரிக்கா மீது நடந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் தான் காரணம் என்பதையும் அவர் ஆப்கானிஸ்த்தான் நாட்டில் தான் இருக்கிறார் என்பதையும் அறிந்த அமெரிக்கா பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் தயவை நாடியது.

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்தைத் தூண்டிவிடுவது பாகிஸ்தான்தான் என்பது தெரிந்திருந்தும் பாகிஸ்தானோடு அமெரிக்கா கைகோர்த்துக் கொண்டது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது பாகிஸ்தானிலுள்ள விமானத் தளங்களைப் பயன்படுத்தி ஆப்பாகிஸ்த்தான் மீது போர் தொடுத்த அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் இருந்த ஒசாமா பின்லேடனையும் அவனது தலைமையிலான அல்–குபைதா தீவிரவாதிகளையும், தலிபான் தீவிரவாதிகளையும் ஓடச் செய்தது. இப்படி ஓடிவந்த ஒசாமா பின்லேடனும் மற்றத் தீவிரவாதிகளும் பாகிஸ்தானில் அடைக்கலம் புகுந்து கொண்டனர். ஆனால் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் இல்லையென்றும் தீவிரவாதிகளுக்கு இடம் கொடுக்கமாட்டோம் என்றும் அமெரிக்காவுக்கு அல்வா கொடுத்துவிட்டு காஷ்மீர் பகுதியில் இந்தியாவுக்கு எதிரான பயங்கர வாதத்தை முஷ்ரப் தூண்டிவிட்டார்.

கடந்த 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி டில்லியில் இந்திய பாராளுமன்றத்தின் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலுக்குப் பிறகு இந்தியா கேட்ட சுமார் 20தீவிரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க முஷாரப் மறுத்தார். அமெரிக்கா உட்பட பல்வேறு உலக நாடுகள் வற்புறுத்தியும் தீவிரவாதிகளை ஒப்படைக்க முஷாரப் மறுத்ததால் காஷ்மீர் எல்லையில் இந்தியப்படைகள் குவிக்கப்பட்டு பதட்ட நிலை ஏற்படும் அளவிற்கு தள்ளப்பட்டது. ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடாத்திய தாக்குதலைப்போல் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்துமோ என்று அஞ்சி நடுங்கிய முஷாரப் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவோம் என்று வார்த்தை தடுமாறினார் முஷாரப். இதற்கு உலகநாடுகள் கண்டனம் தெரிவித்தன.

எல்லையில் பதட்டம் ஒருபுறம் இருந்த போதிலும் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்த முஷாரப் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பொதுத் தேர்தலை நடத்தினார்.



முஷாரப்பின் சர்வாதிகாரப் போக்குக்கு கண்டனம் தெரிவித்த அரசியல் கட்சிகள் பிறகு ஒரு வழியாக தேர்தலை சந்தித்தன.

இந்தப் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் கடைசியில் முஷாரப்பின் ஆதரவுக் கட்சியே ஆட்சி அமைத்தது. முஷாரப்பிற்கு ஆதரவு தெரிவித்த கட்சியின் தலைவர் பீர்ஜாபருல்லாகான் பிரதமர் பொறுப்பை ஏற்று முஷாரப்பின் சட்டதிட்டங்களுக்கு ஜால்ரா போட்டு வருகிறார்.

முஷாரப்பை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அரசியல் கட்சிகள் எடுத்த முயற்சியில் தோல்வி அடைந்தன.

பாகிஸ்தானில் ஜனநாயகம் என்ற பெயரில் தேர்தல் நடத்தப்பட்டு அரசு நிர்வாகம்


தொடர்ச்சி 19ம் பக்கம்

# இலங்கை வரலாறும் பூர்வீக மட்டக்களப்பும்

**க.தங்கேஸ்வரி**

### சோழர் ஆட்சி காலத்தில் மட்டக்களப்பு

தென்இந்தியாவிலிருந்து இலங்கை மீது அடிக்கடி படையெடுப்புக்கள் நடைபெற்றன இராஜ இராஜ சோழன், இராஜேந்திரன் போன்றோர் காலத்தில் ஈழத்தின் பெரும் பகுதி சோழர் ஆட்சியின் கீழ் இருந்தது. இலங்கையின் பத்தாவது சோழமண்டலமாக்கப்பட்டு மும்முடிச் சோழை மண்டலம் எனப்பட்டது. (கி.பி 1017-1070வரை) இக்காலப்பகுதியில் பொலநறுவையில் பல இந்து தேவாலயங்கள் கட்டப்பட்டன. அப்போது கிழக்கிலே திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, போரதீவு முதலிய இடங்களிலும் ஆலயங்கள் அமைக்கப் பட்டதாக கருதமுடியும். இத்தேவாலயங்களின் பின்பு பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து பாண்டியர் கலிங்கமாகோன் காலத்திலும் தமிழர் ஆட்சி சிறப்பாகக் காணப்பட்டது.



### கலிங்க மாகோன் காலம்

கி.பி 1215 தொடக்கம் 1255 வரை முழு இலங்கையுமே ஆட்சி செய்த மாகோன் ஆட்சி காலத்தில் வன்னிமை வகுக்கப்பட்டு ஆலயங்கள் பல புனரமைக்கப்பட்டு. 44 ஆண்டுகள் சிறப்பான நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. இவன் ஆட்சி காலத்தில் திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, கோணேஸ்வரம், வெருகல், மண்டூர், போரதீவு போன்ற திருக்கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவனுக்கு உதவியாக குளக்கோட்டன், (ஜெயபாகு) என்ற தளபதி உதவியுள்ளார். குளக்கோட்டனுடைய கல் வெட்டுக்கள் திருகோணமலையிலும் மாகோனுடைய கல்வெட்டுக்கள் திருக்கோயிலிலும் இன்றும் உள்ளன.

### பாண்டியரின் காலத்தில் மட்டக்களப்பு

பாண்டியர் முழு இலங்கையையும் கைப்பற்றி ஆட்சி செய்யாவிட்டாலும், கிழக்கிலும், தெற்கிலும் குறிப்பிடத் தக்க அளவு இவர்களது ஆட்சிக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. கதிர்காம ஷத்திரியர் காலம் தொடக்கம் 13ம், 14ம் நூற்றாண்டு வரை பாண்டியர் செல்வாக்கு மட்டக்களப்பு பிரதேசத்தில் காணப்பட்டுள்ளது. கொண்ணன் கெல, கல்டுபொத்தான், போவத்தகல் போன்ற இடங்களில் மீன் சின்னம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மஜி, மஜிமரஜ, ஆய், போன்ற பாண்டிய குலப்பெயர்கள் இடம் பெறும் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் உள்ள பெரிய தேர் பாண்டியர் காலத்தில் சிற்ப அமைதியைக் கொண்டதாகும்.

### மட்டக்களப்பில் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற பல பூர்வ கிராமங்களும் சான்றுகளும்

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆய்வுகள் பெருமளவு மேற்கொள்ளப் படாவிட்டாலும் அம்பாறை தொடக்கம் (கதிர்காமம் உட்பட) வெருகல் வரை இதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. பட்டிப்பளை ஆறு எனப்பட்ட நதி கல்லோயா என இன்று பெயர் மாற்றம் செய்யப்ப ட்டுள்ளது.

அப் பிரதேசத்தில் தமிழர்களின் இராஜ தானிகள் இருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. மாளிகைக்காடு எனப்படும் பிரதேசம். சங்கமன் கண்டி உகந்தை, பாணம, மல்வத்தை, பழுகாமம், போரதீவு, சம்மாந்துறை, தீகவாவி, திருக்கோவில், தமன. வெருகல், கதிரவெளி, மாகம(திசமறகம) போன்ற ப்ல்வேறு இடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

குசலான் மலை, கல்குபெத்தான, மல்வத்தை, அம்பாறை, பரகாகல, தமண, குடும்பிகல, குமண, பாணம, மொட்டைய கல், சங்கமன்கண்டி, நில்வித்திகல, தீகவாவி, புத்தங்கல போன்ற மேலும் பல இடங்களில் இக் கல் வெட்டுக்கள் மூலம் ஆதித்திராவிடர் பண்பாடுகளும் சமய முறைகளும் மட்டக்களப்பு பிரதேசத் திலேயே குறிப்பாக கிழக்கிலங்கையிலேயே நிலைத்து இருந்தன. என்பதற்கு ஆதாரம் ஆகின்றன.

கிரேக்க யாத்திரியான மெகதீனிஸ் குறிப்பிடும் "பழகோணி" என்ற ஈழ மக்கள் கிழக்கிலே ஆட்சி செய்த பாண்டியரை குறிப்பதாகும். "உதியன்" 'உதி' போன்ற சொறகள் சேர வம்சத்தினையும், மஜி, மஜிமகரஜ, அபய, தமரஜ, பாண்டு, பாரிந்த போன்ற சொற்கள் பாண்டிய வம்சத்தினரை குறிக்கும் பிராமிக் கல்வெட்டுப் பெயர்களாகும்.

**இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் ஆதித்திராவிடர்கள் வாழ்ந்தமைக்கான வரலாற்று எச்சங்களுடன் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன.**

மகாவலி கங்கையின் ஒரு கிளையான மதுருஓயா பகுதியில் பல தொல் பொருள் தடயங்கள் கிடைத்துள்ளன. காளியங்கயெல என்னும் இடத்திலே மகாவலி கங்கை கிழக்கு நோக்கித் திரும்புகிறது. "மாதுரை பளிங்கு" என்ற தமிழ்ப் பெயரே மாதுரு ஓயா எனப்படுகிறது. கன்னீச்சை, வடமுனை, மாக்கும்பை மண்பத்தித்தானை முதலிய தமிழ்க் கிராமங்கள் உள்ளன. இன்று வாகனேரி எனக் குறிப்பிடுவது பண்டு வரகுணன் ஏரி என வழங்கப்பட்டதென்பர்.

### தொகுப்புரை

1) மட்டக்களப்பு பிரதேசம் என்பது ஆதியில் அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கி கதிர்காமம் வரை பரந்த பிரதேசமாகும். இப் பிரதேசத்தில் வரலாற்றுக்கு முட்பட்ட காலம் முதல், வரலாற்று இடைக்காலம், பெருங்கற் காலம், வரலாற்று காலம் வரை பூர்வ குடிகள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் எச்சங்கள் கிடைத்துள்ளன.

2) இம் மக்கள் உலகின் பூர்வ குடியினரான 'ஒஸ்ரலொயிட்' இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வழி வந்தவர்களே இயக்கர், நாகர் என்போர். அவர்களின் வழி வந்தோரே வேடர் இன மக்கள்.


3) இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் ஆதித்திராவிடர்கள் வாழ்ந்தமைக்கான வரலாற்று எச்சங்களுடன் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன. பிற வரலாற்று ஆவணங்களும் இதை உறுதி செய்கின்றன.

4)வரலாற்று காலத்திலும், பிற்காலச் சோழர், பாண்டியர் காலத்திலும் தமிழ் மன்னர்கள் இலங்கையில் ஆட்சி புரிந்துள்ளனர். மட்டக்களப்பில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் விபரம் 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் ஏட்டுப் பிரதியில் இடம் பெற்றுள்ளது.

5) மாகோன் (1215-1255) காலத்தில் மட்டக்களப்பு எழுச்சி பெற்றிருந்தது. மாகோன் வகுத்த வன்னிமை நடைமுறையில் இருந்தது. அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பல தமிழ் கிராமங்கள் பற்றிய செய்திகளைவரலாற்றுக் குறிப்புகள் நமக்குத் தருகின்றன.

6) இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்கள் முறையாக ஆவணப்பதிவு செய்யப்படா மையினால், மக்கள் இதை அறிய முடியவில்லை. இன்னமும் தமிழ் மக்கள் மகாவம்சம் கூறும் வரலாற்றுச் செய்திகளையே வரலாற்றுப் பாடமாகக் கல்விக் கூடங்களிலும், பல்கலைக்கழகங்கள் உட்பட கற்று வருகின்றனர்.

*(முற்றும்)*



## ஈழத்தாய் சபதம்

தந்தை செல்வா
வாக்குரிமைதனைப் போக்கிய ~அந்த
வஞ்சகரோடு அரசியல் தொலை
நோக்கிலுயர்ந்த தலைவனாம் ~தமிழ்த்
தோன்றலவன் செல்வநாயகன்
போக்கணங் கெட்ட குரங்குடன் ~அந்தத்
தூக்கணப்புள்ளு நியாயங்கள் கொண்டு
வாக்கு வாதப்படப் போனவாறு ~பல்
வாதங்கள் செய்ய முயன்றனன்

வேலி பயிரினை மேய்வதோ~பொய்மை
வேடம் இனியெமை ஆழ்வதோ ~வெறும்
போலிகளின் முக மூடியை ~இந்தப்
போழ்தில் கிழித்தெறிவோ மென்றே
சோலிகளின்றி இந் நாட்டிலே ~எங்கள்
சொந்தத் தமிழீழ வீட்டையே ~பரி
பாலித்து வாழுவம் என்றுமே ~ஒரு
பாகப் பிரிவினை கோரியே
ஈழமொன்றே எம் புகலிடம் ~அது

என்றும் தமிழரின் வாழிடம் ~அதை
ஆழும் உரிமை எமதகே~தமிழ்
அரசமைப்போம் எனக் கூறினான்
வாழும் உரிமையைப் பெற்றிட ~அந்த
வள்ளல் தலைமையில் ஓர் படை ~பண்டை
நாளின் தமிழரசொன்றினை ~நிலை
நாட்ட அறவழி போனதே

ஒற்றை அரசினியில்லையாம் ~அது
உண்மையிலே பெருந் தொல்லையாம்
பெற்றிட வேண்டும் நாட்டெல்லையாம்~இப்
பிணிக்கதுவே பெரும் வில்லையாம்
கற்றவர் யாவரும் சேருவீர் ~எமைக்
காக்க உரிமைகள் கோருவீர்~ உயர்
வுற்ற சமஷ்டி முறையதே~இவ்
வுலகில் எமக்குப் பொருந்துமாம்

தொடரும்....

எஸ்.கருணானந்தராஜா (யுகசாரதி)

## கவிதை என்றால் என்ன? அது எப்படியிருக்க வேண்டும்?

"கானமயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாக" பாவித்தாடிய கதை போன்றுதான் தற்போது கவிதை எழுதுபவர்களின் கதையுமுள்ளது.

ஒரு வசனத்தை இரண்டிரண்டு சொல்லாய்ப்பிரித்து வரிவரியாய் எழுதிவிட்டு புதுக்கவிதை என்று புலம்புகிறார்கள்.

நான் படித்துச் சுவைத்த மறக்க முடியாத இரண்டு புதுக்கவிதைகளை இங்கே தருகிறேன். விவசாயி கூறுவது போன்றது ஒருகவிதை.

"நாங்கள் சேற்றிலே
கால் புதைத்ததால் தான்
நீங்கள் சோற்றிலே
கை புதைக்கலாம்."

இன்னுமொன்று ஒரு வீட்டுக் காரன் கூறியது போன்றது.

"எங்கள் வீட்டுக் கட்டில்
குட்டி போட்டது தொட்டில்"

இதே போன்று தான் கவிதைகள் இருக்க வேண்டும்.

தமிழறிஞர் கீ.வா.ஜகந்நாதன் அவர்கள் "அழகை அனுபவிக்கத் தெரிந்தவர் நாம். சொல்லத் தெரிந்தவன் கவிஞன் என்றும்,"இயற்கையின் எழில் தோற்றங்களைச் சொல்லில் சிறையாக்குபவன் கவிஞன்" என்றும்

"உள்ளத்தில் நிகழ்வதைப் படம் எடுக்க முடியாது. சொல்லால் கோலம் போடுபவனே கவிஞன்" என்றும் கூறியுள்ளார்.

1981ம் ஆண்டு மண்டூர் வெளிமாணவர் கலைவட்டம் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியிட்ட "புதுவெள்ளம்" என்னும் இரண்டாவது வெளியீட்டில் "இளம் கவிஞர்களுக்கு" என்னும் தலைப்பில் மண்டூரான்எனும் ம.இராசதுரை அவர்களால் தொகுத்து எழுதியதையும் கவிதை எழுத விரும்புபவர்களுக்காக இங்கு தருகிறேன்.

"ஒருவனது உள்ளக் கிடக்கையை அடுத்தவர்க்குப் புரியும் படியாகச் சுருக்கமாகவும், இசை கலந்து மனதுக்கு இன்பமூட்டக் கூடியதாகவும் மனதில் இலகுவில் பதியக் கூடியதாகவும் ஒருவனால் பல சொற்களைச் சேர்த்து ஆக்கப்படுவதே கவிதை" என்பதாகும்.

இன்றைய சிலரின் கவிதைகள் உயிரோட்டமற்ற ஒரு உடலாகவே உள்ளது.

கவிதை என்றால் என்ன? என்பதற்கு மேலை நாட்டறிஞர்கள் கீழ் வருமாறு கூறுகின்றனர்.

"கவிதை என்பது சுருங்கச் சொல்லி விளக்கவைக்கக் கூடியதும், படித்தவுடன் மனதில் நிலைத்து நிற்கக் கூடியதுமான வசனக்கூட்டமேயாகும்" எனக் கூறுபவர். ரவப்பியூர் அவர்கள்

"தேசிய உணர்வின் அடிப்படையில் அறிவுள்ள மதியில் ஊறும் உணர்வே கருவாய் அமைவுற்று. பெருக்கெடுத்து ஓடிவருவதே கவிதை" என்று கூறுகிறார் வோட்ஸ் வொர்த்து அவர்கள்

"உயரிய உணர்வின் அடிப்படையில் உயரிய தன்மையில் உருவானதுதான் கவிதை" என்கிறார் ஈஸ்வரன் அவர்கள்.

"உண்மையழகு, செறிவு இவை காட்டும் விருப்பநிலையில் கற்பனையும், உணர்வும் கலக்கச் சிறந்த மொழியில் ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமைப்பட்டும் நிற்க, கலந்து உருவாவது கவிதை" என்றார் லீத்வரண்ட் அவர்கள்.

"வாழ்வின் திறம் காட்டும் வண்ணக் கோலமே கவிதை என்றார் மாத்தியூ ஆர்னால்டு அவர்கள்.

"என்றும் உள்ள நிலைத்த உண்மைகளை இன்பில் இயைத்து தம் கருத்துக்களைக் கற்பனைத் துணை கொண்டு சமூதாயத்தின் புதுப்புது உண்மைகளை உணர்ந்து நலம் பெறப்புனைவது கவிதை" என்றார் ஜான்சன் அவர்கள்.

இரா.கலைவேந்தன்
பாலைநதி.

## தேடலும் பகிர்வும் 11

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் "ஆவணக் காப்பு" பற்றிஅவ்வப்போது கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இடையறாத "தேடல்" மூலம் போராட்டம் தொடர்பான வரலாற்று ஆவணங்களைத் தரிசிக்க முடிகின்றது.வட தமிழீழத்தில் உள்ள "மாவீரர் படிப்பகங்கள்" மூலமும் இன்னபிற "தகவல் பகிர்வு" அமைப்புக்களும் இத்தகைய ஆவணங்களைப் பரந்த வாசிப்புக்கு உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது. அங்கு பரந்த வசதிகளைக் கொண்டிருக்காது விடினும்,உள்ள "பொத்தக சாலைகள்" (புத்தகக் கடையின் தூய தமிழ் வடிவம்) காத்திரமான பங்களிப்பைப் போராட்ட வாசிப்பில் தூண்டுவனவாக இருப்பதை நாட்டுப்பற்றுள்ள ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அக்டோபர்-10 இந்திய -தமிழீழப் போர் வெடித்த நாள்: 1987ஜூலை 30 தொட்டு 1990 மார்ச் 24 வரையான இந்திய ஆக்கிரமிப்புப் படையினரின் பிரசன்னம் இருந்த காலத்தில் தமிழீழ மக்கள் "ஊடகப் பிரபல்யம்" காட்டாது ஆற்றிய போராட்டப் பங்களிப்புகள் மெய்சிலிர்க்க வைப்பன. அவற்றில் மிகச் சிலவற்றைத் தொகுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவு "அம்மாளைக் கும்பிடுறானுகள்," "வில்லுக் குளத்துப் பறவை" என்ற இரு நூல்களாக வெளியிட்டிருந்தது. அண்மையில் "மணலாறு விஜயன்" வழங்கிய "போரும் வாழ்வும்" என்ற நூல் இத்தகைய உண்மைப் பகிர்வை எமது பிரதேசத்தில் தந்துள்ளது.

"இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் உண்மை நிகழ்வுகளே கதை வடிவில் -உணர்வு பூர்வமாக -இங்கு பதிவு பெற்றுள்ளன.'அமைதிப்படை' ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் -போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதூரியத்துடனும் செயற்ப்பட்ட மக்களின் கதைகள்........" என்று "பதிப்புரை"யில் தெரிவிக்கும் "வில்லுக்குளத்துப் பறவை" என்ற நூலிலிருந்து ஒரு உண்மைச் சம்பவத்தில் சில வரிகளைப் பகிரப் பிரியப்படுகின்றோம். நூலைப் பார்க்கத் தந்த ஆய்வாளருக்கு நன்றி. அக்டோபர்- 06 "சர்வதேச ஆசிரியர் தினம்" அனுஸ்டிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டை நேசித்த நல்லாசிரியர் ஒருவர் தொடர்பான "ஓயாத கால்கள்"என்ற உண்மைப் பகிர்வின் சில வரிகள் மட்டுமே இவை.

"...... ஆங்கிலத்தில் எம். ஏ படித்தவர் 'மாஸ்ரர்' 'மாஸ்ரர்' விடுதலைப் புலி அல்ல ஆனால், விடுதலைப் போரில் தங்களை அழித்துக் கொள்ளுகிற புலிகளுக்கு, எப்போதும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றே விரும்பினார்...... அந்த நோக்கோடு தான் புலிகள் வழங்கிய தற்பாதுகாப்புப் பயிற்சிக்கும் அவர் போனார்...... போரில் இறங்கிய புலிகளை அழிக்க வந்த அந்நிய ஆக்கிரமிப்பாளனை நினைக்க நினைக்க அவருக்குக் குருதி பொங்குகிறது........

"........பொய்ச் சேதிகளாலை விடுதலைப் புலிகளை அழிக்கப் முயலுகினம்....செய்திகளை மறைச்சா - உண்மைகளை மறைச்சா - புலிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் அழிச்சா- தமிழீழ விடுதலைப் போர் ஓய்ந்து போகும் எண்டு நினைக்கினம்........ " தன் பாட்டில் உறுமினார் அவர். மனைவியைப் பார்த்து 'மாஸ்ரர்' சொன்னார். "எத்தனை விதமான ஆபத்துக்குள்ளையும், பொய்ப் பிரசாரங்களையும் இந்தப் பிள்ளைகள் நிண்டு போராடுகினம் பார்த்தியே.....!

"அப்போது தான்-புத்தம் புதிய மாஸ்ரரின் வீட்டுக் கதவை உடைத்து விடுவது போல் யாரோ தட்டினார்கள்.......

"யார் அது"......கதவை அவர் மெதுவாகத் திறந்தார். அங்கே- வெறி பிடித்த அந்தக் "குழு" தான் காத்திருந்தது. முரட்டுத் தனமாக 'மாஸ்ரர்' வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.மனைவியின் ஓலம் காற்றைக் கிழித்தது. ....... அவளுக்குத் தெரியும் இனி அவர் திரும்ப மாட்டார்."

மாஸ்ரரைப் போன்றே பிறகும், இன்றும் பல நாட்டுப்பற்றாளர்கள் தன்னடக்கத்தோடு முகம் மறைத்து, சுய விளம்பரம் போடாது பணியாற்றுவது நெஞ்சை நெக்குருக வைக்கும்.

நேற்று "தமிழீழ் மகளீர் எழுச்சி நாள்" அனுஸ்டிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரரான 2ம் லெப் மாலதி இந்திய ஆக்கிரமிப்புப் படையினருடனான சமரில் வீரச்சா வடைந்து தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் சாதனை படைத்த நாளே அது என்பது சிறப்பிற்குரியது.மக்கள் எழுச்சிக்குப் பெயர் பெற்ற தெலுங்கானா போராட்டக் களத்திலிருந்து கிளம்பிய கவிதை ஒன்றின் சில வரிகளை இங்கு பார்ப்பது பொருத்தமானது. "கத்தார்" என்பவரது "லஷ்மம்மா" என்ற கவிதையை சி. சிவசேகரத்தின் மொழி பெயர்ப்பில் வாசிக்கக்கிடைத்தது. "பணிதல் மறந்தவர்: ஒடுக்கு முறைக்கு எதிரான மூன்றாம் உலகக் கவிதைகள்" என்ற தேசிய கலை இலக்கியப் பேரவை சவுத் ஏசியன் புக்ஸ் வெளியிட்ட நூலில் இது இடம் பெற்றிருந்தது. தொழில்சார் ரீதியில் பொறியியல் துறைப் பேராசிரியரான சி.சிவசேகரம் அவர்கள் பாரம்பரிய பாடவிதான வரையறைகளுக்கு "அப்பால்"பன்முகப்பார்வை கொண்டவர் என்பதை அக்டோபர் ஆறு கழிந்துள்ள நிலையில் கருத்திற் கொள்வது பயனுடையது. இனி கவிதை சில வரிகளைப் பகிர்வோம்.

"மல்லிகைப் பந்தலின் கீழ்
குந்தியிருப்பவளே
ஏ லஷ்மம்மா........
தஸரா உற்சவமும் வந்தது
ஆயினும் நீ
கொண்டாடிடவில்லை
தீபாவளி வந்தது
தீபம் உனக்கில்லை
சிவராத்திரி வந்தது.
விரதம் பேணுகிறாய்
உன் வாழ்க்கை முழுவதுமே
சிவராத்திரி என்றாச்சு
ஏ லஷ்மம்மா. உன் வாழ்க்கை முழுவதுமே
அமாவாசை என ஆச்சு
எத்தனை நாள் அழுவாய்
புலம்பி எதனை வென்றிடுவாய்
உன் சோதர சோதரியர்
செஞ்சேனையிலே இணைந்தார்.
தங்கள் அரிவாளை
அவர்கள் கைகளிற் தூக்கி விட்டார்
தீட்டிடுவாய் நீயும்
ஏலஷ்மம்மா
உந்தன் மகனுடனேயே நீயும்
இணைந்திடுவாய்!"

தேசியத் தலைவர் அவர்களது உள்ளத்துச் சிந்தனையிலிருந்து -:"மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும். அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற் கூறு நிர்ணயிப்பதல்ல, பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்து விட முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஒரு உன்னத உதாரணமாகத் திகழ்கிறது."

08.03.1993 அன்று அனைத்துலக மகளீர் நாளை முன்னிட்டுத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து நன்றியுடன் இக் கருத்து பெறப்படுகின்றது.

- த.வசந் -

# புனித நாட்களில் ஒரு நாள் கடற் கரும்புலி

## மேஜர்– கடலரசன்

## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரம். ஆம் இது தமிழீழத்தில் ஒரு அழகிய கிராமந்தான் மன்னம்பிட்டி. அது தான் கடலரசனின் ஊர். மன்னம்பிட்டியில் தம்பிப் பிள்ளை தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாக இவன் அவதரித்தான். தம்பதிகளால் நவம் என்ற அழகிய பெயர் சூட்டப்பட்டது. பின்னர் அது ஏழு பேர் கொண்ட அழகிய நடுத்தரக் குடும்பமாக விளங்கியது. அது விவசாயத் தொழிலையே மையமாகக் கொண்ட குடும்பம். அப்படி இருக்கையில் நவம் கை கால் வைத்து அன்னை மண்ணை அணைத்து தவழ்ந்து வாழ்ந்து வருகையில் அந்த அழகிய கிராமத்தில் சிறிது காலம் தான் அவனுக்கு வாழ முடிந்தது. மன்னம் பிட்டியில் ஆக்கிரமிப்புப் பேய்களின் கொடூரம் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதனால் நவம் அடிப்படைக் கல்வி கூட பயில முடியவில்லை. இவன் சிறு வயதிலேயே தாயை இழந்தான். அதாவது 1980 காலப் பகுதியில் இவனுக்கு ஒரு தங்கையும் இருந்தாள். தான் கற்க முடியவில்லை. தனது தங்கையாவது நன்றாகக் கற்க வேண்டும் என்ற ஆசை நவத்தின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. அவன் தங்கை மேல் வைத்திருந்த ஆசைக்கோ அழவே இல்லை. நவத்தின் ஆசைகள் அவன் எடுத்த முயற்சிகள் அனைத்திலும் இடி விழுந்தது போல் இன வெறியர்களின் கொடுமை அதிகரித்தே வந்தது. அவனது ஆசை நிறைந்த

**போராளி – மன்னன்**

மன்னம் பிட்டித்தாயை இழந்த மண் தவழ்ந்த மண் அந்த வீடு வாசல் அனைத்தையும் இழந்து 1990 ம் ஆண்டு இடம் பெயர வேண்டி வந்தது. அந்த இடப் பெயர்வு நவத்திற்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. மன்னம் பிட்டியில் இருந்து சித்தாண்டி அந்த பெருமை மிக்க ஊரை வந்தடைந்தனர். அன்றிலிருந்து நவத்திற்கு பெரும் இடி விழுவது
போன்ற உணர்வலை. அதே போன்ற கவலை தாயை எவ்வாறு நேசித்தானோ அதைப் போலவே தன் கிராமத்தை நேசித்தான். அதைப்போலவே தாய் நாட்டை நேசித்தான் யோசித்தான். ஆம் நாம் தமிழர் தயங்கவில்லை. அதிலும் நாம் போரை விரும்பவில்லை. அதை வைத்து நாம் அடக்கப்படுகிறோம் ஒடுக்கப்படுகிறோம் போருக்குள் இழுக்கப்படுகிறோம். அதனால் தான் போராடுகிறார்கள். ஆம் இது உண்மை தான் அடக்கப்படும் எந்த ஒரு இனமும் விடிவை நோக்கித்தான் நகரும். இனியும் விடிவு எம்மை நோக்கி வராது. விடிவை நோக்கி நாம் தான் செல்ல வேண்டும். விடிவு எமக்கு வேண்டும் என பல கேள்விகளையும் அதற்கான விடையையும் அறிந்தான். விடுதலை உணர்வால் உந்தப்பட்ட நவம் ஆழமான முடிவுக்கு வந்து விட்டான். 01.10.1990ம் ஆண்டு இந்தப் புனிதப் போராட்டத்தில் தன்னையும் ஒரு முற்று முழுதான போர் வீரனாக்கிக் கொண்டான். அடிப்படைப் பயிற்சி பெறுவதற்காக மட்டுமா நகரில் இருந்து வட தமிழீழம் நோக்கி அனுப்பப்படுகிறான். அதாவது நான்கு பக்கமும் வளம். பெருமை மிக்க வளங்களில் பசுமை நிறைந்த பச்சை வெளிகள் ஏன் தமிழீழத்திலே பெரிய குளமும் இங்கு தான் உள்ளது. அது தான் கிளிநொச்சி. அந்த அழகிய நகரத்தை வந்தடைந்தான். இங்கு நவத்திற்கு எந்த விதமான வேறுபாடும் ஏற்படவில்லை. ஏனென்றால் தமிழீழத்தில் ஒரு நகரம் ஒரு சிறிய குடும்பத்தில் இருந்து பெரிய குடும்பத்தில் பிறந்தது போன்ற உணர்வு அதுவும் ஒரு தாய் நாட்டின் தலைவன் தமிழரின் தாய் தந்தையைப் பார்த்தால் என்ன? தலைவரைப் பார்த்து என்னைத் தலைவன் வளர்க்கிறான். தாய் என்ற உணர்வு உள்ளத்தில் உயர்ந்து நின்றது. இங்கு செந்தூரன் என்ற பயிற்சிப் பாசறை அது. ஒரு மாவீரன் பெயரைக் கொண்டது. அதிலும் முதலாம் பயிற்சிப் பாசறை அல்லவா? அதில் பயிற்சிகள் ஆரம்பித்தன. திறமையாகச் செயற்பட்டான். சோர்வுகள் வரும் பொழுது தென் தமிழீழத்தில் நடந்து கொண்டிருப்பதை நெஞ்சில் நிறுத்துவான். அப்போது எதிரியுடன் நேரில் நிற்பது போன்ற உணர்வு அவனுள் உத்வேகம் எடுக்கும். மிகவும் நூதனமாகவும் வேகமாகவும் செயல் பட்டு பயிற்சிகளை முடித்துக் கொண்டு கடலரசன் என்ற பெயருடன் தான் நேசித்த போராளிகளை விட்டுப் பிரியும் போது பாசறைப் போராளிகளின் சோகம் அவனுக்குத் தனித் தனியாகவே தெரிந்தது அப்போது போராளிகளிடம் இவ்வாறு கூறினான். ''நாம் எங்கு சென்றாலும் தமிழீழத்தில் தான் போராடுவோம். எமது தேசியத் தலைவனின் அரவணைப்பில் தான் வாழப் போகிறோம். மீண்டும் சந்திக்கும் இடத்தில் எமது நட்பு தொடரும் என ஆறுதல் கூறிவிட்டுச் சென்றான் கடலரசன். படையணிக்கு வந்து அடுத்த கட்ட நடவடிக்கையில் மும் முரமாகச்




செயல்பட்டான். அதே நேரம் அவன் விரும்பியது அவன் முயற்சி செய்தது எதோ எல்லாம் அவனுக்கு வெற்றியாகவே இருந்தது. அவனது முதலாவது தாக்குதலுக்கு தயாராகிக் கொண்டு இருந்தான். அதாவது ஆகாய கடல் வெளிச் சமர் அவனுக்கு மிகவும் சந்தோசத்தில் பொங்கி வழிய களமுனையில் விறு விறுப்பாகச் செயற்பட்டான். இவனது செயல்பாட்டை கண்ட பொறுப்பாளர் ஜி.பி.எம். கனரக ஆயுதத்தில் தான் சண்டையின் வெற்றி தோல்வியே தாங்கியுள்ளது என்பதை கடலரசன் நினைவில் நிறுத்திக் கொண்டு மிகவும் நூதனமாகவும் திறமையாகவும் செயல்பட்டான். இவனுடைய செயல்பாடு கட்டம் கட்டமாக வளர்ச்சி அடைந்து கொண்டே சென்றது. பின்னர் ஜி. எல். எம்.ஜி என்றும் மினி மினி எல். எம் .ஜி என்றும் வழக்கம் போலவே இலகுவான முறையில் ஆயுதங்களைக் கையாண்டான். பேனா பிடிக்கக் முடியாமல் ஆக்கினான். ஆனால் ஆயுதம் கையாள்வதை நிறுத்த முடியுமா? என்ற கேள்வியை மனதில் கொண்டிருந்தான். பின்னர் வவுனியா, பூனகரி, கட்டு முறிவு என பல தாக்குதல்களில் தொடர்ச்சியாகச் சண்டை கிடைத்து வந்தது. இது கடலரசனுக்கு ஒரு வித் உற்சாகம்அவனுள் இருந்து கொண்டே வந்தது. அதே போல் கெரியம வீதி தாக்குதலில் பங்கு பற்றி ஒரு வித ஆவேசம் கொண்டவனாய் முன்னேறும் போதுதான் எதிரியின் ரவை ஒன்று கடலரசனின் இடது காலைச் சிதைத்து விட்டது. அதனால் காலை இழக்க வேண்டியும் வந்து விட்டது. இனி நான் சண்டையில் பங்கு பற்ற முடியாதே என்ற கவலையுடன் ஆழ்ந்து விட்டான். அதே சமயம் 1996ம் ஆண்டு தனது தம்பியும் ஒரு போராளி ஆகி விட்டான் எனவும் எங்கள் ஆசைத் தலைவனின் ஆணைப்படி வன்னி மண்ணை வந்து சேர்ந்து விட்டதாகவும் அறிந்து அவனுடைய கவலை எங்கோ போய் விட்டது. அதற்குக் காரணமும் இருக்கினறது தன்னுடைய இடைவெளி நிரம்பி விட்டது. என்ற மகிழ்ச்சி தான் அது. அதே வேளை 1998ம் ஆண்டு ஓயாத அலைகள் 02 நடவடிக்கைக்கான பயிற்சியில் தனது தம்பி விஜயரெத்தினமும் இணைக்கப்பட்டான் என்பதும் அவனுக்கு மகிழ்ச்சி. பயிற்சிகள் முடிந்து நடவடிக்கை ஆரம்பித்து விட்டது. வெற்றிச் செய்தியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். வெற்றிச் செய்தி வந்தது. ஆனால் தனது தம்பி வரவில்லை. ஆயிரம் ஆயிரம் மாவீரர் வரிசையில் விஜயரெத்தினமும் ஒருவனாகத்தான் வந்தான். பெரும் நெருப்பை விழியில் சுமந்தவனாய் துயிலும் இல்லம் சென்று தனது தம்பியுடன் வீர மரணம் அடைந்த அந்த வீரர்களுக்காய் ஒரு கணம் தலை சாய்த்து கண்ணீர் பூக்களை தூவி சந்தன மேனிகளை வணங்கி இலட்சிய உறுதி பூண்டான். இப்படியாக இவனது விடுதலை உணர்வு பெருகியது. அதே கட்டத்தில் போரில் ஈடுபட முடியாத போராளிகள் முகாமில் தனிமையில் படிப்பிக்கப்பட்டனர். பின்னர் இதனை தளபதி கருணா அம்மான் தமிழீழ தேசியத் தலைவரிடம் கூறி பின்னர் தமிழீழத் தேசியத் தலைவரின் பேரால் கல்லூரி அமைக்கப்பட்டு 11.07.2000 ஆண்டு ''தேன் நாடு ஆற்றல் மேம்பாட்டுக் கல்லூரி'' என்ற நாமத்துடன் தலைவரின் நேரடிக் கண் காணிப்பில் கேணல் கருணா அம்மானால் வழி நடத்தப்பட்டது. அங்கு ஜெயந்தன் படையணி, அன்பரசிப் படையணி போராளிகள் கல்வி கற்றனர். அதாவது அதனுடைய நோக்கம் புனிதப் போராட்டத்திலே காயமடைந்து இனி தாக்குதலில் பங்கு பற்ற முடியாது போனாலும் பின்னணியில் இருந்து கொண்டே எவ்வளவு சாதனைகளைச் செய்ய முடியும் என்றதும் அவர்களின் அறிவாற்றலை வளர்த்து எதிர் காலம் சிறந்ததாக அமைய வேண்டும் என்பதே தலைவரினுடைய நோக்கம். அதற்கமைய கேணல் கருணா அம்மானால் சிறந்த இயக்குனர் அதிபர் ஆசிரியர்கள் அமைக்கப்பட்டு செயல் வடிவம் கொடுத்தார். சிறந்த முறையில் முன்னேற்றம் அடைந்து வந்தது. ஆனால் கடலரசன் அடுத்தது என்ன செய்யப் போகிறான். என்பது இருவருக்குத்தான் தெரியும். அவனும் தலைவருக்குக் கடிதம் எழுதிக் கொண்டே இருந்தான். அவன் செய்யப் போகும் செயலை அறிந்து விடாப் பிடியாக ஊக்கமெடுத்து இரவு பகலாகப் படித்தான். அத்துடன் நிறுத்தவில்லை. அங்கு நடைபெறும் வேலைகளில் கலந்து திட்டம் கொடுப்பான் அவன் கீழ்த்தர வகுப்பு போராளிகளுக்கு விளங்காததைக் கேட்டறிந்து விளங்கப் பண்ணுவான். கல்வியின் எதிர்காலம் எந்த நிலைக்கு வரும் இதன் நன்மை என்ன? என்றெல்லாம் உணர்த்தி ஆர்வத்தை ஊட்டுவான். இவன் பிள்ளைகளைக் கண்டு யாரும் பாதிக்கா வண்ணம் அன்பினால் தண்டிப்பான். இதனால்கல்லூரி இயக்குனர் அதிபர் ஆசிரியர்கள் போராளிகள் என எல்லோர் மனங்களிலும் தனக்கென்றொரு இடத்தை அமைத்துக் கொண்டான். அப்படி அந்தக் கல்லூரியில் மணம் வீசிய மலர் ஒன்று என்றே சொல்லலாம். அதே வேளை தான் 28.10.2000ம் அன்று திடீர் பயணம் ஒன்றுக்குத் தயாராகினான். அன்று போராளிகளிடம் கடலரசன் சொன்னது ''தம்பிமாரே தங்கைமாரே நான் வேறு படிப்பிற்காக வேறு இடம் போகிறேன். நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும்.'' என்றான் இதைக் கேட்டவுடன் ஊகத்தில் கொஞ்சம் அறிந்தாற்போலாகி விட்டது. போராளிகள் விழிகள் பெருகக் கண்டான். ''நான் வேறு எங்கும் போகவில்லை.படிப்பு முடிய வந்து விடுவேன்.'' கவலைப்படாதீர்கள் என்று ஆறுதல் கூறி விடை பெற்றான். அப்படியாக சோகத்தில் நாட்கள் கடந்தன. வருவேன் என்று தான் சொன்னான். ஆனால் எப்போது என்று சொல்லவில்லை பாத்திருந்தோம். 30.10.2001ம் ஆண்டு அன்று யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரக்கர்களுக்கு எரிபொருள் ஆயுத உபகரணம் நிரப்பிய ''துன்கிந்த'' கப்பல் புறப்படுகிறது. அதே இலக்கிற்காக கடலரசன் உட்பட நான்கு கடற் கரும்புலிகள் தேசியத் தலைவர்

தொடர்ச்சி 19ம் பக்கம்

## ''தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்''



**(கோமளமைந்தன்)**

201. 1953தொடக்கம் திருகோணமலையை ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்து வரும் சிங்களக் குடியேற்றங்களின் வரிசையில் ''நாலந்தபுர'' என சில ஆண்டுகளுக்கு முன்பாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பாரம்பரியத் தமிழ்ப்பிரதேசம் எது? ''நெடுங்குடா''

202. தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தால் தமிழீழப் பெண்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து மேம்படுத்தும் நோக்கில் வெளியிடப்படும் பெண்கள் சமூக இதழின் பெயர் என்ன? ''நாற்று''

203. B.B.C வானொலி சேவை தனது 70ஆவது ஆண்டு நிறைவையிட்டு இணையத்தளத்தின் ஊடாக நடத்திய பாடல் தெரிவுப் போட்டியில் 160,000விருப்பு வாக்குகளைப் பெற்று 4வது இடத்தைத் தமிழீழ எழுச்சிப் பாடல் ஒன்று பெற்றது. ''பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது போகும் இடம் தெரியாமல்...'' என்ற இப் பாடலைப் பாடிய தாயகக் கவிஞன் யார்?
பாவலர் புதுவை இரத்தினதுரை

204. அண்மையில் மறைந்த ஈழத்தமிழறிஞரான வித்துவான் க.ந.வேலன் என்று அறியப்பட்ட கதிர்காமர் நல்லதம்பி இரத்தினவேல் அவர்களால் பல்வேறு ஆய்வுகளினூடு எழுதப்பட்டு 2000ம் ஆண்டில் இலண்டன் ''திருமுகன் அறிவகம்'' வெளியீடாக வெளியிடப்பட்ட ஈழத்தமிழர் தொடர்பான வரலாற்று நூலின் பெயர் என்ன? ''ஈழத்தமிழர் யார்?''

205. ஈழத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கூறும் பழந்தமிழ் நூல் எது?
''பட்டினப்பாலை''

206. 03.09.2000இல் தொடங்கிய நாளன்றே விடுதலைப் புலிகளின் ''ஓயாதஅலைகள்-3'' மரபுவழிச் சமரால் முறியடிக்கப்பட்ட சிறீலங்காப் படையினரின் நடவடிக்கை எது?
''ஒப்பரேஷன் ரிவிகிரண''

207. 26.09.2000இல் தென்மராட்சிப் பிரதேசத்தில் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட மண் மீட்புப் படை நடவடிக்கையின் பெயர் என்ன?
''ஓயாதஅலைகள்-04''

# காத்திரன் பதில்

**01. கே. திருமணமான பெண்களில் சிலர் குங்குமப் பொட்டை அணியாமல் ஸ்ரிக்கர் பொட்டு அணிவதையிட்டு என்ன நினைக்கிறீர்கள்?**

*திருமதி சங்கர் ஸ்ரீதேவி*
*3ம்ஒழுங்கை வேலூர் கல்லடி.*

ப. வியர்வை பட்டால் குங்குமப் பொட்டு அழிந்துவிடும் அல்லவா? கணவன் ஸ்ரிக்கர் பொட்டைப் போன்று மனைவியுடன் ஒட்டி வாழவேண்டும் என்பதற்காகவே அணிகிறார்கள் போலும.

**02. கே. ''கணவனே கண்கண்ட தெய்வம்'' எங்கிறார்கள். அப்படியானால் சுவாமிபடங்களை எடுத்துவிட்டு இவர்களின் படங்களை வணங்கலாம்தானே?**

*சிவலிங்கம் சுமதி ஏறாவூர் 04*

ப. ''மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்'' என்றும் சொல்கிறார்கள் தானே எனவே ''இறைவன்'' யார் என்பதைச் சிந்திக்கவும்.

**03. கே. காத்திரன் அண்ணா! திருமணமான பெண்களில் சிலர் சேலை கட்டாமல் பாவாடைசட்டை, தாவணிஜீன்ஸ் என்று அணிவது சரியா?**

*எம். சகானா பாண்டிருப்பு*
*கல்முனை.*

ப. ''சேலைகட்டிய மாந்தரை நம்பினால் தெரிவில் நின்று திகைப்பது திண்ணமே'' என்று ஆண் ஒருவர் பாடியுள்ளதால்த்தான் சேலைகட்டத் தயங்குகிறார்கள்.

**04. கே. காத்திரனே! காதலிக்கும் பெண்கள் பெற்றோருக்காகக் காதலனைவெறுத்து வேறு ஒருவரைத் திருமணம் செய்கிறார்களே இது முறையா?**

*மகாலிங்கம்- வித்தியாஜினி*
*பழுகாமம் 01*

ப. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாக இருப்பதால் இந்தத் தெய்வங்களின் ஆசியைப் பெற்று காதலித்தால் காதலனை வெறுக்கும் நிலை ஏற்படாது.

**05. கே. கணனியைக் கண்டுபிடித்த மானிடன் காதல் யாரால் முதலில் உருவானது என்பதை ஏன் கண்டுபிடிக்கவில்லை காத்திரனே?**

*திருமதி பிரவடிவு சதீஸ்*

*மாவடிமுன்மாரி*

ப. குரங்கில் இருந்து தோன்றிய மனிதன், குரங்கில் இருந்துதான் காதலையும் கற்றுள்ளான் என்பதற்குச் சான்று குரங்கு தாவுதைப் போன்று தான் காதலிலும் தாவுகிறார்களே.

**06. கே. சினிமா இன்று செல்லும் நிலையை உணர்ந்தும் கூட புதிதாக தமிழ் பெண்கள் சினிமா நடிகைகளாகச் சேருவதையிட்டு என்ன நினைக்கிறீர்கள் காத்திரனே?**

*த.மகேஸ் பண்டாரியவெளி*

ப. காசுக்காக எந்தநிலையானாலும் கவலைஇல்லை என்பதுதான் இந்தக் காவாலி" நடிகைகளின் குறிக்கோள்.

**07. கே. அரசியல் வாதியின் ''செல்''லையும், குரங்கின் ''செல்'' லையும் இணைத்து ''க்ளோனிஷ்'' செய்தால் என்ன கிடைக்கும்?**

*திருமதி.தினா, மஸ்கேலியா*

ப. ''பச்சோந்தி'' கிடைக்கும

**08. கே. அண்மையில் வெளியான சர்ச்சைக்குரிய ''பாய்ஸ்'' திரைப்படத்தைப் பற்றி என்ன நினைக்கிறீ காத்திரனே?**

*க.முகந்தன் மண்டூர் 01*

ப. கதைசிறப்பாக இருந்தாலும், காட்சி அழுக்காக இருக்கிறது.

**09. கே. மூத்ததளபதி கேணல் கருணா அம்மான், அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அடங்கியகுழுவினர் அயர்லாந்துக்குச் சென்றமை பற்றி சொல்லுங்கோவன்?**

*சிபவானி கொத்தியாபுலை*

ப. சிறிலங்கா அரசுக்கு சிறுபான்மை மக்களின் உரிமை பற்றிப் பாடம் புகட்டுவதற்காகத்தான் சென்றார்கள்.

**10. கே. காதலித்த பெண் கைவிட்டால் முடிவு என்ன காத்திரனே?**

*த.லோகிதன் 2ம்வருடம் கலைப்பீடம்*
*கி.ப.கழகம்- வந்தாறுமூலை.*

ப. காதலுக்கு முடிவே இல்லை ''பெண்'' கைவிட்டாலும் ''மண்'' கைவிடாது தம்பி.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**

எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

# புனித நாட்களில் ஒரு நாள்....

அண்ணாவிடம் இருந்து விடைபெற்று கடற்கரைக்கு சென்றனர் அவர்களுடைய நீண்ட தூரமான கனவு இன்று நிறைவேறப் போகுதே என்ற மகிழ்ச்சி இறுதியாக கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அண்ணா போராளிகளிடமும் விடைபெற இலக்கும் நேரமும் சரியாக வர கடற்புலிகளால் இடைமாதிக்கப்பட்டு உக்கிர சமர் நடைபெற அதே கணம் கடல் அன்னையின் துணையுடன் பருத்தித்துறைக் கடலில் வைத்து மோதி இடியாய் முழக்குகிறது. எந்த இடியைக் கொடுத்தானோ அதை விட மேலாகத்தான் இன்று கொடுத்தான் மேஜர் கடலரசன். ஆனான் இந்த தெய்வீகப் புதல்வர்களின் மேனி செந்தணலாய் அலைக்குள்ளும் அணல் ஒளி உயர்ந்தது. வேங்கைகளின் முகங்கள் காட்சி அழித்தது. 31.10.2001 அன்று வெற்றிச் செய்தியும் திருமுகங்களும் ஈழநாதம் பேப்பர் தாங்கி வலம் வந்தது. இதைக் கண்டவுடன் கல்லூரி சோகத்தில் மூழ்கியது. மறுபுறம் கல்லூரி முதல் கரும்புலி என்ற நாமத்தை ஏந்தினாய் என்ற திடமும் இருந்தது. ஆனால் ஆறுதல் கூறியவன் எங்கே என்று தேடுகிறோம். இன்று அவன் இல்லை. காற்றோடும் கடலோடும் காவியமானான். இந்தப் புனித நாளை தமிழனாகிய நாம் தலை சாய்த்து வணங்குவோம் 240 தெய்வீகப் புதல்வர்களில் கடலரசனும் ஒருவன். மறவர்களே உங்கள் கனவு விரைவில் நனவாகும் என்பதில் ஐயமில்லை.

தமிழர் வாழ்வில் அன்று போல் இன்றும் என்றென்றும் போற்றப்படுவீர்கள். எங்கள் தலைவர் தமிழீழம் அமைத்துத் தருவார். அது வரைக்கும் கண் மூடித் தூங்குங்கள். ''சோகங்களும் துன்பங்களும் எம்மைச் சூழ்ந்து வரும். அதற்காக நாம் அடிமையாக முடியாது'' அதைத் தான் தலைவர் சிந்தனை இவ்வாறு கூறுகின்றது. ''நாம் உயிருக்குயிராய் நேசித்த தோழர்கள், எம்மோடு தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நாம் பல்லாண்டு காலமாக வழர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழும் பொழுதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் நாம் சோகத்தால் சோர்ந்து போகவில்லை. இந்த இழப்புக்கள் எமது இலட்சிய வேட்கைக்கு மேலும் உரமூட்டுகின்றது.'' ஆம் இதை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு விடிவு வரும் வரை தொடர்வோம். உம் பணி அது வரைக்கும் தலைவர் பதிலைக் காத்திருப்போம்.

# இந்திய-அமெரிக்க..

இயங்குகிறதே தவிர அதிகாரங்கள் அத்தனையும் முஷா ரப்பின் கையில் தான் உள்ளன. ராணுவ தலைமை பதவி, அரசியல் சட்டதிருத்தங்களைக் கொண்டுவரும் அதிகாரம் அத்தனையும் முஷாரப்பின் கையில் தான் உள்ளன.

பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பு ஏற்று முஷாரப் நேற்றுடன் நான்கு ஆண்டுகள் முழுமையாக முடித்து விட்டார் இன்று அவர் 5ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறார். அவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிகிறது அப்போது அவர் தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வாரா? அல்லது பாகிஸ்தானில் புதிய திருப்பம் ஏற்பட்டு பாராளுமன்றத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படுமா என்பது தெரியவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சுடன் நல்லுறவு வைத்துக் கொள்வதுபோல காட்டிக் கொண்டு தீவிர வாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தனது அரசு எடுத்து வருவதாக முஷாரப் கூறிவருகிறார். ஆனால் இந்தியாவுடன் எதிரான எல்லை தாண்டிய பயங் கரவாதத்தை நிறுத்த மட்டும் மறுக்கிறார்.

பாகிஸ்தானுக்கு தக்கபதிலடி கொடுக்க இந்தியா தயாராக உள்ளது. இதை ராணுவ அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தாத வகையில் பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

எனவே எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்தாத வகையில் கார்கில் போன்றதொரு பேரை முஷாரப் சந்திக்க நேரிடும். எனவே இந்தியா விஷயத்தில் முஷாரப் அஞ்சி நடுங்கி வருகிறார்.

அதனால்தான் இந்தியா ஒரு ஏவுகணைச் சோதனை நடத்தினால் பாகிஸ்தானும் போட்டியாக ஒரு ஏவுகணை சோதனையை நடத்தி வருகிறது.

அதுமட்டுமல்ல அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து இந்திய கடற்படையினர் அண்மையில் கொச்சியில் நடத்திய கூட்டு போர் பயிற்சியும் பாகிஸ்தானுக்கு கிலியை ஏற்படுத்தியுள்ளது.

# நூல் விமர்சனும் கவிதேசம்




கவிதேசம் இதழ் 04மலர் 02 (யூன், யூலை மாதங்களுக்குரியது) கிடைக்கப் பெற்றோம்.

ஏற்கனவே பத்திரிகை, ,சஞ்சிகைகளிலும் தனிப்பட்ட முறையிலும் வெளியான பல ஆக்கங்கள் கவிதேசத்தில் வெளிவந்திருக்கின்றன.

புற்றீசல் போல கவி

**மிதுனன்**

தைகள் நாலா பக்கங்களிலுமிருந்து வெளிவரும். இக் கால கட்டத்தில் கவி தேசத்திற்கு இந்த மறுபிரசுர வேலை தேவைதானா என்று கேட்க்த் தோன்றுகிறது.

கணனி அமைப்பு அட்டைப் படக் கவிதையாவும் அலங்காரமாயிருக்கின்றன. கவிஞர் காசி ஆனந்தன் தொடங்கி கல்லடி கதிர்காமு வரை யாவுமே ஏலவே பார்த்து ரசித்த விடயங்கள் தான். இதைக் கவி தேசம் ஞாபகப் படுத்த வேண்டியதில்லை.

இதை விடுத்து கவி தேசம் புதிய ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்து கவிதை உலகில் தனியான இடத்தைப் பிடிக்கவேண்டும் என்று தமிழலை எதிர் பார்க்கிறது.



மட்டக்களப்பு மாவட்ட உயர் கல்வி மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிகளை அதிகரிக்க வேண்டுமெனக் கோரி நேற்றுக் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மட்டுநகர் காந்தி சதுக்கத்தில் கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)

# அலையின் பார்வையில்






அண்மையில் மட்/லயன்ஸ் கழகம், விழப்புலனற்றோர் பாடசாலை (தரிசனம்), கிழக்கிலங்கை விழிப்புலனற்றோர் சங்கத்துடன் இணைந்து நடாத்திய வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வில் ஒரு சில காட்சிகள்.....

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் யு. மனோஷ்**

**22.10.2003**

அக்கரைப்பற்று 8ஐச் சேர்ந்த யுவேந்திரா (கவியுவன்)-கவிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மனோஷ் 22.10.2003 அன்று தனது முதலாவது பிறந்தநாளை தனதில்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா, அப்பா, அக்கா சகானா, அண்ணா நிலாவாசன், அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், பாட்டிமார், மனோ அன்ரி, மற்றும் உறவினர்களும் நண்பர்களும் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி அருள் பெற்று பண்புடன் மாண்புற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

பிரதேச செயலக முன்தெரு, சாகாம வீதி, அக்கரைப்பற்று- 08.

தரமான முறையில் உங்கள்
அச்சுப்பதிப்புக்களுக்கு
**நித்தி பதிப்பகம்**
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை

**நீங்கள் எங்களை நாட உலகம் உங்களை நாடும்**

சகலவிதமான போட்டோக்கொப்பி ரோனர்ஸ், பிரிண்டர்களுக்குரிய காட்றிஜ் போட்டோக்கொப்பி பேப்பர், கம்பியூட்டர் உதிரிப்பாகங்கள் அனைத்திற்கும்

**Mayura Business Solutions**

**No: 230 Trinco Road, Batticaloa**

Tel/Fax : 065-2224821, E-Mail;- Mayurabt@Sltnet.lk

கீழ் வருவனவிற்கான
அதிகாரமளிக்கப்பட்ட
முகவர்களும்
விநியோகஸ்தர்களும்.

TOSHIBA
FUJICOOL
IMATION
brother
PROLINK



இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 18.10-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.